கல்கி

KALKI 16.6.91
ரூ. 2.50

முத்துப்பல் வரிசையை எப்படிப் பெறுவது?

அழிக்கப்பட்டு வரும்
வனச் செல்வங்கள்

சாப்பிட எதுவுமே வேண்டாமென்றால் சரிவர அவன் வளர்வது எப்படி?

ஆம். சரியாக சாப்பிடாமல் இருப்பது குழந்தையின் வளர்ச்சியை பாதிக்கலாம்.

சரியாக சாப்பிடாமலிருக்கும் குழந்தை தனது உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்கள் அனைத்தையும் முழுமையாகப் பெறுவதில்லை. இப்பற்றாக்குறை அவனது வளர்ச்சியை பாதிக்கக் கூடும். அவனுக்கு அளிப்பீர் காம்ப்ளான். அவன் இழந்த ஊட்டத்தைப் பூர்த்தி செய்ய காம்ப்ளான் உதவுகிறது. குழந்தையின் வளர்ச்சிக்குத் தலைசிறந்த புரதமாகிய பால் புரதம் 20% மற்றும் உடலுக்குத் தேவையான 22 அத்தியாவசியமான ஊட்டச்சத்துக்கள் அடங்கியதாகும் காம்ப்ளான்.

காம்ப்ளான் நாவிற்கினிய
5 சுவைகளிலே கிடைக்கிறது.

காம்ப்ளான்®
திட்டமிட்ட பரிபூரண உணவு.

GX/27/203 TAM

சிம்மமாய் மாறுவாரா சாது நரசிம்ம ராவ்?

வரம்பு கொண்டு வந்து விடப் போகிறாரோ என்ற அச்சத்தில், ஆந்திர கடற்கரையோரப் பகுதிகளைச் சேர்ந்த ரெட்டி வகுப்பினரான நிலக்கிழார்கள், அவரை எதிர்த்துக் கிளர்ந்து எழுந்தார்கள்.

வெங்கரா, கரீம்நகர் மாவட்டத்தைச் சேர்ந்த ஊர். அங்கே உள்ள விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர் நரசிம்மராவ்.

ஒரு மாநிலத்துக்கு முதல்வராயிருந்தும், அதிக நாட்கள் தில்லியிலேயே தங்கியிருந்து ஆட்சி நடத்தியவர் யார்? பிரச்னை எதுவானாலும், முடிவே எடுக்கத் துணியாமல் தடுமாறிய தலைவர் யார்? - இந்தக் கேள்விகளுக்கு எல்லாம் ஒரே பதில்: பி. வி. நரசிம்மராவ் என்பார்கள், அவரை நன்கு அறிந்தவர்கள்.

சுமார் இருபது வருடங்களுக்கு முன் ஆந்திர அரசியலை விட்டுத் தில்லிக்கு வந்தவர். 71-ல், தனித் தெலுங்கானா கிளர்ச்சியாளர்களின் பிடியில் சிக்கித் திக்கு முக்காடிக் கொண்டிருந்த அன்றைய முதல்வர் பிரம்மானந்த ரெட்டியை நீக்கி விட்டு, நரசிம்மராவை முதலமைச்சராக்கினார் இந்திரா காந்தி. அந்த விசுவாசமோ என்னவோ, இந்திராஜியைக் கலந்தாலோசிக்க, வாரத்தில் மூன்று - நான்கு நாட்கள் கூடத் தில்லியிலேயே டேரா போட்டவர் பி. வி. என். 73 - ல் ஜனாதிபதி ஆட்சி அமல் செய்யப்பட்டது வரை ஆண்ட நரசிம்ம ராவின் பதவிக் காலம் அப்படியொன்றும் குறிப்பிடத்தகுந்ததாய் இருக்கவில்லை. இத்தனைக்கும் 72 தேர்தலில், அதிகபட்ச வாக்காளர் வோட்டுப் போட்டு, அதிகமான இடங்களைப் பெற்றது காங்கிரஸ்!

சாதாரணமாகவே ரெட்டி - ஆதிக்கம் மிகுந்த ஆந்திர அரசியலில், நரசிம்மராவ் ஒரு முக்கிய இடத்தைப் பிடித்தது வியப்பானதுதான். அந்தத் தேர்தலின் போது, பின்தங்கிய வகுப்பினருக்கு அதிக இடமும், முக்கியத்துவமும் அவர் கொடுத்தது, அதுவரை பின்பற்றப்படாத ஒரு மரபாய் இருந்தது. ஆனால் அவர் எங்கே நிலஉச்ச வழக்கறிஞர். ஆனால் அரசியலில் முழு மூச்சோடு ஈடுபட்டதால், வழக்கறிஞர் தொழிலை உதறி விட்டார். 52-ல் முதன் முதலாக கரீம் நகர் நாடாளுமன்றத் தொகுதிக்கு நின்று, கம்யூனிஸ்ட் வேட்பாளரிடம்

தோற்றுப் போனாலும், 57 -ல் மந்தாவி அசெம்பிளி தொகுதியில் வெற்றி பெற்று, தொடர்ந்து இருபது வருடங்கள் அந்தத் தொகுதியின் பிரதிநிதியாகவே இருந்து வந்தார். சட்டம், கல்வி, சுகாதார அமைச்சராகப் பல ஆண்டுகள் பணியாற்றினார் நரசிம்மராவ். 75 - 76ல் இ. காங்கிரஸ் பொதுச் செயலாளராக இருந்து, இரண்டாம் நிலையில் தம்மால் கெட்டிக்காரத்தனமாகப் பணியாற்ற முடியும் என்று நிரூபித்தார். 77-ல் ஜனம்கொண்டா நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர், 84-ல் பி. ஜே. பி. யிடம் தோற்றுப் போய் விட்டார்.

நரசிம்மராவ் ஒரு பன்மொழிப் புலவர். ஸ்பானிஷ், பிரெஞ்சு எல்லாம் கூடத் தெரிந்தவர். ஞானபீடப் பரிசு பெற்ற விசுவநாத சத்தியநாராயணாவின் 'வேயி பத்துலு' காவியத்தை இந்தியில் மொழிபெயர்த்திருக்கிறார். நவோதயா பள்ளிகள் துவங்க வித்திட்டவரே நரசிம்மராவ்தான் என்றாலும், அவருடைய மாநிலத்திலேயே இதை நம்புபவர்கள் குறைவுதான்!

நரசிம்ம ராவின் நிறமை எது? கட்சிக் கொள்கைகளைத் தெளிவாக எடுத்துரைப்பது; அறிக்கைகள் தயாரிப்பது; தேர்தல் அறிக்கைகள் உருவாக்குவது- இவை மட்டுமே என்கிறார்கள். ஆனால் தம்முடைய மாநிலத்திலேயே கூடத் தமக்கென்று ஒரு குழுவையோ கோஷ்டியையோ உருவாக்கிக் கொள்ளாத அப்பாவி என்றும் இவரைச் சொல்லுகிறார்கள்.

வி. பி. சிங் மகன், செயின்ட் கிட்ஸ் வங்கியில் கோடிக்கணக்கில் டாலர்கள் ரகசியமாகச் சேர்த்து வைத்திருக்கிறார் என்ற புனை சுருட்டை நம்ப வைக்க, சந்திரா சுவாமி - மாமாஜி கும்பல் முயன்ற போது, வெளியுறவுத் துறை அமைச்சராயிருந்த நரசிம்மராவ், நியூயார்க் சென்று, தூதரக அதிகாரியிடம் போலித் தஸ்தாவேஜுகளில் சான்றுக் கையெழுத்திட வற்புறுத்தியது சமீபத்தில் சி. பி. ஐ. வெளியிட்ட சரித்திரம். யார் கைப்பாவையாக வேண்டுமானாலும் ஆகி, ஆடி விடுவார் என்பதைப் பல நிகழ்ச்சிகள் சுட்டிக் காட்டியிருக்கின்றன.

தனிநபர் அரசியல் சார்ந்த மல்லர்களான போடேதார், தவான் போன்றவர்களிடம் நரசிம்மராவ் போன்ற சாதுவான நபர்கள் தாக்குப் பிடிக்க முடியுமா; இல்லை இவர்களிடம் சிக்கித் தத்தளிப்பாரா என்பதை இனிமேல்தான் பார்க்கப் போகிறோம்!

- சித்தார்த்.

ரஞ்சிக் கோப்பை இறுதிச் சுற்றுக்கு இவரைத் தேர்ந்தெடுத்த போது, நிறையவே சர்ச்சைகள் இருந்தன. புதியவரான இவரை எப்படி எடுக்கலாயிற்று என்று பாய்ந்து வந்தனர் பல பம்பாய்க்காரர்கள்...

ஆறடி ஐந்தங்குல உயரம்; மிக அதிக தூரம் ஓடி வராததொரு 'ரன்-அப்'; தோள் உயரம் எழும்பி, எதிராளியை நடுங்க வைக்கும் வேகப்பந்து வீச்சு! இவை அனைத்தும் கொண்ட 22 வயது இளைஞர்தான் இந்தியக் கிரிக்கெட் வானின் புதிய தாரகை!

'கபிலுக்குப் பின் இந்திய அணிக்கு யார்?' என்பவருக்கு ''இதோ நான் இருக்கிறேன் அப்பா குருவில்லை'' என்கிறார் இந்த பம்பாய் கிரிக்கெட்காரர். கேரளத்தைச் சேர்ந்தவராயினும், பம்பாயிலேயே பிறந்து வளர்ந்து, இங்கேயே படித்து வரும் அப்பா, ஒரு எலெக்ட்ரானிக் என்ஜினியர்! விளையாட்டைப் போலவே படிப்பிலும் அசத்துபவர்!

அண்மையில் ஹரியானாவுக்கும், பம்பாய்க்குமிடையே நடந்த ரஞ்சிக் கோப்பை இறுதியாட்டத்தில், தங்களது அபார ஆட்டத்தினால் நம்மை இரு அணிகளைச் சேர்ந்தவர்களுமே பிரமிக்கச் செய்தாலும், அவர்களில் அப்பாவின் பங்கு மிக அதிகம்! தமது அபார 'பௌலிங்' திறனால் ஐந்து விக்கட்டுகளை வீழ்த்தி, பேட்டிங்கிலும் வெங்க்ஸார்க்கருடன் சேர்ந்து நிறம்பட ஆடி, ஒரு சாதனை படைத்தவர் அப்பா!

பம்பாய் கிரிக்கெட் அசோஸியேஷன், மஃபத்லால் இன்டஸ்டிரீஸோடு இணைந்து, வேகப் பந்து வீச்சாளர்களுக்குப் பயிற்சி கொடுக்க நடத்தும் கிட்டத்திற்கு அப்பா தம் உயரத்தாலும், வேகப் பந்து வீசும் திறனாலும் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிரபல ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் ஃப்ராங்க் டைசன்தான் இவர்களது 'கோச்.' டைசனிடம் இரு மாதங்கள் பயிற்சி எடுத்தது குருவில்லாவுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது! டைசன் இவரைப் பற்றிக் கூறும் போது, ''இந்த இளைஞர் மிக விரைவாகக் கற்றுக் கொள்கிறார். இவருக்கு மிகச் சிறந்த எதிர்காலம் உண்டு. தகுதிப்படி

அபய் குருவில்லாவின் அபார கிரிக்கெட்!

- திறமைப்படி பார்த்தால் எந்த முதல் டிவிஷன் ஆஸ்திரேலிய இளப்பும் இவரைத் தேர்ந்தெடுக்கும்'' என்றார்!

ஆயின், ரஞ்சிக் கோப்பை இறுதிச் சுற்றுக்கு இவரைத் தேர்ந்தெடுத்த போது நிறையவே சர்ச்சைகள் இருந்தன! 'பல நாட்களாகக் காத்திருக்கும் பலரை விட்டு விட்டு, முற்றிலும் புதியவரான இவரை எப்படி எடுக்கலாயிற்று?' என்று பாய்ந்து வந்தனர் பல பம்பாய்க்காரர்கள்! ஆயின் நரேன் தம்ஹானே, ஷிஷர், ஹட்டங்காடி போன்ற முன்னாள் கிரிக்கெட் வீரர்கள், தங்கள் முழு நம்பிக்கையையும் குருவில்லாவின் மீது வைக்கத் தயங்கவில்லை! பம்பாய் அணியின் பன்னிரண்டு பேரில் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் கடைசி பதினொரு பேரில் இவருக்கு இடம் உண்டா? என்பது கேள்விக்குறியாகவே இருந்தது. சாதாரணமாக முதன் முதலில் கிரிக்கெட் அணியில் நுழைபவர்கள் பன்னிரண்டாவது ஆட்டக்காரராக 'ட்ரிங்க் டிராலி'யைத் தள்ளிய பிறகுதான் ஆட்டக்காரராகக் களத்தில் பிரவேசம் செய்வது வழக்கம்! ''கழல் பந்து வீச்சுக்காரர் இரண் மொகாஷியாவா, வேகப் பந்து வீச்சாளர் அபய் குருவில்லாவா? யார் உங்கள் இறுதி அணியில் இருப்பார்கள்?'' என்று பம்பாய் அணியின் கேப்டன் மஞ்ச்ரேக்கரைக் கேட்ட போது, ''பொறுத்திருந்து பாருங்கள்'' என்றுதான் சொன்னார். ஆனால், அபய்யின் சில பந்துகளை ஆடிப் பார்த்த பிறகு, அவருக்குச் சந்தேகமே யில்லை!

அணியில் இடம்பெற்ற குருவில்லா முதல் நாளே தம் திறமையைக் காட்டி விட்டார்! நுழைவு பேட்ஸ்மேன் தன்ராஜ்சிங் இவரது 'இன்ஸ்விங்கரை ஆடத் திணறி 'அவுட்'டானார்! குருவில்லாவின் பந்து வீச்சு; ஒரே விதமாக இல்லாமல் பலவித மாற்றங்கள் உடையது! இதனால் ஒவ்வொரு பேட்ஸ்மேனையும் திணற வைத்தது. புகழ்பெற்ற ஆட்டக்காரரான ஜடேஜா போன்றவர்களையும் 'அவுட்'டாக்கியது.

பந்து வீச்சில் மட்டுமின்றி கபில், சேதன் சர்மா போன்ற திறமை வாய்ந்த பந்து வீச்சாளர்களுக்கு எதிராக ஆடி, அழகாக 'பேட்' செய்து, தாம் ஒரு 'நம்பத்தக்க ஆட்டக்காரர்' என்றும் காட்டினார் அபய்!

இன்றைய இந்திய கிரிக்கெட்காரர் களிடையே மஞ்ச்ரேக்கர், டெண்டுல்கர் போன்றவரிடையே இவரது வருகை ஒரு புது நம்பிக்கையைக் கொடுத்திருக்கிறது! இந்திய அணியில் இவருக்கு ஒரு பிரகாசமான எதிர்காலம் நிச்சயம் உண்டு!

- ராஜீவி நரசிம்மன்



முத்துப்பல் வரிசையை எப்படிப் பெறுவது?

"பல் சொத்தையாகி விட்டது என்றால் பாதிக்கப்பட்ட பல்லையே எடுத்து விடுவார்கள், முன்பு. இப்போது அப்படி அல்ல. நவீன முறைச் சிகிச்சையில், பாதிக்கப்பட்ட பல்லையே சீராக்கி, வலுவூட்டி, நிலைக்கச் செய்து விடுகிறோம்!" என்கிறார் டாக்டர் பரமேசுவரன். இதை அவர் கற்றுக் கொண்டது டாக்டர் மார்ஜூக் என்ற அமெரிக்கரிடமிருந்து.

"ஏழு வருடங்களுக்கு முன் ஒரு நண்பர், கண்ணாடிச் சுவரில் அரைத்தையாக இடித்துக் கொண்டு, முன் இரண்டு பற்களை இழந்தார். ஆனால் அதிர்ஷ்டவசமாகக் கீழே உடைந்து விழுந்த பற்களை அப்படியே பத்திரமாக எடுத்துக் கொண்டு வந்தார். அதையே பலப்படுத்தி, அவருக்குப் பொருத்த முடிந்தது. இப்போதும் அவர் வருடா வருடம், அந்தக் குறிப்பிட்ட நாளில் எனக்கு ஃபோன் செய்து வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார்.

"முதல் சிகிச்சையை 'ரூட் கனால் ட்ரீட்மென்ட்' என்றும், இரண்டாவதை 'காஸ்மெடிக் டென்டிஸ்ட்ரி' என்றும் சொல்லுகிறோம்."

இப்படி அதிசயமான தகவல்களைத் தரும் டாக்டர் பரமேசுவரன் பல் சொத்தை யாவதற்குக் காரணங்களையும் கூறுகிறார்:

"பற்சிப்பி தாக்கப்பட்டு, பிறகு தந்தினி தாக்கப்பட்டு, வேருக்குள் ஊடுருவிச் சென்று தாக்குவதுதான் பற்சொத்தை வியாதி. ஊறி, புளித்துப் போகும் தன்மையுள்ள கார்போஹைட்ரேட் உணவு வகைகள், துணுக்குகளாகப் பற்களிடையே தங்கி, இம் மாதிரி பற்சொத்தைகளை விளைவிக்கின்றன. சர்க்கரைப் பதார்த்தங்கள், சாக்லேட்டுகள் இவைதாம் பற்களின் மிகப் பெரிய விரோதி."

"பற்களை எப்படிப் பாதுகாக்க வேண்டும்?"

"பொதுவாக, பற்கள் சுத்தமாக இருத்தல் அவசியம்; காலை, இரவு என இரு முறைகளும் பிரஷ் கொண்டு பல் துலக்கி, சுறையும் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும்.

"பிரஷ் பண்ணும் போது, சுறவிருந்து பல்லுக்கு வர வேண்டும். பிரஷ்ஷைச் சரித்தாற் போல் பிடித்துக் கொண்டால் சுறில் குத்தாமல் இருக்கும். பிரஷ்ஷில் அழுத்தம் கொடுத்து, உருட்டு முறையில் தேய்க்கும் போது, குச்சென் எல்லாம் பல் இடுக்கிலும் நுழைந்து, சுத்தம் செய்கின்றன. மேல் வரிசைப் பற்களைத் தேய்க்கும் போது,

◆ டாக்டர் பரமேசுவரன்

மேலிருந்து கீழாகவும் கீழ் வரிசைப் பற்களைக் கீழிருந்து மேலாகவும் தேய்த்து விட்டு, உள் பகுதியையும் அவ்வாறே பிரஷ் செய்த பிறகு, பற்களின் நுனியிலுள்ள மேல் பாகத்தையும் பிரஷ்ஷால் சுத்தம் செய்ய வேண்டும். பிறகு, சிறிது டூத் பேஸ்ட்டை எடுத்து ஈறுக்கு மஸாஜ் செய்ய வேண்டும். தண்ணீர் விட்டு வாய் கொப்பளிக்கும் போது டூத் பேஸ்ட் நுரையுடன் வாய் சுத்த மடைந்தால் தனியே மவுத் வாஷ் என்று தேவையில்லை. அப்படித் தேவை என்று தோன்றினால் சாதாரண உப்பைச் சிறிது எடுத்து, மிதமான சூட்டில் இருக்கும் தண்ணீரோடு கலந்து, வாயை நன்கு கொப்பளித்து அலம்பினால் போதும்.''

''முத்துப் பல் வரிசை எல்லோருக்கும் சாத்தியமா?''

''பெற்றோரின் வாய்ப் பகுதி அமைப்பைப் பொறுத்தே பெரும்பாலும் இது அமைகிறது. குழந்தைக்குச் சிறிய தாடை இருந்து, நெருக்கமான பற்கள் உருவாகும் போது, வரிசை பிறழ்ந்து கூட்டமாகப் பற்கள் அமையலாம். பன்னிரண்டு வயது வரை, இதுபோன்ற குறைபாடுகளைக் குறைக்க உதவுகிறோம். இதை சீரியல் எக்ஸ்ட்ராக்ஷன் முறை என்போம். பன்னிரண்டு வயதில் கோரைப் பல் முளைத்த பிறகு, முறைப்படுத்த ஆரம்பிக்கிறோம்.

''இந்த முறைப்படுத்துதலை இரண்டு விதமாகச் செய்யலாம். ரிமூவபிள் அப்ளயன்ஸ் ஒரு வகை. வாய்க்குள் கம்பியைக் கொடுத்து, பற்களின் வரிசை மேல் இறுக்கமான வலை போலப் போட்டு விடுவோம். இதைக் கழற்றி, அலம்பி வைக்கலாம். இன்னொன்று ஃபிக்சட் அப்ளயன்ஸ். முன்னதை இரண்டு வருடங்கள் தொடர்ந்து போட்டுக் கொள்ள வேண்டும் என்றால், இதை ஒன்பது மாதங்கள் முதல் ஒரு வருடம் வரை போட்டுக் கொண்டால் போதும். சிறு பிராக்கெட்டுகள் மாதிரி பல்லின் மீது ஒட்டவைத்து விடுவோம். நவீன முறைப்படி காம்போசிட் எனப்படும் ஒருவகைப் பசை கொண்டு, கம்பியை இந்தக் குறிப்பிட்ட காலத்துக்கு நிரந்தரமாகப் போட்டு விடுவோம்.

''பெற்றோருக்கும் சில கடமைகள் உண்டு. குழந்தை விரல் சூப்புவது, நாக்கைப் பற்களிடையே விட்டு வெளியே அடிக்கடி துருத்துவது போன்ற பழக்கங்களை ஆரம்பத்திலேயே தடுத்து விட வேண்டும்.''

''பற்களைச் சிறியதாக்க முடியுமோ?''

''ஓரளவுக்கு மட்டுமே பாதுகாப்புக்கு உட்பட்ட வரையறையோடு, கிரைண்டிங் முறையில் தேய்த்துச் சிறிதாக்கலாம்.''

''சிலருக்குப் பற்களிடையே சற்றுக் கூடுதலான இடைவெளி இருக்கிறதே?''

''முன்பெல்லாம் இதை அப்படியே விட்டு விடுவார்கள். சிலர் இப்படி இடைவெளி இருப்பதை அதிர்ஷ்டம் என்று கருதுகிறார்கள். தற்போதைய முறைப்படி, இந்த 'டயஸ்டிமா' கோளாறைச் சரிசெய்ய நாங்கள் 'காம்போசிட்'டை உபயோகிக்கிறோம். இயற்கையான பற்களைப் போலவே இதை அமைக்க முடியும்.'' (அமெரிக்க நிபுணரான போவன் என்பவர்தான், இதை நடைமுறைக்குக் கொண்டு வந்த அத்தாரிட்டி என்பார்கள்.)

''ஏழாம் மாதத்தில் பல் வெளிவருவதில்லை என்றால், கிராமப்புறங்களில் எல்லாம், நெல்லால் தேய்த்து விடுவார்களே?''

''இது நல்லதல்ல. டாக்டரிடம் போய் அறுவைச் சிகிச்சை மூலம் இதைச் செய்வதே பாதுகாப்பானது.''

''டூத் பேஸ்ட்கள் விஷயத்தில் எதை உபயோகிக்கலாம்?''

''விதவிதமான விளம்பரங்களைத் தினமும் பார்த்துப் பார்த்து, இது நல்லதா, அது நல்லதா என்று குழம்புவோர் உண்டு. எல்லா டூத் பேஸ்ட்டுகளும் ஒரே மாதிரியானவைதாம். எப்படி ஷேவ் செய்து கொள்ளும் போது, சொரசொரப்பான



வாயிலுள் தெரியும் பற்களின் பாகம் பல் சிகரம் (கிரௌன்). பற்சிப்பி (எனாமல்) என்பது பற்களின் வெளிப்புறத்தில் அமையும். இத்தப் பற்சிப்பிதான் உள்ளே இருக்கிற தந்தினியை (டென்டைன்) முழுமையாக மூடி கிறது. பற்களின் நடுப்பாகத்தில் அமைந்துள்ளது பற்கூழ்க் குழி (பல்ப்). இவை தவிர, ஒவ்வொரு பல்லுக்கும் வேர்கள் உண்டு. இந்த வேர்கள், பற்கள் தாடையுடன் இறுக்கமாக இருக்க உதவுகின்றன.

சருமத்தின் மீது பிளேடு கலபமாக இயங்க ஷேவிங் க்ரீம் அல்லது சோப் உபயோகிக்கிறோமோ, அதே போல, பற்களின் மீது பிரஷ் கலபமாகத் தடையின்றிச் சுழன்று இயங்கப் பற்பசை தேவை.

''அவ்வளவுதானா?' என்று கேட்கலாம். பற்பசையில் பற்சிதைவைத் தடுக்கும் ஃப்ளோரைடைச் சேர்க்கலாம். இப்போது, பற்கள் கூசாமல் இருக்க, பொட்டாசியம் நைட்ரேட் சேர்க்கப்பட்ட பற்பசை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. இம்மாதிரி தேவைப்படும் போது பற்பசையின் பணியை அதிகரிக்கலாம். மற்றபடி நாம் பிரஷ் கொண்டு எந்த அளவுக்குப் பற்களின் இண்டு இடுக்குகளிலெல்லாம் துலக்கிச் சுத்தப்படுத்துகிறோம் என்பதைப் பொறுத்துத்தான் பற்களின் பாதுகாப்பும் உறுதியும் அமைகிறது. இதற்குச் சாதாரணப் பற்பசையே போதும்.''

''மஞ்சள் நிறப் பற்களுக்கு மாற்றுக் கிடையாதா? இதற்கு என்ன காரணம்?''

''குடிக்கும் தண்ணீரில் கூடுதலான ஃப்ளோரைடு இருந்தால் இப்படி மஞ்சள் நிறம் வரலாம். சாதாரணமாக ஒரு பி. பி. எம். இருக்க வேண்டிய ஃப்ளோரைடு, சில பகுதிகளில் 40 முதல் 120 பி. பி. எம். வரை தண்ணீரில் இருக்கிறது. ஆந்திரா, ராஜஸ்தான், தமிழ்நாட்டில் சேலம் ஆகிய சில குறிப்பிட்ட பகுதிகளில், தண்ணீரில் கூடுதலான ஃப்ளோரைடு இருப்பதாக ஒரு தகவல் தெரிவிக்கிறது. தவிர, குழந்தைகள் டெட்ராசைக்ளின் மருந்து உட்கொள்ளுவதும் அல்லது கர்ப்பமுற்றிருக்கும் தாய்மார்கள் டெட்ராசைக்ளின் மருந்து உட்கொள்ளுவதும் இவ்வகை மஞ்சள் நிறப் பற்கள் குழந்தைக்கு அமையக் காரணமாகி விடுகிறது.''

''பற்களை எப்போது மருத்துவரிடம் சென்று சுத்தம் செய்து கொள்ள வேண்டும்?''

''வருடத்துக்கு ஒருமுறை. அப்படிச் சுத்தம் செய்து கொண்டால் பற்கள் கூசும் என்று பலர் நினைக்கிறார்கள். இப்போது அல்ட்ராசோனிக் வைப்ரேஷன் முறையில் தான் சுத்தம் செய்கிறார்கள். அதனால் அந்தப் பயம் வேண்டாம். எனாமல் போகாது.''

''உடலின் வேறு பாகங்களில் வலி தோன்றி, எல்லாப் பரிசோதனைகளும் எதுவும் காரணம் காட்டாத போது, மருத்துவர் பல் டாக்டரிடம் காண்பிக்கச் சொல்லுவார். அது எதற்கு?''

''கடுமையான இருமித் தொற்றுப் பற்களைப் பாதிக்கும் போது, அது உடலின் வேறு பகுதிகளிலும் வலியைத் தோற்றுவிக்கும் வாய்ப்பு இருக்கிறது. இதை ஃபோகல் செப்ஸிஸ் என்பார்கள். அதி நவீன சிகிச்சை முறைகள், பற்கள் பாதுகாப்பிலும் மருத்துவத்திலும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன. அறிவியல் முன்னேற்றம் இதற்கு வெகுவாக உதவுகிறது'' என்கிறார் சென்னை, பல் மருத்துவக் கல்லூரிப் பேராசிரியர் டாக்டர் பரமேசுவரன்.

– சாருகேசி.

அட்டையில் : ராகசுதா

வண்ணப்படம் : சிவம்

சாதனையாக மாறும் சோதனைகள்!

புதுதில்லியில் வசிக்கும் பேராசிரியர் கே. ஸ்ரீனிவாசன், தாம் பணியாற்றும் பாலிடெக்னிக்கில் ஸ்ட்ரைக் வந்தால் எல்லா இயந்திரங்களையும் பழுதுபார்த்துத் துடைத்து, எண்ணெயிட்டு வைத்துக் கொள்ள அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்வாராம்! ஜுரமாகப் படுத்தால் பொது அறிவு பெற ஏராளமாய்ப் படிப்பாராம்! இவ்வாறே சோதனைகளைச் சாதனைகளாக மாற்றிய அனுபவங்கள் பற்றி மாணவர்களைக் கேட்கலாமே என்று யோசனை தெரிவித்திருக்கிறார்.

எழுதுங்கள், மாணவர்களே! சிறந்த ஒரு பக்கக் கட்டுரைக்குப் பரிசு ரூ. 50. பிரசுரமாகும் சிந்தனைச் சிதறல்களுக்கு ஆறுதல் பரிசு உண்டு. முடிவு தேதி: 22.6.91. மிக அதிகமான முதல் பரிசுகள் பெறப் போகும் மாணவருக்குப் பொன் விழா மேடையில் சிறப்புப் பரிசு ரூ. 2500!

உறை மீது ''சாதனையாக மாறிய சோதனை'' என்று குறிப்பிடுவதுடன், கல்லூரி விலாசம், வீட்டு விலாசம் இரண்டும் எழுதவும்.

கல்கி பொன்விழா பரிசுத் திட்டம்

கல்லூரி மாணவர் கட்டுரைப் போட்டி



புடுமிக்க
சூடவரின்
பெருமைகளில்
ஒன்று

Colts
VESTS
&BRIEFS

அந்தரங்க அத்தியாவசியங்கள்

A Quality product from :
VIJAYAKUMAR MILLS LTD
Kalayamputhur Post Palani Tamil Nadu - 624 615

Distributor for Madras : **SUPREME AGENCIES,** 33, P.V. Koil Street, Madras - 600 004.
Distributor for rest of TN : **PRIYA AGENCIES,** 36, Saravana Street, 1st Floor, Udumalpet - 642 126.

◆ ராஜீவ் காந்தியின் மரணத்துக்குக் காரணமான பெண்ணும் அவளுக்கு உதவியதாகக் கருதப்படுகின்ற...

பயங்கரவாதிகள் பெல்ட்டில் பிளாஸ்டிக் குண்டுகள்!

பம்பாயில் இங்கும், அங்குமாக வெடித்து வருபவையும் இவைதான்! பம்பாய் ரேய் ரோடு மின் வண்டி ஸ்டேஷனில் இத்தகைய ஒரு குண்டு வெடித்த போது, தாராவியில் வசித்த பெருமாள் பரமசிவம் என்ற ஒரு தமிழர் மீது சந்தேகம் இருந்தது. அந்த விபத்தில் மாண்டவர்களில் அவரும் ஒருவர்.

அதன்பின், நான்கு மாதங்கள் கழித்து, ஒலி பார்க்கில் மற்றொரு குண்டு வெடித்த போது, பி. எஸ். எம். கோனார் என்பவர் கைது செய்யப்பட்டார். பின்னர் தக்க ஆதாரமில்லை என்று விடுவிக்கப் பட்டார். சென்ற ஆண்டு டிசம்பர் 15 ஆம் நாள் பம்பாய் விமான தளத்தில் இளங்கோ நடராசன் என்ற இலங்கைத் தமிழர் 15,500 கார்ட்ரிட்ஜ்களுடனும், சில சிக்னல் உபகரணங்களுடனும் பயங்கரவாதப் பிரசாரத்துக்கான துண்டுப் பிரகரங்களுடனும் கைது

வன்முறையை நம்பிய ஓர் இளம் பெண்ணால், ஒரு முன்னாள் பிரதமரின் உயிரையே குடிக்க முடிந்தது! 'ஆர். டி.எக்ஸ்' என்ற 'சைக்ளோ ட்ரை மெதிலின் ட்ரை நைட்ரமின்' எனும் இரசாயனப் பொருளடங்கிய சிறு பிளாஸ்டிக் குண்டைத் தன் இடுப்பு பெல்டில் கட்டிக் கொண்டு, அதை வெடிக்க வைத்துத் தன்னையும் மாய்த்துக் கொண்டு, சுற்றியிருந்த பதினேழு பேரையும் அவள் மாய்த்தாள் என்ற கசப்பான உண்மை மக்களை அதிர வைத்தது.

இத்தகைய பிளாஸ்டிக் குண்டுகள் பஞ்சாப், எல். டி. டி. ஈ. வன்முறையாளர்கள் பரவலாக உபயோகப்படுத்துவதாகக் கூறப் படுகிறது! சென்ற ஆண்டு ஏப்ரலில் தில்லி அரசாங்க பஸ்களில் வெடித்தவை இத்தகைய குண்டுகள்தான்! மூன்றாண்டுகளாகப்

... நபரும். இவர்களைப் பற்றிய விவரம் தெரிந்தவர்கள் தகவல் கொடுத்தால் பரிசு உண்டு என்ற அறிவிக்கப்பட்டுள்ளது.

செய்யப்பட்டார். ஆயினும், தமக்கு பம்பாயில் யாரையும் தெரியாது என்றும் தமக்கு வேண்டியவர்கள் சென்னையில் உயர் மட்டத்தில் இருப்பதாகவும் அவர் கூறினார். பின்னர் அவரும் விடுவிக்கப்பட்டார். பம்பாயில் குற்றவாளி ஒருவனுக்கு ஏ. கே - 47 துப்பாக்கி விற்றதாக ஓர் இலங்கைத் தமிழர் சில நாள் முன்பு கைது செய்யப்பட்டார்.

போதை மருந்துக் கடத்தல், வன்முறைச் சாதனங்கள் கடத்தல் இவற்றில் பல இலங்கைத் தமிழர் ஈடுபட்டிருப்பதாகப் பொதுவாகத் தெரியவரினும், தீவிர நடவடிக்கை எடுக்கப்படவில்லை. விளைவு, நாட்டிற்கே பயங்கரமாக முடிந்தது! சில சமூக விரோதிகள், மனநோயாளிகள் நினைத்தால் தாங்களும் மடிந்து, உலகின் எந்தத் தலைவரையும் மடிய வைக்கலாம் என்பது தெளிவாகி விட்டது!

வன்முறையாளர்கள் பற்றி லண்டனில் ஆராய்ச்சிகள் நடத்தி வரும் பெர்னார்ட் ஆதமெஜஸ்கி என்ற அதிகாரி, 350 கிராம் எடை மட்டுமே கொண்ட ஒரு பிளாஸ்டிக் குண்டுதான், நவம்பர் 87 இல் ஒரு சக்தி வாய்ந்த போயிங் - 707 விமானத்தையே வீழ்த்தியது என்று கட்டிக்காட்டியிருக்கிறார். நவம்பர் 88 -இல் ஸ்காட்லாந்தில் பான் ஆம் - 747 ஜெட் விமானத்தை வெடித்து வீழ்த்திய செம்டெக்ஸ் என்ற வெடிப் பொருள் கொண்ட பிளாஸ்டிக் குண்டு, இருநூறு கிராம் எடை மட்டுமே கொண்டது என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார் அவர்!

இவ்வாறு செய்யப்படும் சிறு பிளாஸ்டிக் குண்டுகள் எக்ஸ்ரே இயந்திரத்தில் புலப்படா; இவற்றை பெல்டிலோ, பையிலோ அன்றிப் பொம்மையிலோ அடைத்து எளிதில் நாடு விட்டு நாடு கொண்டு செல்ல முடியும்! அமோனியம் பெர்கலோட் என்ற ஒரு ரசாயனப் பொருளை ஒரு பாலிமரோடு சேர்த்துச் செய்யப்படும் இத்தகைய குண்டுகளை, எந்தவொரு வடிவத்திலும் ஆக்க முடியும். செக்கோஸ்லாவாகியாவில் உற்பத்தி செய்யப்படும் இவை லிபியா, ஜப்பான், பாலஸ்தீனம், அயர்லாந்து போன்ற நாடுகளில் இருக்கும் வன்முறையாளர்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதைப் பற்றிய உண்மையை செக்கோஸ்லாவாகிய ஜனாதிபதியே ஒப்புக் கொண்டு வருந்தியிருக்கிறார்.

நம் நாட்டில் இதைத் தடுக்க நாம் என்ன செய்ய வேண்டும்? முதலாவதாக, வன்முறையாளர்கள் அரசியலில் நுழைவதைத் தடுக்க வேண்டும். 1960 வரை தியாகிகள், மகான்களின் கட்சியாக இருந்த காங்கிரஸ், பின்னர் கொலைக்காரர்கள், கொள்ளைக்காரர்களுக்கு அடைக்கலம் கொடுக்கும் கட்சியாகி விட்டது! விமானங்களை ஹைஜாக் செய்தவர்கள் கூட எம். எல். ஏ. வாக முடிந்தது! பி. ஜே. பி. தேசிய முன்னணி, மற்றும் மாநில அளவிலான கட்சிகளிலும் இன்று பல சந்தேகத்திற்கிடமானவர்கள் நுழைந்து விட்டார்கள். அரசியல் கட்சிகள் இனி இத்தகையவர்களுக்குப் புகலிடம் கொடுக்கக் கூடாது.

இரண்டாவதாக, வன்முறையை விஸ்

> ...ஸ்ரீபெரும்புதூரில்
> வெடித்தது போன்ற
> குண்டுகள்தான்
> சென்ற ஆண்டு ஏப்ரலில்
> தில்லியில்
> அரசு பஸ்களில்
> வெடித்தவை.
> பம்பாயில்
> இங்கும் அங்குமாக
> வெடித்து வருபவையும்
> இவைதான்...

தாரமாகக் காட்டி அதைப் பெருமைப் படுத்தும் நிரைப் படங்களைத் தடுக்க வேண்டும். பட உற்பத்தியாளர்கள் அத்தகைய படங்கள் தயாரிப்பதைத் தவிர்க்க வேண்டும். மூன்றாவதாக, வன்முறையையே வாழும் வழியாகக் கொண்டிருக்கின்ற இயக்கங்களைத் தயவு தாட்சண்யமின்றி ஒடுக்க வேண்டும். புத்தர், காந்தி பிறந்த இந்நாட்டில் நேர்மையாளர்கள், நாணயமானவர்கள் வாழ வழியுண்டு என்ற எண்ணம் உறுதியாக வேண்டும். தேர்தல்கள் முடிந்து அமையும் புதிய அரசு செய்ய வேண்டிய முதல் கடமை இதுதான்.

- பம்பாய் நிருபர்

பாம்புக்குப் பால்
ஊற்றி ரத்தினை
அழகா
வளர்த்தாங்க...
இந்தாளதானே
வளர்ந்த
பாம்பு கொத்திப்
பல்லப் புடுங்காம
விட்டுட்டாரு !
அதான் அவரை
ஓரங்கட்டி
அலேக்கிட்டு
ரிகார்டாளையும்
தூங்கி
இவருகிட்டே
ஜாதகத்தையே,
இவரு ரூல்ஸை
தெரிஞ்சாரு ?
அந்த ஏடாகூட
இந்த வைக்கப் -
போரு கேள்ளாதான்
ராங்கேடியா
திருக்கு...
ராப்படியும் கண்டு
பிடிச்சுடுவேன் !
ஓ.பி.எஸ்.
அய்யா, ஜோடுசாதி
கடவுளே... எனை
ஜோடுகெ காணிக்கையை
ஏத்துக்கோ...
தொங்கு பாராளு
மன்றம் வேணாம்,
இன்னும் அஞ்சு
வருஷத்துக்குத்
தேர்தல் வராமக்
காப்பாத்து,
மோதும் மோதும்னு
ஆயிடுச்சு...

கல்கி

1991 ஜூன் 16
மலர் :49 இதழ் : 46
பிரஜோத்பத்தி ஆனி 2

என். டி. ஆரின் உண்ணாவிரதம்

அண்ணல் காந்தியடிகள் பயன்படுத்தி, பலமுறை வெற்றி கண்ட உண்ணாவிரதத்தைப் பிறர் கையாளும் போது மிகுந்த எச்சரிக்கை தேவை. காந்திஜி அளவுக்கு இல்லாவிட்டாலும் கணிசமான அளவுக்கேனும் நமக்கு ஆன்மிக பலம் இருக்கிறதா என்பதை முதலில் தன்னைத்தானே சோதித்துக் கொண்டு அறிய வேண்டும். இல்லாமற் போனால், ஒன்று அந்த உண்ணாவிரதம் கேலிக்கூத்தாகி விடும், அல்லது விபரீத பின்விளைவுகளை ஏற்படுத்தும்.

இதைப் புரிந்து கொள்ளாமல் போனதால்தான் தமிழகத்தில் அண்மையில் தலைவர்கள் பலர் ஒரு (அரை?) நாள் உண்ணாவிரதம் இருந்தது பலன் தரவுமில்லை; அதற்கு உரிய மதிப்பும் ஏற்படவில்லை.

என். டி. ஆரோ, தமது கோரிக்கைகளின் முக்கிய அம்சம் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிறகும் உண்ணாவிரதத்தை நீடித்து, தேவையற்ற, புதிய பிரச்னைகளை உருவாக்கினார். அவரது தோழமைக் கட்சித் தலைவர்கள் எடுத்துச் சொல்லியும் அவர் கேட்கவில்லை.

என். டி. ஆரின் நோக்கம் சரியானது; எடுத்துக் கொண்ட முயற்சி தூய்மையானது. இதில் இரண்டாவது கருத்து இல்லை. என்ன சொல்கிறார் என். டி. ஆர்.?

'ராஜீவின் மரணத்தையொட்டி நடந்த கலவரங்கள், வன்முறைகளில் ஏராள சொத்துக்கள் அழிந்திருக்கின்றன. (என். டி. ஆர். குடும்பத்தினர் சொத்துக்கள் உள்பட) இந்த நாசத்துக்குக் காங்கிரஸ்காரர்கள் (பல எம். எல். ஏ.க்கள் உள்பட) காரணமாய் இருந்திருக்கிறார்கள். நீதி விசாரணை வேண்டும்; குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்; நஷ்டஈடு தரப்பட வேண்டும்' என்கிறார். நியாயமான கோரிக்கைகள்தாம்.

ஆந்திர அரசு முதலில் தயக்கம் காட்டி முரண்டு பிடித்தாலும் பிறகு என். டி. ஆரின் தார்மிக பலத்தை உணர்ந்து, வளைந்து கொடுத்தது. உச்சநீதிமன்ற நீதிபதி ஒருவரின் நீதி விசாரணைக்கு ஒப்புக் கொண்டது. ஆனால் ராமராவ் தமது மற்ற கோரிக்கைகளும் ஏற்கப்பட வேண்டும் என்பதற்காக உண்ணாவிரதத்தைத் தொடர்ந்தார். நீதி விசாரணை நடந்த பிறகுதான் குற்றவாளிகள் தண்டிக்கப்பட முடியும்; உரிய நஷ்டஈடும் தரப்பட முடியும் என்பது ராமராவுக்குத் தெரியாமலா இருக்கும்? ஆக, அவர் உண்ணாவிரதத்தைத் தொடர்ந்தது ஆச்சர்யத்தை அளித்ததுடன், அரசியல் உள்நோக்கம் உடையதாகவும் கருதப்பட இடம் தருகிறது. இதை ராமராவ் தவிர்த்து, கௌரவமாக உண்ணாவிரதத்தைத் தாமே முடித்துக் கொண்டிருக்கலாம்.

'குற்றவாளி யாருக்கும் பாதுகாப்புத் தர மாட்டோம்; உண்மைகளை மறைக்க மாட்டோம்' என்று முதல்வர் ஜனார்த்தனரெட்டி கூறியபோதிலும், ராமராவ் விஷயத்தில் அவருடைய அரசு சரியாக நடந்து கொள்ளவில்லை. பலாத்காரமாக உண்ணாவிரதத்தை முடிக்கப் போக, போலீஸாரிடம் தெலுங்கு தேசத் தொண்டர்கள் தடியடி வாங்கி இருக்கிறார்கள். சில இடைமட்டத் தலைவர்கள் கை ஒடித்தும், மண்டை பிளந்தும், தரதரவென்று இழுத்துச் செல்லப்பட்டதில் ரொய்ப்புக்கள் ஏற்பட்டும் மருத்துவமனைக்குக் கொண்டு போகப்பட்டிருக்கிறார்கள். ராமராவும் கைதாகி மருத்துவமனையில் ரத்த நாளம் மூலம் பலவந்தமாகத் திரவம் (சர்க்கரைச் சத்து) செலுத்தப்பட்டிருக்கிறார். இந்த அடக்குமுறை தேவையற்ற ஒன்று. காங்கிரஸ் முதல்வர் ஜனார்த்தன ரெட்டி சற்று இறங்கி வந்து, முன்னாள் முதல்வருக்கு உரிய மரியாதை காட்டி, அன்புடன் அணுகி இருக்கலாம். சாதுர்யமான முறையில் சுமுகமாகப் பேசியிருந்தால், என். டி. ஆரின் பிடிவாதம் தளர்ந்திருக்கக் கூடும். இப்போதோ, உண்ணாவிரதம் என். டி. ஆராலேயே முறிக்கப்பட்டதாக ஆந்திர அரசு இண்டல் செய்ய, உண்ணாவிரதம் தொடர்வதாக என். டி. ஆர். பிடிவாதம் பிடிக்க, விஷயம் ரசாபாசமான எல்லைக்குப் போய்விட்டது.

உண்ணாவிரதம் என்பது ஒரு புனித யக்ஞம். பிரார்த்தனையுடன் கூடிய உண்ணாவிரதம், சத்தியமான உள்ளத்தில் பிறந்து, அன்பை வெளிப்படுத்தி, பிறரிடமும் அன்பைப் பெருகச் செய்ய வேண்டும். அது மனச்சாட்சியை உறுத்தி, ஒரு மனமாற்றத்துக்கு உதவ வேண்டுமே தவிர, பிளாக்மெயில் என்ற தவறான எல்லைக்குப் போய் விடக் கூடாது.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்ற கும்மிடடி பாப்பா. - பாரதியார்.

ஏகாண்டன்

காத்தாலே நாஷ்டாவுக்கு ஆப்பம் சுட்டு மூடி வைச்சிருக்கேன். துன்னாம புறப்பட்டுட்டியே.
ஆறுமணியிலிருந்து உண்ணா விரதம்! நீ சுட்டு மூடி வைச்சிருந்ததை 5-55 க்கே துன்னு முடிச்சுட்டேன்.

யோவ்! ரெண்டு நாயா நாஷ்டாவுக்குச் சேர்த்துத் தரலையானா ஏணியை விட்டுட்டுப் போயிடுவேன்! என்ன சொன்னே?

இவ்விடம் துண்டுகள் மடிக்காமல் நீட்டாகவே ஸ்பெசலாக அயான் செய்து தரப்படும்
-துரைசிங்கம்


ஒரு பச்சை வாழைப்பழம் இரண்டு நாயா?
இது பச்சை வாழைப்பழம் இல்லை ஸ்நா. பாத்து வாழைப்பழம்!

துளசிங்கம் விஜய நிகில்



ஸ்பெஷலிஸ்ட் டாக்டரும் சபலிஸ்ட் டாக்டரும்

யாகும் அளவு கூட்டம்!

நாடகத்தில் ஒய். ஜி. மகேந்திராவுக்கு வேஷம் கிடையாது. ஆனால் இடை வேளைக்கு முந்திய காட்சியில் ''இயக்குன ராக'' மேடைக்கு வருவார். இடைவேளை 8.30 மணிக்கு வரும். அவர் 8.00 மணி வாக்கில்தான் ஆடிட்டோரியத்துக்கே வரு வார். ஏனெனில் நாடகம் செட் ஆகி விட்டது.

யார் போய்ப் பிரச்னையை சபா செக ரட்டரியிடமும் மக்களிடமும் சொல்வது? குழுவில் ஒவ்வொருவரும் தனித்தனியாக ஸ்லோகம் சொல்ல ஆரம்பித்து விட் டார்கள். சபா செகரட்டரி கட்டைக் குரலில் வெளியே கத்துவது காதில் விழுந்தது.

''என்னடா! ஏன் இன்னும் ஆரம்பிக்கலை. போய் விசாரி!''

திடீரென ஒரு சந்தோஷக் கூக்குரல்: ''மகேந்திரா வந்துட்டான். மகேந்திரா வந் துட்டான்!'' அனைவரும் அவரது காரைச் சுற்றிக் கொண்டோம். நிலைமையைச் சொன்னோம். மனிதருக்கு இம்மியளவாது பதற்றம் வர வேண்டுமே!

மேடைக்குச் சென்றார். நிரை தூக்கச் சொன்னார். ''லேடீஸ் அண்ட் ஜென்டில் மென், குட் ஈவினிங். நாடகத்தை ஆரம்பிக் கறதிலே ஒரு சின்னப் பிரச்னை. ஒரு லேடி ஆர்ட்டிஸ்ட் வரலை. ஆனா நீங்க வந்திருக் கீங்க. ஒரு லேடி ஆர்ட்டிஸ்ட் வரலைங்கிற துக்காக நாடகத்தைக் கான்சல் பண்ணினா அது உ ங் க ளை அவமானப்படுத்தறதா ஆகும். அதனாலே இந்த நாடகத்தோட கதா சிரியர் 'விக' அந்த லேடி ஆர்ட்டிஸ்ட் ரோல்லே நடிப்பார். கைவசம் புடைவை இல்லை. டோபா இல்லை. மத்த சாத னங்கள் இல்லை. அதனாலே அவர் பேன்ட் சட்டையிலேதான் வருவார். அவரை ஒரு கல்யாணமாக வேண்டிய, அழகான இளம் பெண்ணாகக் கற்பனை பண்ணிக்க வேண் டிய கஷ்டமான பொறுப்பை உங்கிட்டே ஒப்படைக்கறேன்.''

ஆடிட்டோரியத்தில் சிரிப்பலை, கர கோஷம். ''பல பெண்களுக்கு அவர் எவ்வ னவோ பரவாயில்லை சார்'' என்ற கமெண்ட் வேறு!

கதைப்படி முதல் காட்சியில் அந்தப் பெண்ணைப் பெண் பார்க்க வருவார்கள். இன்று நினைத்தாலும் சிரிப்பு வருகிறது.

எங்களுடைய விஸ்வசாந்தி குழுவின் நாடகம் 'உறவுக்குக் கை கொடுப்போம்' நடந்து கொண்டிருந்த சமயம். கத்த, வச னம் அடியேன். இயக்குனர் ஒய். ஜி. மகேந்திரா.

அன்று 'பார்த்தசாரதி சாமி சபா' ஹாலில் நாடகம். அந்த நாடகத்தில் மொத்தம் ஐந்து லேடி ஆர்ட்டிஸ்ட்ஸ். (பொருளாதார நிதி யாகவும், வேறு பிரச்னைகள் காரண மாகவும் ஒரு லேடி ஆர்ட்டிஸ்ட்க்கு மேல் இருக்கும் கதையை எந்தக் கதாசிரியரும் எழுதக் கூடாது என்று நாடக உலக நிர்ணயச் சட்டமே இருந்த போதுதான் நான் இப்படி சட்ட மறுப்புச் செய்தேன்.)

அன்று ஒரு பெண் நடிகை வரவில்லை. குழுவுக்கே வயிற்றைக் கலக்கியது. ஆடி டோரியத்திலோ என் போட்டால் எண்ணை

பேன்ட், சட்டை, சிங்கப்பூர் செருப்பு சகிதம் வியர்க்க விறுவிறுக்க ஒரு கையில் ஸ்கிரிப்டுடன் (வசனம் பேசியாக வேண்டுமே) கஷ்டப்பட்டு நளினத்தை வர வழைத்துக் கொண்டு, மாப்பிள்ளை வீட்டாரை நான் நமஸ்கரிக்க, மாப்பிள்ளை வேடத்தில் இருந்த என் தம்பி கிஷ்மூ, ''ஏம்பா, பெண்ணுக்குக் கொஞ்சம் ஜாம் பளை ஜாடை இருக்கில்லே?'' என்று இல்லாத வசனத்தைச் சொல்ல, கொட்டகையில் விசில் சப்தம் காதைப் பிளக்க, திடீரென உள்ளே நுழைந்தார் ஒய். ஜி. மகேந்திரா!

அவருக்கு வேடமே கிடையாது. கதைப்படி அவர் அச்சமயம் வரவே கூடாது. ''அப்பொ உனக்கு இந்தப் பொண்ணுபிடிக்கலையா? வேண்டாம். இந்தப் பொண்ணு எப்படி?'' என்று தாமதமாக அப்பொழுதுதான் வந்த அந்த லேடி ஆர்ட்டிஸ்டை மேக்கப் கூட இல்லாமல் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்து ஸ்டேஜில் நிறுத்தினார் பாருங்கள். ஹோட்ஸ் ஆஃப்!

நாடக உலக ரசிகர்களைத் தம் கைக்குள் வைத்திருக்கும் ஒய். ஜி. எம்மின் பாப்புலாரிடி கண்டு வியந்தேன்.

இன்று ஒரு நகைச்சுவை நடிகனாக மட்டும் கண்ணுக்குத் தெரியும் ஒய். ஜி. மகேந்திரா, ஒரு 'நிழல்'தான். அதற்குப் பின் ஒரு இன்டலிஜென்ட், டெடிகேட்டட், பர்ப்பஸ் ஓரியன்டட் ஒய். ஜி. எம். ஒளிந்து கொண்டிருக்கிறார்.

'அவள் சுமங்கலிதான்' நாடகத்தின் கதைப்படி கதாநாயகனுக்குப் படுபயங்கரமான வியாதி வர வேண்டும். ஒரு டாக்டரைக் கலந்தாலோசித்து, கஷ்டப்பட்டு ஒரு வியாதியின் பெயரைச் சொன்னோம். இன்று சொன்னாலும் நாக்கு சுளுக்கிக் கொள்ளும். 'லிம்ஃபோ சர்க்கோமா' அல்லது 'மீடியாஸ்டினல் டியூமர்'. அந்த வியாதிப்படி ஆரம்ப காலத்தில் அஜீரணம் இருக்கும். சிறிது காலத்திற்குப் பின், கோழையுடன் ரத்தம் வரும், பிறகு கண் இருட்டும், பார்வை மங்கும். அதன் பிறகு மரணம்தான். மக்களைப் பயமுறுத்தினாலும் நாடகம் வெற்றி பெற்று விட்டது.

நாடகம் அன்று மெடிகல் காலேஜ் ஸ்டூடன்ட்ஸ் வெல்ஃபேர் அஸோஸியேஷன் சார்பில், மியூஸிக் அகாடமி அரங்கில் நடந்தது. ஏழெட்டுக் காட்சிகள் வரை மிக நன்றாகவே ரசித்தார்கள். ஆரம்பக் கட்ட நகைச்சுவைக் காட்சிகளுடன் அற்புதமாகவே ஐக்கியமானார்கள். கதைப்படி கதாநாயகனின் வியாதி வெளிப்பட வேண்டிய சீன்.

டாக்டராக நடிக்கும் நடிகர் தங்குதடையின்றி அந்த வசனத்தைச் சொன்னார்: ''உங்கள் மாப்பிள்ளையை இனி இறைவன் கூட காப்பாற்ற முடியாது. ஏனெனில் அவருக்கு வந்திருக்கும் வியாதி லிம்ஃபோ சர்க்கோமா அதாவது மீடியாஸ்டினல் டியூமர். அதற்கு மருந்தே கிடையாது!''

அனைத்து ரசிகர்களும் ஒருமித்த குரலில் ''மாதவ ராவ்!'' என்று கத்தினார்கள். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. அந்த டாக்டர் வேடதாரி, பயத்தில் சிறு வயதில் படித்ததையெல்லாம் கூட வசனத்தில் சேர்த்து ஏதேதோ உளற ஆரம்பித்து விட்டார்! ரசிகர்களோ, தொடர்ந்து கையைத் தட்டிக் கொண்டே ''மாதவராவ் - மாதவராவ்'' என்று வித்யாசமான குரலில் கோரஸ் வாய்ஸில் முழங்க, எங்களுக்கு ஒன்றுமே புரியவில்லை.

தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, நான் ரசிகர்களிடம் நேரடியாகவே பேசி விட்டேன்: ''மன்னிக்கவும். இதுவரை நாடகத்தை நன்றாகத்தானே ரசித்து வந்தீர்கள்? திடீரென ''மாதவராவ் - மாதவராவ்'' என்று கத்துவதின் அர்த்தம் என்ன? எங்களுக்குப் புரியவில்லை'' என்றேன்.

முன் வரிசையில் இருந்து ஒரு ஜென்டில்மேன் எழுந்தார். ''நீங்கள் சொன்ன அந்த வியாதியைக் குணப்படுத்தும் ஸ்பெஷலிஸ்ட் மிஸ்டர் மாதவராவ் - இதோ இங்கிருக்கிறார்'' என்றார்.

நான் ஆடிப் போய் விட்டேன். கொல்லர் பட்டறையில் ஊசி எப்படி விற்பது? அதற்கடுத்த எட்டுக் காட்சிகளும் அந்த வியாதியை வைத்தும், அதன் விளைவுகளை வைத்தும்தான் கதை வளர்கிறது. குளோஸ்! நாடகத்தை முடிப்பதற்குள் நாங்கள் பட்ட பாடு... அம்மம்மா!

'நிழல்' டாக்டர் மேடையில் வியர்த்து விறுவிறுத்து உளறிக் கொண்டிருக்க, 'நிஜ' டாக்டர் மௌனமாகப் புன்முறுவல் பூத்து நாடகத்தை ரசித்துக் கொண்டிருந்தார்!

பேரைச் சொல்ல மாட்டேன். ஊரையும் சொல்ல மாட்டேன். அந்த நகருக்கு யார் நாடகம் போடப் போனாலும் ஒரு டாக்டர் காலையிலேயே காரை எடுத்துக் கொண்டு ஓட்டலுக்கு வந்து, லேடி ஆர்ட்டிஸ்டுடன் பழகும் சபலத்துக்காக, ''கார் இருக்கிறது; கோவிலுக்குப் போகலாம். அங்கு போகலாம். இங்கு போகலாம்'' என்று சென்ட் மணக்க மணக்க ஆரம்பித்து விடுவார்.

அவரைப் பற்றிச் சென்னையிலேயே நாடகக் குழு மெம்பர்கள் என்னிடம் சொல்லிச் சிரித்தார்கள். அதுதான் அந்த ஊருக்கு எங்கள் குழுவின் முதல் விஜயம்.

எதிர்பார்த்தது போலவே அந்த சபலிஸ்ட் காலையிலேயே ஓட்டலுக்கு வந்து விட்டார். எங்கள் குழுவில் ஐந்து நடிகையர். அவருக்கு ஒரே உற்சாகம். அவரைப் பழிவாங்க நினைத்தேன். ''சரியாகப் பத்து மணிக்கு வாங்க'' என்று அவரிடம் சொல்லினேன். ''பத்து மணிக்கு ரெடியாகி விடுங்கள்'' என்று அவரெதிரே லேடி ஆர்ட்டிஸ்ட்களிடமும் கூறினேன்.

பலவிதக் கற்பனைகளோடு மனிதர் பத்து மணிக்கு வந்தார். ஓட்டல் வாசலில் நான்கு ஆண் நடிகர்களுடன் நான் நின்றிருந்தேன்.

''வாங்க சார். லேடி ஆர்ட்டிஸ்ட்டுங்க இஷ்டு ரிகர்சல் பாக்கணும்னுட்டாங்க. உங்களை அகௌரவப்படுத்தக் கூடாதென்று நாங்க ரெடியா இருக்கோம்'' என்று சொல்லிக் காரில் ஏறி, 120 கிலோ மீட்டர் ஸ்பீடில், அவர் செலவில் டீபன், காப்பி, சாப்பாடு, இளநீர், கூல்டிரிங்ஸ், ஐஸ்கிரீம், சிகரெட், பாக்கு இத்யாதி... இத்யாதி. இதற்காகச் சீட்டாட்டத்தைக் கூடக் கை விட்டோம் என்றால் எங்கள் நியாகம் எத்தனை பெரிது என்று புரிந்து கொள்ளலாம்!

டாக்டரின் நிழலான முகம் சிரித்துக் கொண்டிருக்க, நிஜமான உள்ளம் அழுது கொண்டிருந்தது.

இதற்கப்புறம் எந்தக் குழு வந்தாலும் அவர்கள் தங்கும் ஓட்டல் பக்கமே அந்தச் சபலிஸ்ட் தலைவைச்சப் படுக்கறதில்லையாம்!

(நிழல்கள் தொடரும்)

நான் நில்சின் உபயோகிப்பது
வெண்மைக்காக மட்டுமல்ல
துணிகளின் நன்மைக்காகவும் கூட.

nilsin

LIQUID BLUE

நில்சின் சொட்டு நீலம்

நில்சின் சொட்டு நீலத்தின்
சிறப்பு அம்சங்கள் :

- பருத்தி மற்றும் பாலியஸ்டர் துணிகளுக்கு ஏற்றது.
- துணிகளுக்கு எத்தகைய தீங்கான இரசாயன பின்விளைவுகள் இல்லை.
- நறுமணம் கொண்டது.
- துணிகளின் தூய வெண்மைக்கு சிலதுளிகள் போதும்.
- விலையோ அதிகம் இல்லை.

கேட்டு வாங்குங்கள் ! போட்டுப் பாருங்கள் !

தயாரிப்பாளர் :
நில்சின் கெமிக்கல் வொர்க்ஸ்
வாட்வா, அஹமதாபாத்

விற்பனை ஏற்பாடு :
குந்தல் ஏஜென்ஸீஸ்
சென்னை 600108
தொலைபேசி : 524898/520210

ADVT. NO. NCM 454

அமரர் கல்கி நினைவாக– பொன்விழா சிறுகதை; நாடகம்; கவிதைப் போட்டிகள்

சிறுகதைகள்:

முதல் பரிசு	ரூ. 2,000
இரண்டாம் பரிசு	ரூ. 1,000
மூன்றாம் பரிசு	ரூ. 500

நாடகங்கள்:

முதல் பரிசு	ரூ. 1,000
இரண்டாம் பரிசு	ரூ. 500

கவிதைகள்:

முதல் பரிசு	
(புதுக் கவிதைக்கு)	ரூ. 250
(மரபுக் கவிதைக்கு)	ரூ. 250
இரண்டாம் பரிசு	
(புதுக் கவிதைக்கு)	ரூ. 150
(மரபுக் கவிதைக்கு)	ரூ. 150

ஆக மொத்தம் ரூ. 5,800 பரிசுகளாக வழங்கப் பெறும்.

தவிர, பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு சிறுகதையும் ரூ. 150 சன்மானம் பெறும்; ஒவ்வொரு நாடகமும் ரூ. 125 ம் ஒவ்வொரு கவிதையும் ரூ. 75 ம் பெறும். அறிமுக எழுத்தாளர்களுக்குப் போனஸ் உண்டு.

- படைப்பு எதுவாயினும் அது உங்கள் சொந்தக் கற்பனை என்றும் இதற்கு முன் வேறெங்கும் பிரசுரமானதில்லை என்றும் உறுதிமொழி தேவை.
- அறிமுக எழுத்தாளர் எனில் இதற்கு முன் வேறெதிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப் படும் வரை எழுத மாட்டேன் எனவும் உறுதிமொழி தர வேண்டும்.
- கதைகள்; நாடகங்கள்; கவிதைகளைத் தனித்தனியே அவற்றுக்குரிய நடுவர் குழு பரிசீலித்துப் பரிசுக்குரியவற்றைத் தேர்ந்தெடுக்கும்.

○ கதைகள், கவிதைகள், நாடகங்கள் ஆகியவற்றை அனுப்பக் கடைசித் தேதி: ஜூன் 15.

- உறையின் மேல் பொன் விழா சிறுகதை/நாடகம்/கவிதைப் போட்டி என்று குறிப்பிடுதல் அவசியம்.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படாதவற்றைத் திரும்பப் பெறப் போதிய அளவு தபால் தலை ஒட்டப்பெற்ற கவலாசமிட்ட உறையைக் கதை அல்லது நாடகம் அல்லது கவிதையுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- கதைகளும் நாடகங்களும் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாமல் இருப்பது நலம். கவிதை ஒரு பக்கத்துக்குள் அடங்குவதாய் அமைதல் வேண்டும். ஒருவரே ஒன்றுக்கு மேற்பட்ட சிறுகதைகளையோ, நாடகங்களையோ, கவிதைகளையோ அனுப்பலாம்.
- எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.
- சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

○ போட்டி முடிவும் முதல் பரிசுச் சிறுகதையும் கல்கி ஆகஸ்டு 4வ ஆண்டு மலரில் பிரசுரமாகும். மற்றவை அடுத்து வரும் இதழ்களில்.

○ பரிசுகள் பொன் விழா மேடையில் ஆகஸ்டு 3 ஆம் தேதி நடக்கவிருக்கும் தொடக்க தின நிகழ்ச்சியில் வழங்கப் பெறும்.

○ எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

ஆசிரியர், கல்கி, சென்னை – 600 032.


வேதனை
உங்கள்
பிரியமானவருக்கு
ஆபரேஷன் செய்வதற்கு
உங்களிடம்
பணம் இல்லாத
நிலை.

இது உங்களுக்கோ, அல்லது உங்கள் நண்பர் உறவினருக்கோ எப்பொழுதேனும் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறவோ, மருத்துவ சிகிச்சை பெறவோ நேர்ந்தால் இத்தகைய செலவுகள், உங்கள் சக்திக்கு மீறி இருந்தாலும்கூட அவற்றை நன்கீடுபோட முடியாது.

இப்பிரச்சினைக்கு சரியான தீர்வு அளிக்கிறது மெடிக்ளெய்ம்.

மெடிக்ளெய்ம் — தக்க சமயத்தில் உதவுகிறது.

வருடாந்திர பிரீமியமாக ஒரு தொகையை செலுத்தினால் உங்களுக்கோ, மருத்துவமனையிலோ வீட்டிலேயோ தங்கி சிகிச்சை பெற, இன்டென்சிவ் கேர், அருகில் சிகிச்சை மற்றும் மருத்துவ சம்பந்தமான இதர செலவுகளை சமாளிக்க உதவுகிறது மெடிக்ளெய்ம் இன்சூரன்ஸ்.

உங்கள் தேவைக்கேற்ப இரண்டு திட்டங்களை வழங்குகிறது மெடிக்ளெய்ம். திட்டம் 'ஏ', ஒருவர் மெடிக்ளெய்ம் மற்றும் குடும்பம் ஆஸ்பெண்ட் ஆதாயங்களை வழங்குகிறது. திட்டம் 'பி', மெடிக்ளெய்ம் ஆதாயங்களை மட்டும் வழங்குகிறது.

உங்கள் தேவைக்கேற்ப ஆறு நிலை ஆதாயங்கள் மற்றும் அவற்றுக்கான பிரீமியம் தொகை விவரங்கள் கிடைக்கின்றன.

பிரீமியம் ரூ. 200 முதல் ரூ. 1,500 வரை உள்ளது மெடிக்ளெய்ம் ஆதாயத்தின் உச்ச வரம்பு ரூ. 96,500. பாலனம் ஆஸ்பெண்ட் ஆதாயத்தின் உச்ச வரம்பு ரூ. 1,50,000. அட்டவணையைப் பார்க்கவும்).

மெடிக்ளெய்ம் — இப்போது மேலும் சிறந்த ஆதாயங்களுடன்

ஏப்ரல் 1, 1991 முதல் மேலும் சிறந்த ஆதாயங்களை அளிப்பதற்கென மெடிக்ளெய்ம் இன்சூரன்ஸ் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது — பிரீமியம் தொகையில் கூடுதல் எதுமின்றி.

- மார்ச் 31, 1991 வரை க்ளெய்ம் எதுவும் செய்யாத மெடிக்ளெய்ம் பாலிசிதாரர்கள் மாற்றியமைக்கப்பட்ட நிபந்தனைகளை தேர்ந்தெடுக்கலாம்.
- மருத்துவமனை அறை வாடகைகளுக்கான அதிகரிக்கப்பட்ட வரம்பு
- இன்டென்சிவ் கேர் மற்றும் வீட்டிலேயே தங்கி சிகிச்சை பெறும் ஆதாயங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன
- ஆதாயங்களைப் பெற முன்பை விட எளிமையான பிரீஜர்.
- மருத்துவப் பரிசோதனை செலவுகளில் 75% வரை ரீஇம்பர்ஸ்மென்ட்.

ஆதாயங்கள் மற்றும் வருடாந்திர பிரீமியம் அட்டவணை (ரூபாயில்)

விவரம்	பிரீமியம் I	II	III	IV	V	VI
பிரதி நபருக்கான ஆதாயங்கள்						
i) மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறும் ஆதாயங்கள்						
அ) தினசரி அறைக் கட்டணம்	750	550	350	250	150	100
ஆ) இன்டென்சிவ் கேர் யூனிட் தங்கிய	1500	1100	700	500	300	200
இ) அ) ஆ) இரண்டிற்கும் மொத்த வரம்பு	33000	24000	15500	11000	6600	4500
ii) சர்ஜன் அறுவைக்கட்டண மருத்துவ தொழில் ரீதியான கன்சல்டேஷன் கட்டணங்கள், அனெஸ்தீஷியா இதற்கும் முன் மருத்துவச் செலவு மருத்துவமனையில் தங்கி முன்பான செலவுகள்	22000	13200	9200	7000	3000	2500
iii) வீட்டில் தங்கி சிகிச்சை பெறுதல் (அறுவை சிகிச்சை மேற்கொள்ளாமல்) மருத்துவ தொழில் ரீதியான கன்சல்டேஷன் கட்டணங்கள்	28000	16800	12800	9000	5000	3400
	6000	3500	2500	1600	1400	1400
இதற்கும் ஆம்புலன்ஸ் பயன்படுத்தி சாதனம் தங்கலன் மற்றும் இதர செலவுகள்	7500	4500	3000	2000	1700	1700
iv) பாலனம் ஆஸ்பெண்ட் (மரண உதவி) அல்லது அங்கஹீன உதவி	150000	100000	75000			
செலுத்த வேண்டிய வருடாந்திர பிரீமியம்						
திட்டம் 'ஏ' மெடிக்ளெய்ம் மற்றும் பாலனம் ஆஸ்பெண்ட் இன்சூரன்ஸ்	1500	950	700			
திட்டம் 'பி' மெடிக்ளெய்ம்	1300	840	600	350	250	200

குறிப்பு: 1 மேற்கண்ட அட்டவணையில் உள்ளவை தவிர மேலும் தகவல்களுக்கு முழு விவரங்களையும் அறிய மெடிக்ளெய்ம் பாலிசியைப் பார்க்கவும்.

2 இன்சூரன்ஸ் செய்வதற்கு முன்பே தங்களுக்கு இருக்கும் விபத்தின் பாதிப்புகளுக்கும் பாலிசி எடுக்கப்பட்ட அதை ஒரிப்பாக சேர்க்கப்படாது.

பாலிசி நிபந்தனைகள்: வருமான வரிச் சட்டம் பிரிவு 80 D கீழ் வரிசலுகை முழுமையாகக் கிடைக்கும். ரூ. 3000 வரையிலான பிரீமியம் தொகைக்கு ரசீதுகளுக்கு தள்ளுபடி உண்டு.

உங்களுக்கான இதர ஜனரல்/ஹெல்த் இன்சூரன்ஸ் திட்டங்கள்

• பயிர்கள் ஆரோக்ய • ஒவ்வொரு மெடிக்ளெய்ம் • ஜனதா தொலைபேசி • மாப்பிரெஹென்சிவ் • மிரோப்ஸ்டேஸ் இன்டெண்டிட் • பாலனம் ஆஸ்பெண்ட்.

முன்னதைக் காட்டிலும் சிறப்பு!

மெடி + க்ளெயிம்

சுலபமானது. அவசியமானது

ஜெனரல் இன்சூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

கூடுதல் விவரங்களுக்கு இம் முகவரிக்கு எழுதவும்: ஜிஐசி, த.பெ. எண் 10032, ஜிஐசி, பம்பாய்-400 001
அல்லது உமது பகுதியில் இயங்கும் எந்த கம்பெனியின் எந்த அலுவலகத்திலும் தொடர்பு கொள்ளவும்.

நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

நியு இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

யுனைட்டட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

R.K.SWAMY/BBDO GIC 783 A TM

பொய் முகங்கள்

பெண் பார்க்க அம்மா, அப்பாவுடன் வந்த முரளிக்கு, கப்ரஜாவை முதற் பார்வையிலேயே பிடித்து விட்டது. ஒரு தரம் பார்த்து விட்டால் மீண்டும் பார்க்கத் தோன்றும் அழகு முகம். அதில் தவழுகின்ற தெய்வீக அமைதி. அற்புதமான மெல்லிய புன்னகை. அதுவும் அந்த ரோஸ் கலர் புடைவையில் எடுப்பான பளீர்!

''என்னடா... என்ன சொல்றே? இன்னும் நல்லாப் பார்க்கணுமா?'' என்றான் அம்மா. 'இவள்தான் எனக்கு மருமகள்' என்று மனசுக்குள் முடிவும் செய்து விட்டான்.

முரளி ஓரக்கண்ணால் பார்த்தான். ஆர்வம் கலந்த அவன் புன்னகைக்கு, கப்ரஜா பதில் தந்தாள்.

''எனக்குச் சம்மதம்!'' என்றான் முரளி.

முரளி இருபத்தெட்டைத் தொட்டு விட்டவன். வசீகரமான முகம். பாங்கில் நல்ல வேலை. கூடவே பத்திரிகைகளில் அவ்வப்போது சிறுகதைகள் எழுதுபவன்.

கப்ரஜா அருகில் வந்து, காலி செய்த தட்டுக்களையும், தம்ளர்களையும் எடுத்துச் சென்றாள்.

''எங்க சம்மதத்தை நாங்க நேரிடையாகவே சொல்லியாச்சு... இனி நீங்கதான் முடிவு பண்ணணும். உங்க பொண்ணையும் கன்சல்ட் பண்ணிட்டுச் சொல்லுங்கோ.''

''ஆமாம் ஆமாம். அதுதான் சரி. கப்ரஜா, கொஞ்சம் இப்படி வாம்மா. உனக்கு மாப்பிள்ளையைப் பிடிச்சிருக்கா சொல்லும்மா?'' என்றார் மீனாட்சி சுந்தரம் - கப்ரஜாவின் அப்பா.

கப்ரஜாவின் மௌனம் சம்மதமாயிற்று.

''அப்புறம் என்ன! இனிலக்ன பத்திரிகை எழுதிட வேண்டியதுதான்.''

அறையில் சந்தோஷம் பரவியது. முரளிக்கு மனசெல்லாம் சிறகடித்துப் பறந்தது. 'சத்தமாய்ப் பாட வேண்டும் போல் தோன்றியது. இத்தனை அருமையான, அழகான கப்ரஜா எனக்கு மனைவியா..? என்று டையவனாகப் போகிறாளா?

மீனாட்சி சுந்தரத்திற்கும் நல்ல மாப்பிள்ளை அமைந்த சந்தோஷம்.

மீனாட்சி சுந்தரம், கப்ரஜாவிடம் ''மாப்பிள்ளைக்கு நம்ம வீட்டைச் சுற்றிக் காண்பிச்சுட்டு வா'' என்றார்.

மீனாட்சி சுந்தரம் புத்திசாலி. முரளியும் கப்ரஜாவும் ஏதாவது தனியாகப் பேச வேண்டுமென்று, அதற்குரிய வாய்ப்பை வலிய ஏற்படுத்திக் கொடுத்தார்.

பளீரென்று தாக்கியது காற்று. மொட்டை மாடியில் மாலைச் சூரியனின் மஞ்சள் நிறம் இன்னும் கொஞ்சம் மீதி இருந்தது. ஏற்காட்டின் தூரத்து கரும்பகமையில் கவிதை கலந்திருந்தது.

முரளியும் கப்ரஜாவும் மொட்டை மாடியிலிருந்த அந்த விசாலமான அறைக்கு வந்தார்கள்.

''கப்ரஜா, நீங்க எல். ஐ. சி. யில் எந்த பிராஞ்சில இருக்கீங்க?''

சொன்னாள்.

''ரொம்பத் தூரமா இருக்கே. ட்ராவல் கஷ்டமா இல்லையா? சீக்கிரம் ட்ரான்ஸ்பர் வாங்கிக்கலாமே. அப்புறம் உங்க ஸ்டடீஸ் எல்லாம் எங்கே?''

முரளி தன்னைப் பற்றிய விவரங்களைச் சொன்னான். அவளைப் பற்றி இன்னும் தெரிந்து கொண்டான்.

''உங்க ஹாபிஸ் என்ன கப்ரஜா?''

''ரீடிங்தான். தமிழ்ல கந்தரராமசாமி, வண்ண நிலவன்ல இருந்து சுஜாதா, பாலகுமாரன் வரை எல்லாம் படிப்பேன்.''

எஸ்.லக்ஷ்மிகாந்தன்

''அட, அப்படியா! நான்கூட பத்திரிகைகளில் கதை எழுதுவேன், அப்பப்போ. சமீபத்தில் கூட என் கதை ஒன்று வந்திருந்தது. 'அபிதா' என்கிற புனைபெயர்ல... நீங்க படிச்சும் இருக்கலாம்.''

''அட அந்தக் கதையா? நான் படிச்சேன். எனக்கு ரொம்பப் பிடிச்சு இருந்தது. தான் கல்யாணம் பண்ணிக்கப் போற ஒரு பொண்ணு ஏற்கெனவே ஒருத்தனைக் காதலிச்சுத் தோத்துப் போயிருந்தால் - அதுக்காக அவ ஃபீல் பண்ணியிருந்தா - அதைக் காரணமாகக்காட்டி, அவளைக்கல்யாணம் செய்துக்க மறுக்கறது தப்புள்ளு சொல்ற மாதிரி கருத்தை மையமா வைச்சு எழுதி யிருந்தீங்க, இல்லையா?''

''ஆமாம். அந்தக் கதை யை நிறையப் பேர் பாராட் டியும் இ ரு ந் த ா ங் க..'' - முரளி மிகப் பெருமை யாகத் தன்னைப் பற்றிச் சொல்லிக் கொண்டான்.

''நீங்க சொன்ன அந்தக் கருத்து எனக்கும் பிடிச்சி ருந்தது. இதுவே ஓர் ஆண் காதலிச்சுத் தோத்துப் போயிருந்தா ரொம்ப ஈஸி யாக எடுத்துக்கிடறாங்க. அதைப் பெருமையாக்கூட நினைக்கறாங்க. ஆனா ஒரு பொண்ணுக்கு நடக்கறதே வேறே... தோல்விங்கறது இயல்பு. மனிதர் எவரும் தவறு செய்யலாம். எவர் கணக்கும் தப்பாகப் போக லாம். இப்படி இருக்கறச்சே பெண் மீ ண ா ட காதல் தோல்விங்கறது ம ட் டு ம் கேவலமாப் பேசப்படுது.''



''இந்தாப்பா பியூன்! நான் ஒரு முக்கியமான ஃபைலைப் பார்க்கப் போறேன். இரண்டு மணி நேரம் யாரையும் உள்ளே விடாதே!''

''ராத்திரி டீ. வி. யில் லேட்டைட் படம் பார்த்தீங்களா சார்?''

- ஞா. ஞானமுத்து

சுப்ரஜா பேசிக் கொண்டே இருந்தாள்.

முரளிக்கு மனசுக்குள் சந்தோஷம் அலை பாய்ந்து கொண்டிருந்தது. 'இத்தனை புத்தி சாலித்தனமும் யோசிக்கும் திறனும் கொண்டவள்எனக்கு மனைவியாகப்போகி றாள்... உண்மையில் எனக்கு இது அதிர்ஷ் டம்தான்!'

''கடைசியாய் ஒரு சின்ன விஷயம். உங்கிட்டச் சொல்லலாம்.... தப்பில் லைன்னு தோணுது. நீங்க பரந்த மன சுள்ளவர். உங்களை நான் ஏமாற்றவோ, பொய் சொல்லவோ விரும்பலை. அதா வது....''

என்ன இது? எதற்கு இத்தனை பலமான அஸ்திவாரப் பேச்சு? ஒருவேளை...

''நானும் இரண்டு மூன்று வருஷங் களுக்கு முன்னே காதல் செய்திருக்கேன். எங்க வீட்டிற்கு எதிர்த்த பிளாட்ல இருந்த கண்ணன்ங்கறவரும் நானும் ஒருத்தரை யொருத்தர் மனசார நேசிச்சோம். பழகி னோம். கொஞ்சம் கொஞ்சமா அக்கம் பக்கத்தார் மூலம் எங்க பெற்றோருக்குத் தெரியவந்தது. வேறே சாதி, தகுதி, வேறு பாடுகள். சண்டை இளம்பிப் பெரிசானது. வருத்தம், வேதனை, ஏமாற்றம். இடையில் கண்ணனும்மெட்ராசுக்கு சொந்தத்தொழில் செய்யறேன்னு போய்ட்டார். எனவே எங்க இடைவெளி அதிகமாகிக் கொஞ்சம் கொஞ்சமாய்த் தொடர்பு கொள்ளக்கூடிய வழிமுறைகள் அடைபட்டுப் போக, அந்தக் காதல் அப்படியே முடிஞ்சு போச்சு. அந்த வருத்தம் இப்பவும் சில சமயங்களில் எனக்கு ஏற்படுது மிஸ்டர் முரளி...''

நினைத்தது சரிதான். இவள் காதலித்துத் தோற்றுப் போனவள். காதல் தோல்வி என்னும் நரக வேதனையில் புழுங்கியவள்.

''ஒரு பெண்ணோட காதல் தோல்வி யையும், அது அவளோட தப்பு இல்லைங் கறமாதிரியும் கதை எழுதற நீங்களே எனகுப் புருஷனா வர்றது எனக்குச் சந்தோ ஷம். நான், நீங்க கதையில் எழுதின பெண் மாதிரிதான். உங்க கதை ஹீரோ மாதிரியே நீங்களும் என்னை மனசார ஏத்துக்கப் போறீங்க. நம்ம வாழ்க்கை நிஜமாகவே ரொம்ப சக்ஸஸ்ஃபுல்லா இருக்கும்னு நினைக்கறேன்.''

முரளியின் முகத்தில் அதிர்ச்சி அப்பட்ட மாய்த் தெரிந்தது. நாம் ஏதோ கதை எழுதப் போய், அது அப்படியே நிஜத்திலும் நடக்க இருக்கிறதே! யோசித்தாள் முரளி.

''என்ன யோசிக்கிறீங்க? நம்ம கல்யா ணத்தை எந்த மண்டபத்தில் வைச்சுக்க லாம்னா?''

''வெய்ட் ஏ மினிட் சுப்ரஜா'' என்று இடைமறித்தாள் முரளி.

''நீங்க சொல்றபடி நம்ம கல்யாணம் நடக்காது. உங்க அடிமனசுல இருக்கற அந்த வேதனை, ஏமாற்றம் தோல்வியின் வடு, அவ்வளவு சுலபத்தில் மாறாது. அது என் மனசையும் வாழ்க்கையையும் பாதிக்கும். மேலும் ஏற்கெனவே யாரோ ஒருத்தரை மனசாரக் காதலிச்ச ஒருத்தி, என் மனைவி ஆவதில் எனக்கு விருப்பம் இல்லை... சாரி சுப்ரஜா.''

''கதையில் மட்டும் அந்த மாதிரி எழுதி யிருக்கீங்களே!''

''கதை வேறு. வாழ்க்கை வேறு.''

''எழுதறது வியாபாரத்திற்காகவா? வெறும் காசுக்காகவா? எழுதற கொள்கை யைக் கடைப்பிடிக்கும் உறுதி இடையாதா உங்களுக்கு? இது கோழைத்தனம் இல் லையா? இப்ப நான் சொன்ன விஷ யத்தையே நம்ம கல்யாணத்திற்கு அப்புற மாச் சொல்லியிருந்தா, அல்லது கடைசி வரை சொல்லாமலேயே இருந்திருந்தா என்ன செய்திருப்பீங்க?''

சுப்ரஜாவின் குரலிலும் ஆவேசம் கலந்து வந்தது.

''அது வந்து...'' முரளி தடுமாறினான்.

''மிஸ்டர் முரளி, நம்மால எதை முடி யுமோ அதைத்தான் அடுத்தவங்களுக்குச் சொல்லலாம். தன்னால் கொஞ்சம் கூடக் கடைப்பிடிக்க முடியாத வழிமுறைகளை - கொள்கைகளை எல்லாம் மற்றவர்களுக்கு மட்டும் அறிவுரையா எடுத்துச் சொல்றது என்னைப் பொறுத்தவரை கூத்த அயோக் யத்தனம். திருட்டுத்தனம்.''

''என்ன இது இவ்வளவு ரஃபா பேசறீங்க? உங்களைக் கல்யாணம் பண் ணிண்டு எப்படி நான் குடித்தனம் நடத்த றது? அதனால்....''

''நீங்க என்ன சொல்வீங்கன்னு தெரியும். பொண்ணுப் பிடிக்கலைன்னு சொல்

தயிர் சரியாக உறையா விட்டால் பால் மீது குறை கூறுவீர்களா

அநேக இல்லத்தரசிகள், தயிர் சரியாக உறையாவிட்டால் பாலின் மீது குறை கூறுவார்கள். ஒரே சீராக இல்லையென்றே, தரத்தைப் பற்றியோ குறை கூறுவார்கள். எப்போதும் பால் ஒரு சீராக இருப்பதற்கும், சிறந்த தரத்துடன் இருக்கவும் தினமும் அமுல் மில்க் பவுடர் உபயோகியுங்கள்.

அமுல் மில்க் பவுடர் கொண்டு நீங்கள் தூய்மையான ஆடை நிறைந்த பாலை நொடியில் தயாரித்து விடலாம். அப்படியே அருந்தலாம். தேனீர், காப்பி, தயிர், மோர், பாயசம், கஸ்டர்ட், கேக், ரஸகுல்லா... எது வேண்டுமோ தயாரிக்கலாம்.

அமுல்
மில்க் பவுடர்

வீட்டினுள் இயங்கும் ஒரு பால்பண்ணை.

OPERATION FLOOD

விற்பனைக்கு விடுப்போர் : குஜராத் கோ-ஆப்பரேடிவ் மில்க் மார்க்கெடிங் ஃபெடரேஷன் லிட்., ஆனந்த் 388 001

கல்கி 50

இணைந்து வழங்குகிறது
சிங்கப்பூர் பயணப் பரிசுத் திட்டம்

சுலபமாக ஒரு சிங்கப்பூர்ப் பயணம்! அதுவும் இலவசமாக! கீழுள்ள வெற்றிடத்தில் குறிச் சிரிப்பை வரவழைக்கும் ஒரு ஜோக் அல்லது ஓர் அறுபவத் துணுக்கை எழுதியனுப்புங்கள். பிரசுரமாகும் ஒவ்வொன்றுக்கும் பின் வரும் ஆகஸ்ட் வரை நடக்கும் இப்போட்டியில் வாருடைய ஜோக்/துணுக்கு அதிகமாகப் பிரசுரமாகிறதோ அவருக்கு ஜோடியாகச் சிங்கப்பூர் சென்று வந்து கல்கிக்குப் பேட்டி தரும் வாய்ப்பு!

முடிவு தேதி : 24.6.91

ஜோக்/துணுக்கு :

என் பெயர் : _____

விலாசம் : _____

_____

_____

RAJ TRAVELS & TOURS LTD.

விட்டுப் போய்டுவீங்க. உங்களால் அது தான் முடியும்.. அவ்வளவுதான் முடியும். முகத்துக்கு நேராக் கைதீட்டி, பொய் முகங்களை உரிச்சுக் காட்டினா, அவங்க மேலே கோபம் வர்றது இயல்புதான். உடனே நகர்ந்திடுவீங்க. இதுவும் உங்களோட பலவீனத்தைத்தான் காட்டுது. இப்படி தப்பித்து ஓடப் பார்க்கறதும் உண்மையை எதிர்த்து நிற்கத் தைரியமில்லாத கோழைத்தனத்தைத்தான் வெளிப்படுத்துது....''

முரளிக்குக் கோபமும் எரிச்சலும் பொங்கியது. என்ன சொல்வது எனத் தெரியாமல், சடசடவெனப் படிகளில் இறங்கிச் சென்றான்.

அவன் இறங்கி வந்ததைப் பார்த்ததும் மீனாட்சி சுந்தரம் மேலே வந்தார்.

''கப்ரஜா... கப்ரஜா''

''என்னப்பா?'' என்றபடி கப்ரஜா திரும்பினாள்.

''என்னம்மா ஆச்சு... ரெண்டு பேரும் பேசினீங்களா? சந்தோஷம்தானே?''

''பேசினோம்பா. முடிவுதான் வேறே மாதிரி.''

''என்னம்மா சொல்றே?''

''ஆமாம்பா இந்த மாப்பிள்ளை எனக்கு வேண்டாம்!''

''ஏன்? காரணம் என்ன? எதனால் இந்த முடிவு?''

''நான் ஒரு சின்னப் பொய் சொன்னேன். அதிலேயே அவரோட சாயம் வெளுத்துப் போச்சு.''

''பொய்யா. என்ன சொல்லறே கப்ரஜா?''

தங்களுக்குள் நடந்த பேச்சுக்களைச் சொன்னாள் கப்ரஜா.

''அவரோட போலித்தனத்தைத் கட்டிக் காட்டினேன். எழுதறதுக்கும் நடந்துக்கறதுக்கும் உள்ள வித்தியாசத்தை எடுத்துக் காட்டினேன். அவருக்குக் கோபம் வந்து போய்ட்டார். இனி அவர் சம்மதம் தெரிவிச்சாக்கூட எனக்கு வேண்டாம். இவ்வளவு போலித்தனமும் வேஷமும் உள்ள ஒருத்தரைக் கல்யாணம் செஞ்சுண்டா எனக்குக் கஷ்டம்தானேப்பா. எனவே, இந்த மாப்பிள்ளை டைக்கலைன்னு வருத்தப்படக் கூடாது. சந்தோஷம்தான் படணும். அதிக படிப்போ, அந்தஸ்தோ, அழகோ இல்லாவிட்டாலும் போலித்தனம் காட்டாத, பொய் வேஷம் போடாத ஒரு நல்ல மாப்பிள்ளை எனக்கு நிச்சயம் கிடைப்பார்ப்பா.''

தோளில் சாய்ந்து கொண்ட தம் மகளை ஆதரவுடன் தட்டிக் கொடுத்தார் மீனாட்சி சுந்தரம்.

500 உஜாலா ரொக்கப் பரிசுகள்

உஜாலா

உஜாலாவின் விஞ்ஞானத் தன்மை

மனோதத்துவம்

குழந்தைகள் இளமையில் வெள்ளை ஆடைகள் எந்த அளவிற்கு சுகாதாரம், ஒழுக்கம், இலட்சியம் மற்றும் இதரப் பண்புகளை வளர்க்க உதவுகின்றன என மனோதத்துவ நிபுணர்கள் உங்களுக்கு கூறுவார்கள்

பௌதீகம்

வெள்ளை ஆடைகள் எவ்வாறு சூரிய ஒளியிலிருந்து பெருமளவு உஷ்ணத்தை வெளியேற்றி சருமத்தைக் காக்கின்றன என்றும் உஷ்ணத்தினால் சருமம் கருமையாகாமல் எவ்வாறு காக்கின்றன என்றும் பௌதீக நிபுணர்கள் உங்களுக்கு கூறுவார்கள்

இரசாயனம்

ஒப்பற்ற, நுட்பமான இரசாயனம் மட்டுமே பளிச்சென்ற, மாசற்ற ஒளி வீசும் வெண்மையை வெள்ளை ஆடைகளுக்கு தர முடியும். இவை அனைத்தும் அடங்கிய தயாரிப்பே உஜாலா. இது ஒரு சாதாரண சோட்டு நீலம் அல்ல. நீரில் விரைவாக கரைய வேண்டும் — உடைகளின் இழைகளில் ஆழ ஊடுருவி வேகமாக உறிஞ்சப்பட வேண்டும் — விஞ்ஞான முறை அற்ற தயாரிப்புகளில் இருப்பது போன்ற இரசாயனம் இருத்தல் கூடாது. அவற்றை தொடர்ந்து உபயோகித்தால் துணிகளுக்கு சேதமுண்டாகும் அல்லது குழந்தைகளின் சருமத்திற்கு தீங்கு உண்டாக்கும். தவிர துணிகளில் படிந்திடும் கறை போன்றவையினால் சோபையிழந்து காணப்படும் இவை அனைத்து விஷயங்களையும் மனதில் கொண்டே, அங்கக இரசாயனத்தில் டாக்டர் பட்டம் பெற்றுள்ள விஞ்ஞானி ஒருவரால் பல்வேறு ஆராய்ச்சி மற்றும் பரிசோதனை செய்யப்பட்டு உருவாகி உள்ளது உஜாலா.

உஜாலா பாதுகாப்பின் சின்னம்

வாய்வழி நச்சு மூலம் (ORAL TOXICITY TEST) நடத்திய ஆராய்ச்சிகள், உஜாலா நச்சுத் தன்மை அற்றது என நிருபித்து உள்ளன. சரும அரிப்பு பரிசோதனை (SKIN IRITATION TEST) நடத்தியதில் சருமத்திற்கு அரிப்பு ஏற்படுத்துவது இல்லை என்றும் கண்டு அறியப்பட்டுள்ளது.

உஜாலாவில் ஆடைகளுக்கு சேதமுண்டாக்கும் எந்த இரசாயனமும் கிடையாது. எனவேதான் உஜாலாவை மீண்டும், மீண்டும் வாங்குகிறார்கள்

500 உஜாலா ரொக்கப் பரிசுகள் :

இன்றைய நுகர்வோர்கள் இலவசமாய கிடைக்கும் மற்ற பொருள்களுக்காக இன்றி உஜாலா போன்ற நல்லதொரு பொருளை வாங்குவதன் காரணம் என்ன ? நுகர்வோர்கள் உஜாலாவை எப்படி கவனித்து வாங்குகிறார்கள் என்றும் ? எப்படி உஜாலாவைப் போல் தோற்றமளிக்கும் விஞ்ஞான முறையற்ற சோட்டு நீலங்களை வாங்குவதை தவிர்க்கிறார்கள் என்பதையும் உஜாலா பாட்டிலில் உள்ள விவரத்திற்கு ஜூன் 30தி 1991. முன்பு அனுப்பவும். நகுந்த விமர்சனங்களுக்கு ரு. 50 வீதம் 500 நபர்களுக்கு ரொக்கம் பரிசாக வழங்கப்படும்.

RAM/JL/2.05

JYOTHY LABORATORIES. BOMBAY.

சுடுகின்ற நினைவுகள்

''மானேஜர் சார், ஜயந்தி ரொம்பப் பாவம். சாதாரணக் கை கால் வீக்கம்னு ஆஸ்பத்திரியிலே அட்மிட் செய்து, விளையாட்டுப் போல ஒரு வாரம் ஆகியும், இன்னும் டிஸ்சார்ஜ் ஆகலே. நீங்க போய்ப் பார்த்தீங்கள்னா, அவளுக்கு மனசு கொஞ்சம் ஆறுதலா இருக்கும். நானும் சாயங்காலம் போகப் போறேன் சார்'' - என்றாள் என் ஸ்டெனோ.

''தாராளமாப் போய் வாம்மா கோமதி. ஆனா....'' - என்று முடிப்பதற்குள் -

''ஆனா... என்ன சார்? நீங்களும் கண்டிப்பாகப் போய்ப் பார்க்கத்தான் வேண்டும். உங்க தயக்கத்திற்கான காரணமெல்லாம் எனக்குத் தெரியும். நீங்க எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டாம். நீங்க தனியாப் போய்ப் பார்க்கச் சங்கடமா இருந்தச் சின்னா, என்னோட வாங்க. இந்த மூன்று வருஷங்கள்லே அவள் எப்படி எப்படியோ மாறிப் போயிட்டா. உயிருக்கே டாக்டருங்க கெடு வச்சிக்கிட்டிருக்கிற இந்த நிலையிலே அவளாலே சரியாப் பேசக் கூட முடியாது சார்'' - என்றாள் கோமதி, என் மன நிலையை முழுக்க முழுக்கப் புரிந்து கொண்டு.

''சங்கடமெல்லாம் ஒன்றுமில்லைம்மா. நீ தனியாகவே புறப்பட்டுப் போ. முன்பெல்லாம், பனைமரத்துக்குக் கீழே பாலைக் குடிச்சாத்தான் தப்பாப் பேசினாங்க. இப்போ, எந்த மரத்துக்குக் கீழே குடிச்சாலும் தப்பாவே பேசற காலம்! நான் இந்த ஆபீசிலே இனி ரிடையர் ஆகிற வரைக்கும் நல்லவன்னு பெயரே எடுக்க முடியாது. ஒரு நாலு நாள் போகட்டும். அதுக்குள்ள மனசைத் திடப்படுத்திக்கிட்டு ஜயந்தியைப் போய்ப் பார்க்க முயற்சி பண்றேன்...''

என் அறையை விட்டு அகன்றாள் கோமதி. அவளுக்கு என் பதில் திருப்தி அளிக்கவில்லை என்பது அவள் முகத்திலும் நடையிலுமே தெரிந்தது.

நான்கு நாட்கள் கழித்துப் போய்ப் பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டேனே தவிர, ''சீ, நீங்களும் ஒரு மனிதனா? சொந்த அக்கா தங்கையுடன் பிறந்தவர் தானா நீங்கள்?'' - என்று அவள் மூன்று ஆண்டுகளுக்கு முன் சொல்லிய வார்த்தைகள் இப்போது கூட என்னைச் சுட்டெரித்துக் கொண்டிருக்கின்றன. நாவினால் சுட்ட வடு.

அன்று காலை ஓர் அவசர காரியமாக வீடு திரும்பிச் செல்ல வேண்டியிருப்பதாகவும் இரண்டரை மணிக்குத் திரும்பி விடுவதாகவும் பர்மிஷன் கேட்டாள் ஸ்டெனோ ஜயந்தி.

''இன்று நீ முக்கியமான பத்து பர்ச்சேஸ் ஆர்டர்களையும், ஏழெட்டுக் கடிதங்களையும் டைப் செய்து டெஸ்பாட்ச்சுக்குத் தயாராக வைக்க வேண்டியிருக்கிறது'' என்று நினைவூட்டினேன்.

''நான் தான் எப்படியும் மத்தியானம் வந்து விடுவேனே!'' என்று நம்பிக்கையோடு கூறிவிட்டு என் அறையிலிருந்து வெளியேறினாள்.

பிற்பகல் இரண்டரை மணிக்கே வந்து விடுவேன் என்று சவால் விட்டுச் சென்றவள், மாலை நான்கு மணி ஆகியும் வரவில்லை. ஐந்து மணிக்குச் 'சே!' என்று வெறுப்புடன் நான் எழுந்திருப்பதற்கும், ஜயந்தி என் அறையினுள் நுழைவதற்கும் சரியாக இருந்தது.

''சாரி சார்!'' - என்று சொல்லிய ஜயந்தியைக் கண்களாலேயே சுட்டெரித்தேன்.

''இந்த 'சாரி' சமாசாரமெல்லாம் வேண்டாம். மரியாதையாக வேலையை முடி.'' - என்று ஆத்திரத்துடன் சொன்னேன்.

''கண்டிப்பாகச் செய்து விட்டுப் போகிறேன். ஆனால்....''

''நீ என்ன சொல்லப் போகிறாய் என்று எனக்குத் தெரியும். தனியாய் இருக்க வேண்டுமே என்று தயங்குகிறாய்! நீ வேலையை முடிக்கும் வரை நானும் கண்டிப்பாய் இருப்பேன். பயப்பட வேண்டாம்.''

சுஜன்

ஜயந்தி வேலையை முடித்தபோது இரவு மணி ஏழாகி விட்டது. டைப் செய்த அத்தனை கடிதங்களையும், என் மேஜை மேல் வைத்துவிட்டு, ''இப்பொழுது உங்களுக்குத் திருப்தி தானே சார்?'' என்று சற்று கூடாகவே கேட்டாள்.

''குரலை உயர்த்திப் பேசறது கலபம். ஆனா, இன்றிரவே இந்தத் தபால்கள் டிஸ்பாட்ச் ஆகலைன்னா என் வேலையே போய்விடக் கூடிய ஆபத்தில் நான் இருக்கிறேன் என்பது உனக்குத் தெரியுமா? ஹ்ம்ம்...'' - என்று சொல்லிக் கொண்டே தபால்களில் கையெழுத்திட்டேன்.

''போய்ட்டு வரேன் சார்'' என்று கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே சென்றாள் ஜயந்தி.

நான் வேலையை முடிப்பதெற்கென்றே காத்திருந்தது போல் திடீரென்று மின் தடை ஏற்பட்டு விளக்குகள் அணைந்து விட்டன. சில கணங்களில் ''சே, நீங்களும் மனிதர் தானா?'' - என்று ஆத்திரத்துடன் கேட்டுக் கொண்டே, தட் தட்டென்று சப்தித்தபடி காலடி வைத்துத் திரும்பி வந்தாள் ஜயந்தி.

''என்னம்மா ஜயந்தி, என்ன ஆச்சு?'' - என்று நான் ஆச்சர்யத்துடன் வினவினேன்.

''ஏன் சார்.... எத்தனை நாளா இந்தத் திட்டம்? வெளியே போற கதவைப் பூட்டிட்டா நான் உங்களுக்கு அடிமையாய்டுவேனா? நீங்க அக்கா தங்கச்சி

''என்ன மாப்பிள்ளை, நீபா வளிக்கு இப்பவே வந்துட்டீங்க?''

''இப்பத்தான் 'பத்த், கலாட்டா, வன்முறைன்னு அடிக்கடி வந்து பஸ் எல்லாம் ஒடறதில்லையே, அதனால்தான் புத்திசாலித்தனமா இப்பவே வந்துட்டேன்!''

- ஸ்ரீ. வி. சத்யநாராயணன்.

''நடிகை நளினாஸ்ரீயை நம்பி மோசம் போயிட்டதாச் சொல்றீங்களே, உங்களை விவாகரத்து பண்ணிட்டாங்களா?''

''அப்படிச் செய்திருந்தால்தான் நல்லதாச்சே; விவாகரத்து பண்ணாமல்ல என்னைப் பழி வாங்கறா!''

- சீர்காழி வி. ரேவதி

''நம்ம தொகுதியில் நிற்கிற இரண்டு வேட்பாளர்களில் நீ வோட்டுப் போட்ட வேட்பாளர்தான் நிச்சயம் ஜெயிப்பார்னு எப்படிச் சொல்றே!''

''நான்தான் இரண்டு பேருக்குமே வோட்டுப் போட்டிருக்கேனே!''

- ஞா. ஞானமுத்து.

யோட..... பிறக்கலையா?''

நான் புழுவாய்த் துடித்துப் போய் விட்டேன். ''ஐயோ, ஜயந்தி! நான் அப்படிப் பட்டவன் இல்லேம்மா...''

மீண்டும் விளக்கு ஒளி சிந்த ஆரம்பிக்கும் வரை நான் தவித்த தவிப்பு! நரகம்தான்! சற்று நேரத்தில் ''அரே சாப்! இன்னும் நீங்கள்...'' - என்று சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்தான் வாட்ச்மேன் ராம்சிங்.

அவனைக் கேட்டபோது, உண்மை தெரிந்தது. மின்சாரம் நின்ற போது, எல்லோரும் வேலை முடித்து போய்விட்ட நினைவில் வாட்ச்மேன் வெளியே கதவைப் பூட்டிக் கொண்டு, 'டீ' குடித்துவிட்டு வந்திருக்கிறான். மின்சாரம் வந்த பிறகு உள்ளே விளக்கு எரிகிறதே என்று அணைப்பதற்காகக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்திருக்கிறான். ஆயினும் இந்த உண்மையை ஜயந்தி நம்பவில்லை.

வாட்ச்மேனைக் கைக்குள் போட்டுக் கொண்டு நான் நடத்திய நாடகம் அது என்று சாதித்தாள். அவளுடைய வீரா வேசம்தான் என்னை அடக்கி அவள் மானத்தைக் காப்பாற்றியதாக நம்பினாள்.

மறுநாள், அலுவலகம் பூராவும் செய்தி பரவிவிட்டது. தலைமை அலுவலகத்திலிருந்து விசாரணை எதுவும் இல்லாமலேயே, எனக்கு மாற்றல் உத்தரவு வந்து விட்டது. உதக மண்டலம் சென்று கடுங் குளிரிலும், பனியிலும் இரண்டு வருடங்கள் கஷ்டப் பட்டபின், மறுபடியும் சென்னைக்கே மாற்றினார்கள். நல்ல வேளையாக 'ஜயந்தி' பர்ச்சேஸ் செக்ஷனிலிருந்து ஸ்டோர்ஸ் பிரிவுக்கு மாற்றலாகியிருந்தாள். அவளை அன்றாடம் சந்திக்க வேண்டிய வேதனையில்லை.

கோமதியைப் போன்று, அன்றும் இன்றும் என்னை மதித்துப் போற்றிய பெண்கள் குரூப் ஒன்று, ''சாதாரணமாகப் பெண் பாவம் தான் பொல்லாததுன்னு சொல்வாங்க. ஆனா, உங்க விஷயத்திலே ஆண் பாவம் தான் பொல்லாததுன்னு நிரூபணம் ஆயிடுத்து சார். உங்க வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கிட்ட அந்த ஜயந்திக்கு இன்னும் கல்யாணமே ஆகலை'' - என்று சொல்லியபோது, உண்மையிலேயே என் மனம் தாங்க முடியாத துயரத்தை அடைந்தது.

டெலிஃபோன் ஒலித்தது.

ஜயந்தி அட்மிட் ஆகியிருந்த நர்ஸிங் ஹோமிலிருந்து தான் பேசினார்கள். ஜயந்தியின் இரண்டு சிறு நீரகங்களும்

பழுதுபட்டு விட்டதால் மாற்றுச் சிறு நீரகம் பொருத்தப்பட்டால் தான் அவள் ஒரு வேளை பிழைக்க முடியும் என்றும் தெரி வித்தார்கள்.

''கோமதி, நீ உடனே புறப்பட்டு, நர்ஸிங் ஹோமுக்குப் போ. நான் ஜயந்தி யின் சகோதரனைப் பார்த்துவிட்டு வருகி றேன்...'' என்றேன்.

''தயவு செய்து அங்கே போக வேண் டாம் சார். நாங்கள் நேற்றே போய்ப் பார்த்து, அவர் மனைவியிடம் வாங்கிக் கட்டிக் கொண்டது போதும். அவளுக்கு இருபத்தைந்தாயிரம், ரூபாய் வேண்டு மாம், கணவனின் சிறு நீரகத்தை விட்டுக் கொடுப்பதற்கு'' - என்று சொன்னாள், கோமதி.

எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. அதை மறைத்துக் கொண்டு, ''கோமதி, நீ உடனே புறப்பட்டுப் போய் ஜயந்தியைப் பார்த்து எதற்கும் கவலைப் படாமல் தைரியமாக இருக்கச் சொல்லு. என்னுடைய ஃபிக்சட் டெபாஸிட் ரசீதுகள் மீது கடன் வாங்கி, அவள் சகோதரனைச் சம்மதிக்க வைக்கி றேன்'' - என்று சொல்லிவிட்டுக் கிளம்பி னேன்.

ஆனால் என்ன ஏமாற்றம்! பாவிகள்! உறவும், தொடர்பும் இல்லாத ஒரு பெண் ணுக்கு நான் உதவத் துணிந்ததைத் தவறாக எடை போட்டு, ஐம்பதாயிரம் என்று வாய் கூசாமல் ரேட்டை உயர்த்தவே, 'சே! நீங்க ளும் மனிதர்கள் தானா?'' - என்று காறி உமிழாத குறையாகக் கேட்டு விட்டு நர்ஸிங் ஹோமுக்கு விரைந்தேன். டாக்டர்க ளுடன் பேசினேன். சற்று நேரம் சென்று....

''வெல்டன் மிஸ்டர் மனோகர். தெய்வத் திடம் நீங்கள் வேண்டிக் கொண்டது வீண் போகவில்லை. உங்கள் ப்ளட் குரூப் ஜயந்தி யின், ப்ளட் குரூப்போடு ஒத்துப் போகிறது. டிஷ்யூ கல்சரும் சரியாக இருக்கிறது. நாளை கிட்னி ட்ரான்ஸ்ப்ளாண்ட் ஆபரேஷன் செய்து விடலாம்'' - என்று அங்கே வந்த தலைமை டாக்டர் கார்த்திக் கூறினார்.

''மானேஜர் சார், இவ்வளவு தங்கமான உங்களை அன்று சின்னத் தனமாகப் பேசிய தற்கு, என்னை மன்னியுங்கள். இன்று மன அமைதியோடு என்னைச் சாக விடுங்கள். இன்னும் திருமணமே ஆகாத உங்களுடைய இந்தச் செயல், உங்கள் பெற்றோரையும் உங்கள் உடல் நிலையையும் எவ்வளவு பாதிக்கும்? உங்களுடைய உதவிக்கு நன்றி. தயவு செய்து இந்த விஷப் பரீட்சை வேண் டாம்.'' - என்று பிடிவாதமாக மறுத்து விட் டாள் ஜயந்தி.

16பக்க வண்ணப்படக்கதை
கோகுலம்
ஜூலை இதழில்

சிவகாமியின்

முப்பத்தேழாம் அத்தியாயம்

தியாகப் போட்டி

சிவகாமியின் அலறலைக் கேட்ட சர்ப்பம் சற்று நேரம் நிகைத்து நின்றது. பிறகு, தன் வழியே போய் விட்டது.

தூரத்தில் பாறைகளுக்கு அப்பாலிருந்து, ''சிவகாமி! என்னைக் கூப்பிட்டாயா?'' என்று ஆயனரின் குரல் கேட்டது. ''இல்லை அப்பா!'' என்று சிவகாமி உரத்த குரலில் கூறினாள்.

இந்த இரண்டு வார்த்தைகள் மாமல்ல ருக்கு எவ்வளவு மகிழ்ச்சியையும் நன்றி உணர்ச்சியையும் உண்டாக்கின என்பதைச் சிவகாமி அவருடைய கரங்களின் ஸ்பரிசத் தினால் உணர்ந்தாள்.

இருவரும் மரத்தடியிலிருந்து சற்று அப்பால் சென்று, பட்டப் பகல் போல் வெளிச்சமாயிருந்த பாறையின் மீது உட் கார்ந்தனர்.

''மன்னிப்புக் கேட்பதாகச் சொன் னாயே, சிவகாமி! எதற்காக?'' என்று மாமல்லர் கேட்டார்.

''தங்களைப் பற்றிப் பொல்லாத வசை மொழிகளைக் கேட்டுக் கொண்டு சும்மா இருந்ததற்காக! அம் மொழிகளை நம்பிய தற்காக!''

''இவ்வளவுதானே! மன்னித்து விட் டேன். அப்படி யார் என்னைப் பற்றி என்ன கூறினார்கள்?''

''நாகநந்தி என்னும் புத்த பிக்ஷுவைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோமல்லவா? அவர்தான் தங்களைப் 'பயங்கொள்ளிப் பல்லவன்' என்றார். தாங்கள் போர்க் களத்துக்குப் போகப் பயந்து கொண்டு, காஞ்சிக் கோட்டைக்குள் ஒளிந்து கொண் டிருப்பதாகச் சொன்னார். இன்னும் என்னவெல்லாமோ சொன்னார்....''

சிவகாமி கூறியதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த மாமல்லர், ''இதற்காக நாகநந்தியின் மேல் எனக்குக் கோபம் இல்லை. என் தந்தைபேரில்தான் கோபம். இராஜ்யத்தைத் தேடி மகாயுத்தம், வந்தி ருக்கும் போது, நான் கோட்டைக்குள் ளேயே அடைபட்டுக் கிடந்தால் 'பயங் கொள்ளி' என்று ஏன் ஜனங்கள் சொல்ல மாட்டார்கள்?... அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை, ஆனால் அதையெல்லாம் நீயும் நம்பினாயா, சிவகாமி?'' என்றார்.

''ஆம், பிரபு! நம்பினேன். தங்களைப் பிரிந்திருந்ததில் என் மனவேதனையைச் சகிக்க முடியாமல் அந்த அவதூறுகளை நம்பினேன். 'இவ்வளவு மட்டமான மனுஷ ரின் காதல் இல்லாமற் போனால் தான் என்ன?' என்று எண்ணுவதில் ஓர் ஆறுதல் உண்டாயிற்று. ஆனாலும், என் வெளி மனம் அப்படி நம்பியதே தவிர, என் உள்நெஞ்சம் 'இதெல்லாம் பொய்' என்று சொல்லிக் கொண்டிருந்தது. 'மாமல்லர் வீர புருஷர்; அவருடைய காதலுக்கு நீ பாத்திர மானவள் அல்ல! ஆகையால், அவரைப் பற்றித் தாழ்வாக எண்ணுகிறாய்! இது உன் நீச குணம்' என்று என் உள் இதயம் எனக்கு இடித்துச் சொல்லிக் கொண்டிருந்தது. பிரபு! என்னை மன்னிப்பீர்களா?''

''சிவகாமி! உன்னை மன்னிப்பதற்குரிய குற்றம் எதுவும் நீ செய்யவில்லை. அவ்வ ளவு மன வேதனைக்கு உன்னை ஆளாக் கியதற்காக நான்தான் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டும். இனிமேல் என்னைப் பற்றி அத்தகைய அவதூறுகளை நம்ப மாட்டாயல்லவா?'' என்று கேட்டார் மாமல்லர்.

''ஒரு நாளும் நம்ப மாட்டேன். அந்தப் புத்த பிக்ஷுவை மறுபடி பார்க்க நேர்ந்தால் அவரை இலேசில் விடப் போவதில்லை!'' என்றாள் சிவகாமி. பிறகு, திடீரென்று எதையோ நினைத்துக் கொண்டு ''பிரபு! கூடு விட்டுக் கூடு பாயும் வித்தை என்று கதைகளில் சொல்கிறார்களே? அதிலே உங்களுக்கு நம்பிக்கை உண்டா?'' என்று

தயக்கத்துடன் கேட்டாள்.

''என்ன கேட்கிறாய், சிவகாமி! நம் பிக்கை உண்டா என்றால்?....''

''ஓர் உயிர் ஓர் உடலிலிருந்து இன் னொரு உடலுக்குப் போவது சாத்திய மாகுமா என்று கேட்டேன். அதாவது, ஒரு மனுஷர் பாம்பு உருவம் எடுத்துக் கொள்ள முடியுமா?....''

''இப்படிக் கேட்ட போது சிவகாமியின் உடம்பு மறுபடியும் நடுங்குவதை மாமல் லர் கண்டார். உடனே அவளை ஆதரவோடு தன் அகன்ற மார்பிலே சேர்த்து அணைத்துக் கொண்டு, ''இதென்ன வீண் பீதி! மனுஷ னாவது, பாம்பு உருவங் கொள்வதாவது? அப்படி ஒருவன் பாம்பு உருவம் எடுத்து உன்னைத் தீண்ட வரும் பட்சத்தில், நான் கருடன் உருவங்கொண்டு வந்து அவனை சம்ஹரிப்பேன். அல்லது உன் எதிரே அவனுடைய விஷப் பல்லைப் பிடுங்கி எறிவேன். நான் இருக்கும் போது உனக்கு ஏன் பயம்?'' என்றார்.

''பிரபு! எப்போதும் தாங்கள் என் அருகில் இருந்து என்னைப் பாதுகாத்துக் கொண்டிருப்பீர்களா? இந்த ஏழைப் பெண்ணைக் காப்பாற்றுவது ஒன்றுதானா உங்களுக்கு வேலை? உங்களுடைய பாது காப்பை எதிர்பார்த்து இராஜ்ய லக்ஷ்மி காத்துக் கொண்டிருக்கிறாளே?'' என்றாள் சிவகாமி.

''சிவகாமி! நீ மட்டும் ஒரு வார்த்தை சொல்லு! இராஜ்யம் எக்கேடாவது கெடட் டும் என்று விட்டு விட்டு உன்னோடு இருந்து விடுகிறேன். உன்னை விட எனக்கு இராஜ்யம் பெரிதல்ல...'' என்று மாமல்லர் கூறிவந்த போது, சிவகாமி குறுக்கிட்டாள்.

''பிரபு! அவ்வளவு சுயநலக்காரி இல்லை நான். அப்படி உங்களை எனக்கே உரிமைப் படுத்திக் கொள்ள வேண்டுமென்ற எண் ணம் எனக்கில்லை. விஸ்தாரமான சாம்ராஜ் யத்திற்கு உரிமை கொண்டவர் தாங்கள். வாழையடி வாழையாக வந்த பல்லவ வம்சத்தின் சிம்மாசனத்துக்குத் தனி உரிமை பூண்டவர். எத்தனையோ லட்சம் பிர ஜைகள் தங்களுடைய தோள் வலியையும் வாள் வலியையும் நம்பி இந்தப் பெரிய ராஜ்யத்தில் வாழ்ந்து கொண்டிருக்கி றார்கள். பொல்லாத பகைவர்களை விரட்டி அடித்துப் பிரஜைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு தங்களுடைய இந்த இரு புஜங்க ளிலும் சார்ந்திருக்கிறது. அத்தகைய புஜங்கள் இன்று இந்த ஏ ழை யை அணைத்துக் கொண்டிருப்பது என்னுடைய பூர்வ ஜன்மத்து சுகிர்தம். ஆனால், இந்த பாக்கியத்தினால் என் தலை திரும்பிப் போய் விடவில்லை. என் பகுத்தறிவை நான் இழந்து விடவில்லை. பல்லவர் குலம் விளங்க வந்த மாமல்லருடைய வலிமை யும் வீரமும் கேவலம் இந்தச் சிற்பியின் மகளைப் பாதுகாப்பதற்காக மட்டும் உப யோகப்பட வேண்டும் என்று ஒரு நாளும் சொல்ல மாட்டேன். அப்பேர்ப்பட்ட மகா னியாகத்தைத் தங்களிடம் நான் ஏற்றுக் கொள்ளவும் மாட்டேன். இந்தக் கிராம வாசிகள் புள்ளலூர்ச் சண்டையில் தாங்கள் நிகழ்த்திய வீரச் செயல்களைப் பற்றி உற்சாகமாகப் பேசுவது என் காதில் விழும் போது, என் உள்ளமும் உடலும் எப்படிப் பூரிக்கின்றன, தெரியுமா....?''

''சிவகாமி! இந்தக் கிராமவாசிகள் உன்னுடைய நடனக் கலைத் திறனைப் பற்றிப் பாராட்டும் போது, நானும் அப்ப டித்தான் பூரித்துப் போகிறேன். நினைத்துப் பார்த்தால், என்னுடைய சுய நலத்தைப் பற்றி எனக்கு வெட்கமாய்க் கூட இருக் கிறது.''

''தங்களிடம் ஒரு சுயநலத்தையும் நான் காணவில்லையே, பிரபு!''

''நீ காணமாட்டாய், சிவகாமி! உன்னு டைய காதலாகிற பொன்னாடையினால் என்னை நீ போர்த்தி விட்டுப் பார்க்கிறாய். அதனால் என்னிடமுள்ள குற்றங் குறை களை நீ காணமாட்டாய். ஆனால், என்னு டைய சுயநலத்தை நான் நன்றாக உணர் கிறேன். இறைவன் உனக்கு அற்புதமான கலைச் செல்வத்தை அளித்திருக்கிறார். அதையெல்லாம் நான் எனக்கென்று ஆக்கிக் கொள்ளப் பார்க்கிறேன். என்னைப் போன்ற சுயநலக்காரன் யார்? உன்னுடைய அற்புத நடனக் கலை இறைவனுக்கே உரியது - கேவலம் மனிதர்களுக்கு உரிய தல்ல என்று என் தந்தை கூறுவதுண்டு. அதன் பொருள் நேற்று இந்தக் கிராமத்துக் கோயிலில் நீ நடனமாடிய போதுதான் எனக்குத் தெரிந்தது. இறைவனுக்கு உரிய நிவேதனப் பொருளை நான் அபகரிக்கப்

பார்ப்பது, தெய்வத்துக்குச் செய்யும் அப சாரமாகாதா என்று கூட எண்ணமிட் டேன்...''

சிவகாமி அப்போது எழுந்து மாமல்ல ருக்கு முன்புறமாக வந்து குளிந்தாள். அவளுடைய உத்தேசத்தை அறிந்து மாமல்லர் அவளைத் தடுப்பதற்கு முன் னால், அவருடைய பாதங்களைத் தொட்டுத் தன் கண்களிலே ஒற்றிக் கொண் டாள். பின்னர் அவர் எதிரில் அமர்ந்து கூறி னாள்:- ''சுவாமி! என்னுடைய நடனக் கலை இறைவனுக்கே உரியதாயிருக்கும் பட்சத்தில், அந்த உரிமை பூண்ட இறைவன் தாங்கள்தான். அந்த நாளில் நான் ஆர்வத் துடன் என் தந்தையிடம் நடனக் கலையைப் பயின்றதன் காரணம், அடுத்த தடவை தாங்கள் வரும் போது தங்களுக்கு, ஆடிக் காட்டி மகிழ்விக்க வேண்டும் என்னும் ஆசையே. எனது நட னக் கலை கனிந்து, உணர்ச்சியும் உயிரும் பெற்றதெல் லாம் தங்களுடைய காதலினால்தான். என்னை மறந்து, ஆனந்தப் பரவச நிலையில் நான் ஆடும் போதெல்லாம், தங்க ளுடைய அன்புக்கு உரிமை பூண்டவள் என்னும் எண்ணமே, அந்த ஆனந்தப்

பரவசத்துக்கு ஆதாரமாயிருக்கிறது. திருநாவுக்கரசர் பெரு மானின் இனிய நீந்தமிழ்ப் பாடல்களைப் பாடிக் கொண்டு நான் அபிநயம் பிடிக்கும் போது தங்களுடைய திருவுருவந்தான் என் அகக்கண் முன்னால் நிற்கிறது. தங்களால் கிடைத்த இந்தக் கலைச் செல்வத்தை வேறொருவருக்கு உரிமையாக்க எனக்குப் பாத்தியதையில்லை. நடனக்கலை தெய்வத்துக்கும் எட்டாத கலையாகவேயிருக்கட்டும். தங்களைக் காட்டிலும் அது எனக்கு உயர்ந்ததல்ல. தாங்கள் வாய்திறந்து ஒரு வார்த்தை சொன்னால் போதும்; உடனே அந்த நடனக் கலையை இந்த நதிப் பிரவாகத்திலே விட்டு விட்டு, ஒரு முழுக்கும் போட்டு விடுகிறேன்.''

மடல் விரிந்த மாதுளை மொட்டுப் போன்ற சிவகாமியின் செவ்விதழ்களை மாமல்லர் தமது அகன்ற கரத்தினால் மூடினார். ''சிவகாமி! நீ இப்படியெல்லாம் சொல்லச் சொல்ல, என் தர்மசங்கடந்தான் அதிகமாகிறது. ஒருநாள் நீ இந்தக் கலையை விட்டு விடத்தான் வேண்டியிருக்கும் என்று எண்ணும் போது எனக்குப் பகீர் என்கிறது; பல்லவ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தினி அரங்க மேடையில் நின்று நடனமாடுவது என்பது நினைக்க முடியாத காரியம் அல்லவா? அதை எண்ணும் போதுதான் உண்மையிலேயே நான் உன்னுடைய தந்தையின் சிற்பக் கலைச் சீடனாக இருந்திருக்கக் கூடாதா என்று தோன்றுகிறது. அப்படியானால் இந்த மூன்று நாட்களைப் போல் நம் வாணாள் முழுதுமே ஆனந்த மயமாயிருக்குமல்லவா? சாம்ராஜ்யம் என்னத்திற்கு? யுத்தமும் இரத்த வெள்ளமுந்தான் என்னத்திற்கு? உண்மையாகவே சொல்கிறேன், சிவகாமி! நான் சக்கரவர்த்திக்குச் சொல்லி அனுப்பி விடுகிறேன், எனக்கு இராஜ்யம் வேண்டாம் என்று. நானும் நீயும் உன் தந்தையுமாகப் படகில் ஏறிக் கொண்டு இளம்புவோம். ரதியையும், சுகரையும் கூட அழைத்துக் கொள்வோம். எங்கேயாவது கடல் நடுவிலுள்ள தீவாந்தரத்துக்குப் போய்ச் சேர்வோம். அங்கே நமது வாணாளை ஆனந்தமாகக் கழிப்போம். என்ன சொல்கிறாய்? 'ஆகட்டும்' என்று சொல்லு!''

''ஒருநாளும் சொல்ல மாட்டேன்!'' என்று அழுத்தந்திருத்தமாகக் கூறிவிட்டுச் சிவகாமி மேலும் சொன்னாள்:-

''கதைகளிலே, காவியங்களிலே கேட்டிருக்கிறேன் - வீரப் பெண்கள் நாயகர்களுக்குப் போர்க்களத்தில் துணை நின்று சாஹஸச் செயல்கள் புரிந்தார்கள் என்று. தசரதருக்குக் கைகேயியும், அர்ச்சுனனுக்குச் சுபத்திரையும் போர்க்களத்தில் ரதம் ஓட்டினார்கள் என்றும் படித்திருக்கிறேன். அப்பேர்ப்பட்ட பாக்கியத்துக்கு நான் பிறக்கவில்லை. போர்க்களத்திற்கு என்னால் வர முடியாது. இரத்தத்தைக் கண்டால் நான் மூர்ச்சையடைந்து விடுவேன். ஆடவும் பாடவும் அலங்காரமாகக் கொலுவிருக்கவும் பிறந்த பேதைப் பெண் நான். ஆனால், தங்க

ளையும் என்னைப் போலாக்க உடன்பட மாட்டேன். சிம்மாசனத்தில் அமர்ந்து சாம் ராஜ்யம் ஆளவும் போர்க்களத்தில் பகை வர்களைச் சின்னாபின்னம் செய்யவும் பிறந்த தங்களைக் கல்லுளி பிடித்து வேலை செய்ய விட மாட்டேன். வாளும் வேலும் பிடித்து எதிரிகளைத் துவம்சம் செய்ய வேண்டிய கைகளை ஆடல் பாடலுக்குத் தானம் போடும்படி விட மாட்டேன். சுவாமி! இராஜ்யம் என்னத்திற்கு? யுத்தம் என்னத்திற்கு? என்றெல்லாம் இனிமேல் சொல்லாதீர்கள். அவ்விதம் தாங்கள் சொன்னால், இந்தப் பாவியின் காரண மாகத்தானே இப்படித் தாங்கள் சொல்கி றீர்கள் என்று எண்ணிப் பிராணத் தியாகம் செய்து கொள்வேன்!''

''சிவகாமி! கையில் கல்லுளி பிடித்து வேலை செய்யும் சிற்பியின் இரத்தம் மட்டும் உன் உடம்பில் ஓடவில்லை. பழந் தமிழ் நாட்டு வீரத் தாய்மாரின் இரத்தமும் ஓடுகிறது. மணக்கோலம் பூண்ட மணவாள னைப் போர்க்களத்துக்கு மனமுவந்து அனுப்பிய வீரத் தமிழ் மங்கையின் இரும்பு நெஞ்சம் உன்னிடமும் இருக்கிறது. உண் மையில் வீர பத்தினியாவதற்குரியவள் நீதான்! போர்க்களத்துக்கு என்னோடு நீ வர வேண்டியதில்லை. ரத சாரத்தியமும் செய்ய வேண்டியதில்லை. ஆனால், இவி நான் எப்போது போர்க்களம் சென்றாலும், என்னுடைய நெஞ்சில் நீ இருந்து கொண்டி ருப்பாய். சற்று முன் நீ கூறிய வீர மொழிகள் என் செவியிலே ஒலித்துக் கொண்டிருக்கும். உன்னுடைய காதலின் நினைவு எனக்கு இணையற்ற வீரத்தையும் துணிவையும் ஊட்டிக் கொண்டிருக்கும்....''

''சுவாமி! வீர பல்லவ வம்சத்தில் பிறந்து, பதினெட்டு வயதிற்குள் தென் னாட்டிலுள்ள ம ல் ல ர் க ள ை யெ ல் லாம் வென்று, மகாமல்லர் என்று பெயர் பெற்ற தங்களுக்கு, இந்த ஏழைப் பெண்ணின் நினைவுதானா நீரமும் துளிர்ச்சலும் ஊட்ட வேண்டும்? புள்ளலூர் யுத்தத்திலே தாங்கள் எதிரிகளைச் சின்னாபின்னம் செய்து, உலகமே ஆச்சரியப்படும்படியான வெற்றி கொண்டது, இந்த ஏழைப் பெண்ணின் ஞாபகத்தில்தானா?.... கேவலம் ஒரு எட்டுக்கால் பூச்சியைக் கண்டு கதி கலங்கு பவள் நான்! தங்களுக்கு ஞாபகமிருக் கிறதா? நமது குழந்தைப் பிராயத்தில், ஒருநாள் நீங்களும் நானும் என் தந்தையின் சிலைகளுக்குப் பின்னால் ஓடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருந்த போது, ஒரு பெரிய கரப்பான் பூச்சியைப் பார்த்து, 'ஓ'வென்று அலறி விட்டேன். நீங்கள் ஒளிந்து கொண்டிருந்த இடத்திலிருந்து ஓடி வந்து என்னைக் கட்டி அணைத்துத் தேறுதல் கூறினீர்கள். 'என்ன? என்ன?' என்று கேட்டீர்கள். நான் முதலில் சொல்வ தற்கு வெட்கப்பட்டு அப்புறம் உண்மை யைச் சொன்னேன். தாங்கள் நம்பவே இல்லை. 'கரப்பான் பூச்சிக்குப் பயப்பட வாவது? பொய்! என்னை ஒளிந்து கொண்டிருந்த இடத்திலிருந்து வெளியே வரச் செய்வதற்காகவே நீ இப்படிப் பாசாங்கு செய்தாய்!' என்றீர்கள்; நிஜமாக நான் அப்போது பயப்பட்டேன். சற்று முன்னால் இங்கே பாம்பைக் கண்ட போதும் எனக்கு உண்மையில் பயமாய்த்தான் இருந்தது..... பாருங்கள், இப்போது கூட என் உடம்பு நடுங்குவதை!''

மாமல்லர் மீண்டும் முன்போல சிவகாமியைத் தனது வலிய புஜங்களினால் சேர்த்து அணைத்துக் கொண்டு, ''இதென்ன அசட்டுத்தனம், சிவகாமி! ஏன் இப்படி நடுங்குகிறாய்?'' என்று கேட்டார்.

''ஏனோ தெரியவில்லை. சில காலமாக எனக்கு அடிக்கடி இம்மாதிரி பயம் உண்டாகிறது. ஏதோ ஒரு பெரிய அபாயம் - இன்னதென்று தெரியாத விபத்து என் னைத் தேடி வந்து கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. சுவாமி தங்களிடம் ஒரு இரகசியம் சொல்லுகிறேன். என் தந்தை யிடம் கூட அதை நீங்கள் சொல்லக் கூடாது....''

''சொல்லு, சிவகாமி!''

''காஞ்சியில் திருநாவுக்கரசர் மடத்திலே நான் மூர்ச்சை அடைந்து விழுந்த அன்று, எனக்குப் பிரக்ஞை வந்ததும் தாங்கள் நயன பாஷையில் விடைபெற்றுக் கொண்டு போய் விட்டீர்கள். சற்று நேரம் கழித்து, நானும் என் தந்தையும் வாகீசப் பெருமா னிடம் விடைபெற்றுக் கொண்டு கமலியின் வீட்டுக்குக் கிளம்பினோம். அப்போது நாவுக்கரசர் என் தந்தையைப் பின்னால் நிறுத்திச் சில வார்த்தைகள் மெல்லிய குரலில் கூறினார்: 'உங்கள் பெண் மகா பாக்கியசாலி! உலகத்தில் இல்லாத தெய்வீகக் கலை அவளிடம் இருக்கிறது. ஆனால் அவளைப் பார்க்கும்போது ஏனோ என் மனத்தில் துயரம் உண்டாகிறது! ஏதோ ஒரு பெரிய அபாயம் அவளுக்கு வரப் போவதாகத் தோன்றுகிறது. ஜாக்கிரதை யாகப் பார்த்துக் கொள்ளுங்கள்' என்று அப்பெருமான் கூறியது என் காதிலும் விழுந்தது. அதைக் கேட்டதிலிருந்து.....''

''அந்த மகா புருஷர் கூறியது உண்மை தான், சிவகாமி! உனக்குத்தான் பெரிய அபாயம் வந்ததே! இந்த வெள்ளத்தைக் காட்டிலும் பெரிய அபாயம் வேறு என்ன வர முடியும்? கடவுள் அருளால் அதிலி ருந்து தப்பி விட்டாய்!.... இனிமேல்

அருள்வாக்கு

சக்தி ஜாஸ்தியாக ஆக ஆனந்தம் ஜாஸ்தி என்பதால் அந்த சக்தியினாலேயே ஆனந்தம் உண்டாகிறது என்று அர்த்தமில்லை. சக்திக்கும் ஆனந்தத்துக்கும் நேர் ஸம்பந்தமில்லை. ஒருத்தருக்குத் தம்மை விடக் குறைந்த சக்தியுள்ளவர் மீது தம்முடைய சக்தியினால் ஆதிக்கம் செலுத்த முடிகிறது. அவரைக் கட்டுப்படுத்த முடிகிறது என்பதிலே ஏற்படும் ஆனந்தம் தப்பான அஹங்காரத்தில் ஏற்படுவது; அதை முறையான ஆனந்தம் என்று சொல்ல முடியாது. பின்னே, சக்தி ஜாஸ்தியானால் ஆனந்தம் எப்படி ஜாஸ்தியாகிறது என்றால், அப்போது நம்மை விடவும் அதிக சக்தியோடு இருந்து கொண்டு, நம்மைக் கட்டுப்படுத்துபவர்கள் குறைச்சலாகிக் கொண்டு வருகிறார்கள். ஆகையால், நாம் இன்னொருத்தரை ஆள முடிகிறது என்பதை விட, நமக்குக் கட்டுப்பாடு குறைகிறது, நம்முடைய ஸ்வதந்திரத்தின் எல்லை ஜாஸ்தியாகிறது என்பதாலேயே ஆனந்தம் ஏற்படுகிறது.

பெரிய கம்பெனிகளில் மானேஜராகக் கொடி கட்டிப் பறந்த சில பேர் ராஜிநாமா பண்ணிவிட்டு, அதோடு 'கம்பேர்' பண்ணிப் பார்க்கும் போது, ரொம்பச் சின்னதாக ஸொந்தத்தில் கம்பெனி ஆரம்பிக்கிறார்கள். "ஏன் இப்படி வருமானம், வசதி எல்லாவற்றையும் குறைத்துக் கொண்டு ஸொந்த பிஸினெஸ் ஆரம்பித்திருக்கிறீர்கள்?" என்று கேட்டால், "அதுவா? அங்கே என்னதான் பெரிய பொறுப்புகள், பெரிய வருமானம் முதலானது இருந்தாலும் மேலே உள்ள டைரக்டர்களுக்கு ரொம்பவும் "obey" பண்ணிக் கொண்டிருக்க வேண்டியிருந்தது. அவர்கள் 'கன்ட்ரோல்' தாங்காமல்தான், பாக்கி ஸமாசாரங்களில் நஷ்டமேற்பட்டாலும் ∴ப்ரீயாக இருக்கணு மென்று ஸொந்த பிஸினெஸ் ஆரம்பித்தது" என்கிறார்கள்.

ஆகையினால் ஸ்வாதந்திரியத்தால்தான் ஸந்தோஷமே தவிர சக்தியினால் இல்லை.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

ஒன்றும் வராது!" என்று மாமல்லர் உறுதியான குரலில் கூறினார்.

"பிரபு தங்களை என்னுடன் சேர்த்து வைத்து மூன்று தினங்கள் நான் சொர்க்கத்தில் இருக்கும்படிச் செய்த வெள்ளத்தை விபத்து என்று எப்படிச் சொல்வேன்? ஆகையினால்தான், இன்னும் ஏதோ இருக்கிறது என்று எண்ணமிடுகிறேன். ஆனால் இனிமேல் என்ன விபத்து வந்தால் என்ன? தங்களுடைய விசால இருதயத்தின் ஒரு மூலையில் எனக்கு ஒரு பத்திரமான இடம் இருக்கிறது என்ற நம்பிக்கையே எனக்குத் தைரியமும் உற்சாகமும் ஊட்டி வரும். தாங்கள் யுத்தத்தையெல்லாம் முடித்து விட்டு, தங்கள் தந்தையிடம் அனுமதி பெற்று என்னை அழைத்துப் போக வரும் வரையில் நான் இவ்விடத்திலேயே மன நிம்மதியுடன் இருப்பேன். தங்களுடைய அன்பாகிய கவசம் என்னைக் காப்பாற்றும் போது, என்ன விபத்து என்னை என்ன செய்து விடும்?"

"மண்டபப்பட்டு அவ்வளவு பாக்கியம் செய்திருக்கிறதா? இங்கேயே தங்கி விடுவதென்று நீர்மானம் செய்து விட்டாயா?" என்று மாமல்லர் கேட்டார். அதுதான் அவருடைய விருப்பம் என்று குரலிலிருந்தே தெரிந்தது.

"ஆம், பிரபு! வேறு எந்த இடத்திலும் நான் மன நிம்மதியுடன் இருக்க முடியாது. இந்தக் கிராமத்துக் கோயிலும், இந்தப் பாறைகளும் வராகநதியும் எனக்குப் பல இன்ப நினைவுகளை ஊட்டிக் கொண்டிருக்கும். என் தந்தையும் இந்தப் பாறைகளைக் கோயில்களாக அமைப்பதில் பெரும் ஆவல் கொண்டிருக்கிறார். அவரும் நிம்மதியாக இருப்பார். ஆனால் ஒரே ஒரு விஷயந்தான் கொஞ்சம் மனக்கவலை உண்டாக்குகிறது. அந்த நாகநந்தி மட்டும் இங்கே வராமலிருக்க வேண்டும்" என்றாள் சிவகாமி.

"நாகநந்தி இங்கே வர மாட்டார்! அந்தக் கவலை உனக்கு வேண்டாம்!" என்றார் மாமல்லர். குண்டோதரனிடம் நாகநந்தியைப் பற்றித் தெரிந்து கொண்டிருந்ததனால் தான் அவர் அவ்விதம் உறுதியாய்க் கூறினார்.

அதே சமயத்தில் அவர்கள் பேசிக் கொண்டிருந்த பாறைக்குப் பின்னால் ஒளிந்து கேட்டுக் கொண்டிருந்த புத்த பிக்ஷுவின் உருவம் மெதுவாக எழுந்து அப்பால் சென்றது!

(தொடரும்)

காடு அழிந்தால் நாடு தாங்காது!

மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் உள்ள வனங்கள், பல்வேறு காரணங்களுக்காக அழிக்கப்பட்டு வருகின்றன. மழையின்மை, வறட்சி போன்ற பின்விளைவுகளைப் பற்றிச் சற்றும் யோசியாமல் இந்த அழிவு நிகழ்கிறது என்கிறார்கள், இயற்கைச் சூழல் ஆதரவாளர்கள். இது குறித்து தமிழ்நாடு வனத்துறைத் தலைவர் கே. அருணாசலம் என்ன சொல்ல விரும்புகிறார் என்று கேட்ட போது:

''இந்த வெஸ்டர்ன் காட் எனப்படும் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி கன்யாகுமரியில் தொடங்கி பம்பாய் வரை படர்ந்த பகுதி. ஒய். பி. சவாண் மத்திய அமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகே, வெஸ்டர்ன் காட் டெவலப்மென்ட் திட்டம் உருவாகியது.

''நம்மைப் பொறுத்தவரை, நீலகிரியிலி ருந்து கன்யாகுமரி வரை இந்தப் பகுதியில் அமைந்திருக்கிறது. இங்கே எல்லாம் கன்னிவனங்கள் இருக் கின்றன; நிறையக் கிராமங்கள் இருக்கின்றன. ஏராளமானகால்நடைகள் இருக் கின்றன. ஏழு வன விலங்குச் சரணாலயங்கள் இருக்கின்றன.

''இந்தக் கால்நடைகளின் தொகையைக் கேட்டால் பிரமித்துப் போய்

விடுவீர்கள். தமிழ்நாட்டுக்கால்நடைகளின் மொத்த எண்ணிக்கை 5.56 கோடி என்றால், தமிழ் நாட்டிலுள்ள மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் மட்டும் இருக்கிற கால்நடைகள் 1.92 கோடி! காடுகள் அழியுமா, அழியாதா? அருகிலுள்ள கிராமத்து மக்கள் எரிபொருளுக்காகக் காட்டிலுள்ள மரங்களையும் கள்ளிகளையும்தான் உபயோகிக்கிறார்கள். இதைத் தடுக்கப் போனால் பிரச்னை பூதாகாரமாக எழுந்து குழப்பம் உண்டாகும்!

''அதற்கென்று, கம்மா கையைக் கட்டிக் கொண்டு வேடிக்கைபார்த்துக்கொண்டிருப்பீர்களா என்று நீங்கள் கேட்கலாம். நீலகிரி பயாஸ்ஃபியர் எனப்படும் உயிரின மண்டலம் இந்தியாவிலேயே தனிச் சிறப்பு வாய்ந்த பகுதி என்பதை உணர்ந்தே இருக்கிறோம். இந்தப் பகுதிகளில் உள்ள கள்ளி வனங்களை - விர்ஜின் ஃபாரஸ்ட்ஸ் - பாதுகாப்பதில் அக்கறை காட்டித்தான் வருகிறோம். ஷோலா ஃபாரஸ்ட் எனப்படும் சோலைக் காடுகளை வேலி கட்டிப் பாதுகாக்கத் தொடங்கி இருக்கிறோம். இயற்கையான வேலியமைப்பு தவிர, இணைப்புக் கம்பி வேலிகளும் போட்டு வருகிறோம். ஏழாவது திட்டத்தில் மட்டும் இந்தப் பகுதி வளர்ச்சிக்காக 617 லட்ச ரூபாய் செலவழித்திருக்கிறோம். இதில் 5,400 ஹெக்டேர் மலைத் தோட்டப் பயிர் விளைச்சலும் அடங்கும். தடுப்பு அணைகள் எனப்படும் செக் டாம், ஊடுருவிப் பாயும் நீர்க் குட்டைகள் எனப்படும் பெர்க்கொலேஷன் பாண்ட் எல்லாம் அமைத்து வருகிறோம். அந்தப் பகுதி மக்களுக்குத் தண்ணீரும், நிலத்தடி நீர் ஊறவும் இவை உதவும்.

''சமீபத்திய ஆராய்ச்சியின்முடிவுப்படி, தமிழ்நாட்டிலுள்ள மொத்த வனப் பகுதிகள் 22.7 லட்சம் ஹெக்டேர் என்றால், நமது மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி வனங்கள் 5.6 லட்சம் ஹெக்டேர்கள். அதாவது மொத்தத்தட்ட 25 சதவிகிதம். காடுகள் ஊடுருவல் சுமார் 35 சதவிகிதம்! பாதிப்பு இருக்கத்தானே செய்யும்?

''இதையும் தடுக்கத்தான் முயற்சிகள் எடுத்து வருகிறோம். காடுகள் அழிக்கப்பட்டால் அவற்றைத் திரும்ப உருவாக்க வேண்டும் என்பதற்காக மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டப்படி ஆண்டுதோறும் சுமார் இரண்டு கோடி ரூபாய் செலவிடுகிறோம். இதைத்தவிரவும் மாநிலத் திட்டங்களின் அடிப்படையில் சுமார் 6 - 7 கோடி ரூபாய் இப் பகுதியில் செலவிடப்பட்டு வருகிறது. சுமார் 20,000 ஹெக்டேர் நிலப்பரப்பில் வனத் தோட்

◆ அழிந்து வரும் வனங்கள்.....

டங்கள் உருவாகியிருக்கின்றன. நாங்கள் நடுவது எல்லாமே, காடுகள் தொடர்ந்து காடுகளாகவே இருக்குமாறு பார்த்துக் கொள்ளுகிற திட்டத்தில்தான். அழித்துப் பயன்படுத்துகிற வகைகள் அல்ல. அந்தந்தப் பகுதிகளில் காணப்பட்ட, காணப்படுகின்ற மர இன வகைகளை மட்டுமே பயிர் செய்து வளர்த்து வருகிறோம். வனப் பகுதிகளை நேர்மையாகப் பாதுகாக்க, எல்லைக் கற்கள் நட்டு வருகிறோம்.

''மேற்படி வனப்பகுதியில் உள்ள மக்கள் தங்கள் ஆடுகளையும் மாடுகளையும் குறைந்த அளவுக்கே மேய்ச்சலுக்காகக் காட்டுக்கு அனுப்ப வேண்டும். தரமான மாடுகளை மட்டும் அனுப்பட்டும். அவரவர் வீட்டுப் பகுதியிலேயே மாட்டுத் தீவனம் கொடுத்து வந்தால் நல்லது என்று கேட்டுக் கொண்டு வருகிறோம். இந்த ஆண்டிலிருந்து, கோவை, மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் கால்நடைப் பராமரிப்பு மையங்கள் நிறுவி, தண்ணீர், தீவனம், மருத்துவ உதவி எல்லாம் கொடுத்து, கூடுமானவரை அவை வனப் பகுதிகளை நாடிச் செல்லாமல் தடுத்து வருகிறோம்.

''இப்போது இந்தப் பகுதி மக்களிடமே காடுகளைப் பாதுகாப்பது பற்றிய விழிப்புணர்வு உருவாகி வருகிறது. திருந்தியும் வருகிறார்கள். அழிப்பவர்களை என்ன செய்கிறீர்கள் என்று கேட்கலாம். பிடித்துத் தண்டிக்கிறோம். நீலகிரி - கூடலூர், கம்பம் - கூடலூர்ப் பகுதிகளில், கிராமத்தவரின் ஆக்கிரமிப்பு இருக்கிறது. இதையும் தடுத்து வருகிறோம்.

''மலைச்சரிவை மூன்று பகுதிகளாகப் பிரித்து வனச் சூழ்நிலை பராமரிப்புப் பகுதி, சொத்துக்கள் உண்டாக்கும் பகுதி, மற்றும் அந்தந்தப் பகுதிக்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்யும் பகுதி என்று இடைப்படு காடுகள் திட்டத்தை உருவாக்கியிருக்கிறோம். இத் திட்டத்தினால் காடுகளின் தரம் உயர்கிறது; கூடவே, கால்நடைத் தீவனம், மக்களுக்குத் தேவையான மரம், விறகு இவையும் கிடைக்கின்றன. காடுகள் அழியாமலும் காக்கப்படுகின்றன. இதில் ஒரு முக்கிய அம்சம், வனத்துறைப் பணிகள் பெரும்பாலும் ஏழை மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் அமைந்தவை. (ஒவ்வொரு நூறு ரூபாயிலும், எண்பது ரூபாய் இவர்கள் சம்பளமாகவே செலவிடப்படுகிறது.)

''வனத்துறை அபிவிருத்திக்கான யோசனைகள் உருவாக்கும் குழுத் தலைவர் டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன், வனப் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வைக் கிராமப்புற மக்களிடையே உருவாக்குங்கள் என்று வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார். நாங்களும் போஸ்டர், வீடியோ மூலம் இதை வெற்றிகரமாகச் செய்து வருகிறோம்.''

ஏறத்தாழ மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகள் அமைந்த ஆறு மாநிலங்களை, அதாவது சுமார் மூவாயிரம் கிலோ மீட்டர் தூரத்தை, ஐந்நூறு பேர் பாத யாத்திரையாகச் சுற்றி வந்து அரசின் கவனத்தைக் கவர்ந்தார்கள். இதில் இயற்கைச் சூழல் பாதுகாப்பு ஆதரவாளர்கள், சமூக நலனில் அக்கறையுள்ளவர்கள், பத்திரிகையாளர்கள் என்று பலரும் இருந்தனர். இந்தப் பாத யாத்திரை முடிய நூறு நாட்களாயின. பிறகு கோவாவில் கூடி, மேற்கொண்டு என்ன செய்ய வேண்டும் என்று தீர்மானிக்க, குழுக்களை அமைத்தார்கள்.

காடுகளை அழித்துத் தேயிலைத் தோட்டங்கள் அமைப்பதையும், யூகலிப்டஸ் மரங்களை ஏராளமாக நடுவதையும், நீர்ப் பிடிப்பு நிலங்களை - சோலைகளும் புல்வெளிகளுமான பகுதிகளை ஆக்கிரமிப்புச் செய்வதையும் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றினார்கள். சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வு உண்டாக்குதல், சுற்றுச்சூழல் பாதுகாப்புக்குச் சட்டரீதியான வழிமுறைகள் காணுதல் என்று பல குறிக்கோள்களுடன் இந்தக் குழுக்கள் செயல்படத் துவங்கின.

ஆனால் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் வனங்கள் அழிக்கப்பட்டு வருவதாக இப்போதும் செய்திகள் வருகின்றன. சுமார் இரண்டு முதல் இரண்டரை லட்சம் டன் மர வகைகளை, வன இலாகா தொழில் துறைக்கு வருடா வருடம் வழங்குவதாகவும், ஆனால் சுமார் ஒன்று முதல் ஒன்றரை லட்சம் டன் அளவே மர வகைகள் நடப்படுவதாகவும் ஒரு தகவல் சொல்லுகிறது. இது தவிர தெரிந்தும் தெரியாமலும் பொது மக்களாலும் காடுகள் அழிக்கப்படுகின்றன. எனவே வனவளம் காக்கப்படுகிறதா, அழிக்கப்படுகிறதா என்பதில் நாம் ஒருக்குத் தெரியாத காட்டில்தான் இருக்கிறோம்! என்றாலும் வனத்துறையும் இயற்கைச் சூழல் பாதுகாப்பில் அக்கறை கொண்ட இதர அமைப்புக்களும் மேற்கொள்ளும் முயற்சிகள் மேலும் தீவிர மடைய, படிப்படியாகப் பலன் அளிக்கத் தொடங்கும் என எதிர்பார்க்கலாம்.

பேட்டி, கட்டுரை : **சாருகேசி**

வண்ணப்படங்கள் : **சாரி**

தாய் வீடு

இரயிலை விட்டு இறங்கியதுமே கௌரியின் மனம் துள்ளத் தொடங்கி விட்டது.

ஆறு மாதம் கழித்து மிதிக்கிற மண். சொந்த மண். பார்க்கிற ஒவ்வொன்றிலும் ஆசை கொப்புளிக்க...

''ரெண்டே நாள்... இளம்பிடலும்.. தெரிஞ்சுதா?'' என்றான் சங்கரன்.

கௌரி அவனுக்குப் பதில் சொல்ல வில்லை. குழந்தையைக் கொஞ்சிக் கொண்டே, ''ஏண்டி கண்ணு.. பாட்டி வீடு ரெண்டு நாள்தானா உனக்கு?'' என்று கேட்டாள்.

''சொல்றது காதுல விழுந்துச்சா?''

''ம்... ம்...'' அவள் ரசிக்கும்படி, காது ஜிமிக்கி அசைந்தது.

''இப்ப தலையை ஆட்டுவே.. வீட்டுக்குப் போனதும் புத்தி மாறிடும்...''

''ம்ஹூம்...''

அவனுக்கு நிருப்தி உண்டாகவில்லை. கல்யாணமானதும் சில பெண்களைப் போல், ''கிடைத்ததடா சாமி... பெரு வாழ்வு'' எனப் புருஷனோடு ஒட்டிக் கொள்கிற ரகமில்லை. பாதி நாள் தாய் வீட்டு வாசம். இந்த ஆறு மாதம் பொறுத்ததே அதிகம். அதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று அவள் சென்னைக்கு மாற்றலானது. இரண்டு அவனது அண்ணனின் கல்யாணம். இந்தத் தடவை எப்படியும் பத்துப் பதினைந்து நாள் டேராப் போட்டு விடுவாள் என்று நினைத்துக் கொண்டான்.

ஆட்டோ அவளது தெருவிற்குள் பிரவேசித்தது.

தன் வீட்டருகே ஆட்டோ நின்ற போது, சட்டென்று அடையாளம் தெரியவில்லை. நிறைய மாறி இருந்தது.

வெளித் திண்ணை இடிக்கப்பட்டு வெறிச்சென்று தெரியும் வாசல். பச்சை வர்ண ஜன்னல். கம்பி வலை. காலிங் பெல். எட்டித் தொடும் உயரத்தில் வாசல் விளக்கு. மொழுமொழுவென்று எழும்பி நிற்கும் கவருக்குப் புதிதாகச் சில அடையாளங்கள்...

''இதென்ன கோலம்?'' என்று வியந்தவளாகக் கௌரி கதவைத் தட்டினாள்.

பழகிய கண்களுக்குத் திண்ணை இல்லாதது வித்தியாசமாகத் தெரிந்தது. ''இதை ஏன் இடிச்சுட்டாங்க?''

''அம்மா... அம்மாவ்..'' கதவு அதிர -

''மெதுவா... அதான் பெல் இருக்கே...'' என்றான் சங்கரன்.

''சித்த புடிங்க....'' எனக் குழந்தையைக் கொடுத்து விட்டு, ஸ்விட்சை அமுக்க -

டிங்... டாங்...

''யாரது?'' தூக்கக் கலக்கத்தில் அம்மாவின் குரல்.

''நான்தாம்மா....''

''கௌரீ....''

உள்ளே படக்கென்று விளக்கு எரிந்தது.

அம்மா அவளை எதிர்பார்க்கவில்லை. ''பொட்டப் புள்ளையைப் பார்த்து ஆறு மாசமாச்சு.. போய்ட்டு வரலாம்னு பார்த்தாக் கூட்டிட்டுப் போறவங்க ஆரு?'' என்று நேற்றுக் கூட பக்கத்து வீட்டுப் பெண்மணியிடம் பேசிக் கொண்டிருந்தவள், திடீரென்று எதிரில் நிற்கும் மகளைக் கண்டதும் மலைத்துப் போனாள்.

''கௌரீ.... ராசாத்தி... வா... வா... என்ன பொசுக்குன்னு.. ஒரு கடுதாசி கூடப் போடாம?''

சட்டென்று வார்த்தைகள் அற்றுப் போன மாதிரி தடுமாற்றம். அழுகையும், சந்தோஷமும் கலந்த குரல் தழுதழுப்பு...

சற்று பொறுத்தே மருமகளைக் கவனித்தவள், ''வாங்க மாப்ளை...'' என முந்தானையை இழுத்து விட்டுக் கொண்டாள். ''அட... என் கண்ணு மகளே...'' எனக் குழந்தைக்குக் கை நீட்டினாள். குழந்தை திரும்பிக் கொள்ள, ''அடியேய்... பாட்டியை மறந்துட்டியா?'' எனச் சிரித்தாள். பளீரென்ற சிரிப்பு...

''வாங்க.. உள்ள வாங்க...''

ஹாலில் வாக கருண்டு கிடந்தான்.

''டேய்... எந்திரி. யாரு வந்திருக்காங்னு பாரு....''

அம்மா அவளை உகப்பி விட்டு உள்ளே போக -

கௌரியும், சங்கரனும் சோபாவில் உட்கார்ந்தார்கள். முன் அறைக்குச் சோபா

மும்தாஜ் யாசீன்

"மொய் விஷயத்தில் பெண்ணோட அப்பா கொஞ்சம் அல்பம்னு நினைக்கிறேன்!"

"எப்படி?"

"ஒதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்னு எழுதி வெச்சிருக்கார் பாருங்க!"

- வேதபுரி எஸ். இரமேஷ்

புதிய அம்சம். கௌரி கண்களைச் சுழற்ற இன்னும் சில புதுசுகள் தென்பட்டன. ஜன்னலுக்கு ஸ்க்ரீன். மூலையில் டீ. வி., உட்புறச் சுவருக்கு வெளிர் பச்சைப் பூச்சு...

பச்சை யாருக்கு இஷ்டம்? அண்ணிக்கா?

அண்ணனுக்குக் கல்யாண மாளக் கூட்டோடு, சென்னைக்குக் குடி போய் விட்டதால், அவளைப் பற்றி மட்டும்தான் இன்னும் சரியாகத் தெரியாது.

"அக்கா..." வாசு எழுந்து உட்கார்ந்தான். "வாங்க மாமா... எப்ப வந்திங்க?"

"இப்பத்தான் உள்ள நுழையறோம்...."

வாசு முன்னை விட இளைத்திருந்தான். பால் முகம் மாறி, உடம்பில் புதிய முரட்டுத்தனம். மீசை அரும்பி யிருந்தது. உடைந்த குரல்.

"என்னடா... நிஜார்லு ஆம்பளை ஆயிட்டே?" என்றாள் கௌரி.

"போக்கா..." அவன் வெட்கப்பட, "ம்... ம்.. வயசு வந்திருச்சுல்ல..." என்றான் சங்கரன்.

இருவரும் சிரித்தார்கள்.

"உடம்பு வளர்ந்து என்ன பண்றது? புத்தி வளர்லியே..." அம்மா உள்ளேயிருந்து குறைபட்டுக் கொண்டாள்.

"ஏன்... என்ன பண்றான்?"

"அவனையே கேளுங்க. வர்ற சனிமா ஒண்ணு விடறது கெடையாது..."

"பார்க்கட்டும்... இவனை நம்பித்தானே படமும் எடுக்கறாங்க..."

"அது சரி..." உள் அறையில் மீண்டும் சிரிப்பு.

தனக்கு அளிக்கப்பட்ட கௌரவத்தில் சங்கரன் உற்சாகமடைந்தான்.

"அண்ணன் தூங்குதா?" என்று கேட்டாள் கௌரி.

"ஆமா... இரு... எழுப்பறேன்..."

அம்மா பக்கத்து அறைக்கு நகர, "வேணாம்மா... எதுக்குத் தூக்கத்தைக் கலைக்கிறது.....?" கௌரி அவசரமாக இடைமறித்தாள்.

இந்த வருஷம் வெயில் அதிகமென்று அம்மா குறைபட்டுக் கொண்டாள். வெயில் மட்டுமல்ல; பருவ மழை தவறிப் போனது, உறவுக்காரர்களின் கல்யாணம், இரண்டு சாவு, அத்தையின் பெண்ணுக்குக் குழந்தை பிறந்திருப்பது....

மாறி இருப்பது வீடு மட்டும் இல்லையா? அம்மாவுமா?

சிரிக்கச் சிரிக்க அண்ணனைப் பற்றியும், தம்பியின் 'கூத்துக்களை'ப் பற்றியும் பேசுகிறவளுக்கு என்ன வந்தது? "நீ என்ன பண்றே... புதுசா என்ன வாங்கி இருக்கே?" என்ற வழக்கமான கேள்விகளைக் கூடக் காணோம். மருமகளைப் பற்றிக் கூட மூச்சு விடவில்லை.

ஏனாம்... என்ன மூடுநிரை?

அண்ணன் ஆபீசுக்குப் போயிருந்தான். மதியச் சாப்பாட்டிற்குப் பிறகு சங்கரனையும் காணவில்லை. வாசுவைக் கூட்டிக் கொண்டு சினிமாவுக்குப் போயிருக்கலாம்.

வேலை முடிந்த ஒய்வு.

அம்மா படுத்திருக்க, கௌரி சுவரில் சாய்ந்தபடி குழந்தைக்குப் பால் கொடுத்துக் கொண்டிருந்தாள். அண்ணி அருகில் இல்லாததைப் பார்த்து -

"ஏம்மா... எல்லாம் ஒரு நிஜமா இருக்கு இப்ப..." தானாகவே ஆரம்பித்தான்.

"எல்லாம்னா?" அம்மா திருப்பிக் கேட்டாள்.

"வீடு.... நீங்க...."

"ம்... புதுசா ஒரு மகராசி வந்திருக்கால்ல? அதான்...."

"நிண்ணையை ஏன் இடிச்சுட்டீங்க?"

"உங்கண்ணன் ஏற்பாடு... அது..."

"அதான்... ஏன்ங்கறேன்..."

"அக்கம் பக்கத்துல வந்து உக்கார்றாங்களாம்.. வம்பு வழக்குன்னு வரும்னு பொஞ்சாதி சொன்னாளாம்... இத்தனை வருஷமா வளர்ந்த புள்ளைக்குத் தெரிய வேணாம்? இடிச்சுரலாம்னு சொன்னான்.... எதுக்கு வீண் பிரச்னை? சரின்னுட்டேன்..."

கௌரிக்கு ஏன் கேட்டோம் என்று ஆகி விட்டது.

வீடு என்பது வெறும் மண் மட்டுமா? முந்தைய வாழ்வின், மனிதர்களின் ஞாபகச் சின்னமில்லையா? உப்புப் பெறாத ஒரு காரணத்திற்காக இடிக்க எப்படி மனம் வந்தது?

நெஞ்சில் ஏதோ சுமை ஏறிய மாதிரி இருந்தது. யோசிக்க யோசிக்கக் கனம் கூடிக் கொண்டே வந்தது.

இருட்டி வெகு நேரமாகியும் அண்ணன் வீடு திரும்பவில்லை.

''அவன் வர்றப்ப வரட்டும்... மாப்பிள்ளையைச் சாப்பிடச் சொல்லும்மா...'' அம்மா நிர்ப்பந்தப்படுத்தினாள்.

''அப்பா... சாப்பாட்டை நினைச்சாப் பயமா இருக்கு...'' என்றபடியே சங்கரன் உட்கார்ந்தான்.

''என்ன காரம்... சத்தியமா உங்கம்மா சமையல் இல்லை இது.''

''ஆமா... அண்ணிதான் எல்லாம் பண்றாங்க...''

''சரியான முரட்டுக்கை....''

''ம்... மெதுவா... காதுல விழுந்துரப் போவுது...''

''ரெண்டு நாள்ல அல்சரே வந்துரும்....''

''அய்யே... பேசாம சாப்பிடுங்க...''

கௌரிக்கும் அண்ணியின் கைப்பதம் ஒத்து வரவில்லை. தெற்கத்தி வாசனை. காரம் தூக்கல். சாம்பாருக்குக் கூடத் தேங்காய் அரைத்துப் போட்டாள். தாளிப்புக்கு வெங்காயம் பயன்படுத்தினாள்.

அம்மா இதிலெல்லாம் தலையிடுவதாகக் காணோம். காய்கறி நறுக்கி, வெளி வேலைகளைக் கவனித்து ஒதுங்கியிருந்தாள்.

ஒய்வு நல்லதுதான்.

ஆனால் அது தானாக ஏற்படுத்திக் கொண்டதா? நிர்ப்பந்தமா?

சேர்ந்து சாப்பிடும் போது தமாஷாகப் பேசுவதாக நினைத்து கௌரி சிரித்துக் கொண்டே சொன்னாள்: ''அண்ணி... நீங்க சமைக்க ஆரம்பிச்ச பிறகுதான் எங்க ஊர்ல மிளகா வெலை ஏறிப் போச்சு...''



சிரிப்பாள் என நினைத்ததற்கு மாறாக முகம் உம்மென்று ஆயிற்று.

''அண்ணனுக்கு நாக்கு பழகிருச்சா?'' என மீண்டும் கேட்க -

''வயிறு காஞ்சா... எல்லாருக்கும்தான் பழகிப் போவுது...'' வெடுக்கென்று பதில் வந்தது.

''அது சரி....''

கௌரியின் சிரிப்பு மறைந்து விட்டது.

சொந்த வீட்டில் வாய் கொடுக்க முதன் முதலாகப் பயம் உண்டாயிற்று அவளுக்கு.

''ஏன், கௌரி.... ஒரு மாதிரியா இருக்கே....'' அம்மா நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள்.

''ஒண்ணுமில்லைம்மா....''

என்ன புரிந்து கொண்டாளோ? பெரு மூச்சு விட்டாள். ஆற்றாமையா?

குடும்பத்தில் அவள் பழைய ஸ்தானத்தில் இல்லை என்பது தெளிவாகத் தெரிந்தது. தன்னையும், மருமகளையும் கண்ட பிறகு இப்படிச் சும்மா இருக்கிறவளா? வேளைக்கு ஒரு பலகாரம் பண்ணி, விருந்து வைத்து, ''உங்கம்மாவைச் சித்த சும்மா இருக்கச் சொல்லு... வயிறு என்னத்துக்கு ஆகிறது?'' எனச் சலித்துக் கொள்ளும்படியாய்....

''ஏம்மா.. அண்ணி நல்ல டைப் தானே.... பிரச்னை ஒண்ணுமில்லையே...?''

''இதுவரைக்கும் இல்லை. ஒதுங்கிப் போயிட்டா ஏன் வருது?''

''யார் ஒதுங்கிப் போறது?''

''யாரா இருந்தா என்ன... எம் புள்ளைக நல்லா இருக்கணும்.. அதான் நான் வேண்டிக்கிறது...'' அம்மாவின் குரல் தழுதழுத்தது. ''நான் இன்னும் எத்தனை நாளைக்கு... எனக்குப் பிறகும் நீங்க ஒத்துமையா இருக்கணும்...''

அவள் இப்படியெல்லாம் பேசி கௌரி கண்டதே இல்லை. சின்ன வயதிலேயே புருஷனைப் பறிகொடுத்தவள். பிள்ளைகளைப் படாதபாடு பட்டு வளர்த்தாள். குடும்பத்தின் இன்றைய கௌரவமான நிமிர்வு அவள் அளித்த வரம். என்றைக்காவது பழைய தழும்புகளைத் தடவிக் கொள்கிற மாதிரி ''நான்பட்ட கஷ்டத்தைக் கேட்டாக் கல்லும் கரைஞ்சு போகும்...'' என்று சொல்வது உண்டு. அப்போது கூட கரடுமுரடுகளைத் தாண்டி ஜெயித்த பெருமிதம்தான் வெளிப்படும். இப்படி சோர்ந்து, துவண்டு....

''வேணா... எங்கிட்ட வந்து கொஞ்ச நாள் இரேம்மா....''

''நல்லா இருக்கு நாயம்... எனக்கு என்ன குறைன்னு கூப்பிடறே... உங்கண்ணனுக்குத் தானேடி தலைகுளிவு இது...'' அம்மா சிரிக்க முயன்றாள். வலிந்து போர்த்திக் கொண்ட சிரிப்பு. ''சின்னவன் ரெண்டு காசு சம்பாதிக்க ஆரம்பிச்சாப் போதும். தனியாய் போயிரலாம்னு இருக்கேன். பெரியவனை எத்தனை நாளைக்குத்தான் கஷ்டப்படுத்தறது... அவனுக்கும் குடும்பம்னு உண்டாயிருக்கல்ல...''

மனசுக்குள் என்ன போராட்டமோ, அவளிடமிருந்த குழந்தையை வாங்கிக் கொண்டு வெளியே போய் விட்டாள்.

கௌரி சோபாவில் உட்கார்ந்து வீட்டையே வெறிக்கப் பார்த்தாள். ஒவ்வொரு அங்குலத்திலும் சொந்தம் கொண்டாடிய வீடு எங்கோ விலகிப் போய்க் கொண்டிருப்பதாகத் தோன்றியது. மாறிய அடையாளங்கள், இன்னொரு சகாப்தம் துவங்கியிருப்பதன் அறிகுறி போலும்!

நீண்ட பெருமூச்சு வெளிப்பட்டது.

மனுஷப் பிறவியை நினைத்து விசித்திரமாக இருந்தது. பிள்ளை பெற்று வளர்ப்பதும், ஒருத்தனையோ - ஒருத்தியையோ

∴பிரிஜ் பரிசு: கூப்பன் எண். 9

சொம்பவும் கலபமான விஷயம்! 'நேற்று வரை நந்தவனம்' தொடர்கதையில் ஒவ்வொரு வாரமும் நாங்கள் வேண்டுமென்றே ஒவ்வொரு தவறைச் செய்து வருவோம். இந்த வாரம் என்ன தவறு? கீழுள்ள பகுதியில் தவறையும் திருத்தத்தையும் குறித்து வைத்துக் கொண்டு கூப்பனையும் பத்திரமாக வைத்திருங்கள். கதை முடியும் கடைசி வாரம், கதை பற்றிய 5 - 10 வரி விமர்சனத்துடன் எல்லாக் கூப்பன்களையும் எங்களுக்கு அனுப்புங்கள். மிக அதிக அளவில் தவறுகளைக் கண்டுபிடித்துத் திருத்தியிருப்பவருக்கு ∴பிரிஜ் பரிசு! ஆறுதல் பரிசுகளும் உண்டு.

தவறு :

திருத்தம் :

இணைத்து விட்டுக் காயங்களுடன் ஒதுங்கிப் போவதும்...

அம்மா காயம் பட்டிருக்கிறாள் என்று தெளிவாகத் தெரிந்தது. நடுத்தரக் குடும்பங்களுக்கு நேரும் தவிர்க்க முடியாத காயம்...

''ஹோ...ஹோ....'' என்று ஆர்ப் பாட்டமாகச் சிரித்தான் அண்ணன். ஞாயிற்றுக் கிழமை என்பதால் சாவகாசமாகச் சிரிக்கவும், பேசவும் வாய்த்திருந்தது. பக்கத்தில் சங்கரன்.

''அப்புறம் என்னாச்சு?'' அண்ணன் கேட்க -

''என்ன ஆகும்... போடா கழுதைன்னு விட்டாச்சு.. சிரிச்சுச் சிரிச்சு வயித்து வலிதான் மிச்சம்...''

கௌரிக்குத் தெரிந்த சங்கதிதான். அவளுடைய பேக்டரியில் ஒரு ஆள் பாட்டிக்கு சீரியஸ் என்று லீவு போட, தற்செயலாக பாட்டியே அந் நேரத்தில் அவனைப் பார்க்க வந்த கதை. எத்தனை தடவைதான் சொல்வானோ?

''என்ன மாமா இது... இத்தனை கதைகளை வச்சுக்கிட்டுப் பொகக்குன்னு போறேங்கிறீங்க...''

''மிச்சத்தை அடுத்த தடவை வரும் போது சொன்னாப் போவுது...''

''நோ... நோ... பாட்டிக்கு சீரியஸ்னு நீங்களும் வேணா எழுதிருங்க''

''அதானே...''

இருவரும் மீண்டும் சிரித்தார்கள்.

''அம்மா... இங்க பாரு... இன்னிக்கே புறப்படணும்ங்கிறதை....''

அம்மா நேரில் வராவிட்டாலும் உள்ளே இருந்தபடி, ''நல்லா இருக்கு... ஆறு மாசம் கழிச்சு வந்துட்டு... உடனே புறப்படறது'' என்றாள்.

''ம்ஹூம்... வழியே இல்லை. முக்கியமான வேலையெல்லாம் இருக்கு. வேணா... கௌரியை விட்டுட்டுப் போறேன்..'' என்றான் சங்கரன்.

புருஷனை ஆச்சரியத்துடன் பார்த்தாள் கௌரி. வரும் போது கண்டிஷன் போட்ட ஆள்தானா இவர்?

''தனியா எதுக்கு... நானும் உங்க கூடவே புறப்படறேன்'' என்றாள் அவள். அதுவரைக்கும் தீர்மானம் ஆகாமலிருந்த சங்கதி, அந்த நொடியில் தானே ஒரு முடிவை எடுத்துக் கொண்டது.

சங்கரன் புருவத்தை உயர்த்திப் பார்த்தான்.

''வெளையாடறியா... நான் விட மாட்டேன்...'' என்றான் அண்ணன்.

''அதான் வந்தாச்சு... பார்த்தாச்சு.. இனி.. நீங்கள்லாம் வாங்க.... அண்ணியையும் கூட்டிட்டு...'' கௌரி மீண்டும் உறுதிபடச் சொன்னாள்.

''என்னம்மா இது... பொகக்குன்னு...'' அம்மாவின் சுதி இறங்கி ஒலித்தது.

''எதுக்கும்மா சிரமம்..'' கௌரி முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

எல்லோரும் வற்புறுத்தியதால் ஒருநாள் தள்ளியே இருவரும் புறப்பட்டார்கள்.

தனது மதிப்பீடு உயருகிற மாதிரி அண்ணி அன்று முழுக்க சிரித்துச் சிரித்துப் பேசினாள். உபசரித்தாள். புறப்பட்ட தருணத்தில், ''அடுத்த தடவை பத்து நாள் தங்குகிற மாதிரித்தான் வரணும்...'' என்றாள்.

வருத்தமோ கோபமோ இன்றிக் கௌரியும் எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டாள்.

ரயில் கிளம்பியதும், வாசு கையாட்டிக் கொண்டே மறைய, ''தெரிஞ்ச இடங்கள்ல சொல்லி இவனுக்கு ஒரு வேலை வாங்கித் தர முடியுமான்னு பாருங்க...'' என்றாள்.

''பாவம்.. சின்னப் பயல்...'' என்றான் சங்கரன்.

''இவனை விட சின்னதுகள்லாம் போறதில்லையா?''

இனி அவனுக்கு வேலை கிடைப்பதைப் பொறுத்தே அம்மாவின் அந்தஸ்தும், அவள் மூலம் தனக்குத் தாய் வீடும் மீண்டும் கிட்டும் என்று தோன்றியது அவளுக்கு. அதுவும் அதிகபட்சமாக அவனது கல்யாணம் வரைக்கும்தான் என்பதை உணர்ந்த போது, வாய் பேச முடியவில்லை.

சங்கரன், பிரிவுத் துயர் என நினைக்கும்படி சாய்ந்து கண்களை மூடிக் கொண்டாள் கௌரி.

''என் கணவருக்கு அவர் பேர்லயே நம்பிக்கை கிடையாதுமா.''
''ஏன் அப்படிச் சொல்றே?''
''உங்க கதை வந்திருக்குன்னு சொன்னதும், எந்தப் பத்திரிகையிலிருந்துன்னு கேட்டாரே!''
– சீர்காழி வி. ரேவதி

ஆகாசத் தாமரை

23

துருவ், இரண்டு மூன்று நாட்களில் வந்து விடுவானென்றுதான் மஞ்சுளா எதிர் பார்த்தாள். ஆனால் இரண்டு மாதங்களாகி விட்டன. அவனைப் பற்றி ஒரு தகவலும் தெரியவில்லை.

அன்று துருவ், சடகோபனைப் போல் மஞ்சுளாவுக்கும் அவன் ஆண்மையில் நம் பிக்கை இல்லையா என்று கேட்டதும் அவ ளுக்கு அதிர்ச்சி ஏற்பட்டது.

'குற்ற உணர்வு' அவனை வீட்டை விட்டு எங்கோ விரட்டியிருக்கிறது. அல்லது....

அதை நினைக்கவே அவளுக்குப் பயமாக இருந்தது. அவன் அவ்வாறு செய்யக்கூடியவனா? இதுவரை தன்னால் அறிந்து கொள்ள முடியாத ஓர் 'அந்நிய னாக' அவன் அப்பொழுது அவளுக்குப் பட்டான்.

துருவ், சந்தியாவிடம் ஒரு சமயம் கூறிய தாக அவள் சொன்னாள்: ''அம்மா, பணத் தைத் துரத்திக் கொண்டு அலைகிறாள்.'' ஒருவேளை, அவள் தொழில் துறையில் ஈடுபடாமல், துருவ்வின் வளர்ச்சியில் முழுக் கவனம் செலுத்தியிருந்தால், அவள் குடும்பத்துக்கு ஏற்பட்ட இந்த 'ட்ராஜெடி' யைத் தவிர்த்திருக்க முடியுமோ?

'போஸ்ட்மார்ட்டம்' அறிக்கைக்குப் பிறகு, சடகோபன், பட்சணம் கொடுத்து வந்த ஒரு பவ்வியமான மனிதராகத் தெரிய வில்லை. ஒரு வக்கீலுடன் வீட்டுக்கு வந்தார். வக்கில் தேவையில்லை என்றாள், மஞ்சுளா. சடகோபன் பதிலொன்றும் கூற வில்லை. வக்கீல்தான் பேசினார்.

அவர்கள் கேட்ட நஷ்டஈடு அவளுக்குச் சிறிது அதிர்ச்சியைத் தந்தது. ஆனால் அவள் அதைப் பற்றி வழக்காட விரும்பவில்லை. 'செக்'கில் கையெழுத்திட்டுக் கொடுத்தாள்.

பத்திரிகைகளில் இச் செய்தி பிரகர மானதும் பத்மநாபன் ஃபோன் செய்தார். ''நீங்க கொஞ்சம் அவசரப்பட்டுட்டேன்னு தோணறது.''

''ஏன்?''

''துருவ் கல்யாணம் பண்ணிண்டது தப் புத்தான் ஆனா...''

''சொல்லுங்கோ...''

''நான் ஒரு பெரிய 'சைகாலஜிஸ்ட்' இல்லே. இருந்தாலும் எனக்குத் தெரிஞ்ச வரையிலும், துருவ் 'அப்படி'ச் செய்திருப் பான்னு எனக்குத் தோணலே...''

''அவனே ஒப்புத் துண்டானே?''

''எனக்கு ஒண்ணும் புரியலே... இன் னொண்ணு, போலீசை நீங்க தீவிரமா விசா ரிக்கச் சொல்லியிருக்கலாம்னுதான் தோண றது.''

''என்ன பிரயோஜனம்? அழுக்குத் துணியை நடுத் தெருவிலே போட்டு அலச னுமா?''

சந்தியாவின் பிரச்னை தீர்ந்தது. அதற்குக் காரணம் பத்மநாபன்தான் என்று அவள் சொல்ல விரும்பவில்லை.

சந்தியாவுக்கு ஒரு பாராட்டு விழா நடந்தது. அவளுடைய போராட்டத்தின் காரணமாகத்தான் அரசாங்கம் அடிபணிந் தது என்று பத்திரிகைகள் அவளை வான ளாவப் புகழ்ந்தன!

அவளைப் பற்றி அவதூறு சொல்லிய மந்திரி வேறு துறைக்கு மாற்றப்பட்டார்.

சந்தியா மஞ்சுளாவை அப் பாராட்டுக் கூட்டத்துக்கு வரும்படி அழைத்தாள். மஞ்சுளா போயிருந்தாள்.

அவள் மனசுக்குள் வேதனையாக இருந் தது. இந்தியாவில் இப்பொழுது இருக்கக் கூடிய அரசியல் சமூகப் பண்பாட்டுச் சூழ் நிலையில், எந்த தார்மீகப் போராட்டத்துக் குத்தான் அதற்குக் கிடைக்க வேண்டிய நியாயமான வெற்றி கிடைத் திருக்கிறது? அரசாங்கத்தின் மிகப் பெரிய 'மேலி டங்கள்' போராட்டத்தைக் காட்டி லும், 'இர கங்களைக்' கண்டுதான் பயப்படு கின்றன என்று சொல்லி, சந்தியாவை ஏமாற்றத் துக்குள்ளாக்க அவள் விரும்ப வில்லை.

சாவ்லாவுக்குரிய நிலப்பகுதியில் சந்தி யாவின் கனவு உருவாகிக் கொண்டிருக் கிறது. இத் திட்டத்தை நிறைவேற்றுவதில் முழுமூச்சுடன் இறங்கியிருக்கும் அவள், துருவ்வைப் பற்றி விசாரிக்கவில்லை என்

இந்திரா பார்த்தசாரதி

பது மஞ்சுளாவுக்குக் குறையாக இருந்தது.

சந்தியாவின் சந்தேகத்தை உறுதிப்படுத்தி விட்டாள் துருவ் தன் வாக்குமூலத்தில். போலீசுக்குச் சென்று அவள்தான் கோமளா தற்கொலை செய்து கொள்வதற்குக் காரணம் என்றும், தன்னைக் கைது செய்யும் படியும் கேட்டிருக்கிறாள். அவள் கருவுற்ற நிலையில் இருந்ததற்கும் அவள் தான் காரணம் என்றும் சொல்லி யிருக்கிறாள்.

போலீஸார் அவளைக் கைது செய்ய வில்லை. சட்டப்படி அவள் குற்றவாளி இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அன்று போனவன்தான்...

மஞ்சுளாவுக்குச் சந்தியாவைச் சந்தித்துப் பேச வேண்டும்போல் தோன்றிற்று.

உத்தம்சிங் மாடிக்கு வந்தான். சந்தியா வந்திருப்பதாகச் சொன்னான்.

சந்தியாவின் கரங்களைப் பற்றிக் கொண்டு, ''உனக்கு நூறு வயசு...'' என்றாள் மஞ்சுளா.

''ஐயோ வேணாம்... தாங்க முடியாது, இப்பொழுது நாடு இருக்கும் நிலையிலே.''

அவள் கூடை நாற்காலியில் உட்கார்ந்தாள்.

''எங்கே, உன்னை இத்தனை நாளாக் காணலே?''

'' 'ப்ராஜெக்ட்'டை எவ்வளவு சீக்கிரம் முடிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் முடிச்சிடலாம்னு பாக்கறேன்.. சுத்து வட்டாரத்திலே இருக்கிற கிராமத்துக் குழந்தைகளையெல்லாம் தத்து எடுத்திண்டிருக்கோம்... அந்தக் கிராம ஜனங்களுக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா, 'யு ஹாவ் டு ஸீ இட் டு பிலீவ் இட்.''

'' 'ஆர் யு ஹாப்பி?'' என்றாள் மஞ்சுளா.

''ஏன் இப்படிக் கேக்கறீங்க?''

''இலட்சியம், நடைமுறையாச்சுல்லா அப்புறம் மனசிலே ஒரு வெறுமையுணர்வு ஏற்படாது?''

''என்ன துருவ் மாதிரி பேசறீங்க?''

''இல்லே... எல்லாரும் ஒரு வகையிலே ஒவ்வொண்ணைத் துரத்திண்டு அலையறோம். தேடறது கிடைச்சுட்டா விரக்திதான் ஏற்படறது.. நான் துருவ்வோட அப்பாவுக்குக் கொடுத்த வாக்குறுதிக்காகத் தொழிலைத் தொடர்ந்து நடத்தினேனா, இல்லாட்டா வேறு மாதிரியா என்னாலே இருந்திருக்க முடியாதுங்கிறதுக்காக நடத்தினேனான்னு, எனக்குத் தெரியலே. சமூகத்திலே எல்லாருக்கும் என் முகம் தெரிஞ்சது... இப்பொ எனக்கு இது அல்ப சந்தோஷமாப் படறது... ஐ டோன்ட் நோ.''

''துருவ்வைப் பிரிஞ்சிருக்கிறது உங்களை ரொம்ப பாதிச்சிருக்குன்னு நினைக்கிறேன்'' என்றாள் சந்தியா.

மஞ்சுளா பதில் சொல்லவில்லை.

''துருவ் வீணையைக் கூடவா எடுத்துண்டு போகலே?'' என்று கேட்டாள் சந்தியா.

''இல்லே.''

''இரண்டு மாசமாறதில்லே?''

''ஆமாம்.''

''ஒரு தகவலுமில்லையா?''

''இல்லே.''

''எங்கே போயிருக்கலாம்னு நீங்க நினைக்கறீங்க?''

'' 'நோ க்ளூ'.''

''சந்தியா சிறது நேரம் பேசாமலிருந்தாள். துருவ் 'சூமை' நன்னாப் பாத்தீங்களா? ஏதேனும் குறிப்பு? 'ஸம் நோட்....'?''

மஞ்சுளா புன்னகை செய்தாள்.

''எதுக்குச் சிரிக்கறீங்க?''

''துருவ்வுக்கு இந்த மாதிரி 'ரொமான்டிக் ஐடியாஸ்'லாம் கிடையாது. அவன் ஒரு 'ஸீரியஸ் பர்ஸன்'...''

''நான் ஒண்ணு சொல்லலாமா?''

''என்ன?''

''துருவ் ஒரு 'ஹிபாக்ரிட்'... ஐ ஆம் ஸாரி டு ஸே திஸ்.''

''இதை நீ அப்பொவே சொன்னே... பட்...''

''சொல்லுங்கோ...''

''துருவ் எதுக்காகப் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய்ப் பொறக்காத குழந்தைக்குத் தான்தான் தகப்பன்னு சொல்லணும்? பத்ம நாபனுக்கும் இதைப் பத்திச் சந்தேகம்...''

''பத்மநாபன்?''

''முன் எனக்கு 'அட்வைஸரா' இருந்தாரே அவர்...''

''ஓ! அவரா? டு யு நோ ஆன்ட்டி, அவர் இப்பொ மிகப் பெரிய இடங்களுக்கு ஆஸ்தான ஜோஸ்யர். அவர் வச்சதுதான் சட்டம்னு பேசிக்கிறா... இன்ஃபாக்ட், இந்த 'ப்ராஜெக்ட்' முடிஞ்சவுடனே, இந்தக் குருட்டு நம்பிக்கைகளையெல்லாம் எதிர்த்து ஒரு போராட்டம் நடத்தலாம்னுருக்கேன். 'ப்ளாவிங் கமிஷன்' எதுக்கு? பேசாமெ ஒரு 'அஸ்ட்ரலாஜிகல் பீரோ' வச்சுடலாமே....''

மஞ்சுளா பேசாமலிருந்தாள்.

''ஸாரி... வேற எதைப் பத்தியோ பேசிண்டிருக்கேன். பத்மநாபனுக்கு எதைப் பத்திச் சந்தேகம்...?''

''துருவ் சொன்னதை அவர் நம்பலே.''

''ஏன், துருவ் ஜாதகத்தைப் பாத்து அவர் அப்படிச் சொல்றாரா, இல்லாட்டா கோமளா ஜாதகத்தைப் பாத்தா?''

மஞ்சுளாவுக்குக் கோபம் வந்தது. ரொம்பப் பட்டு அடக்கிக் கொண்டாள். சந்தியாவுக்குப் பாராட்டு விழாவெல்லாம் நடந்த பிறகு, அந்தப் பாராட்டுக்கெல்லாம் உரியவர் பத்மநாபனும் அவரது ஜோசிய மும்தான் என்பதைச் சொன்னால் சந்தியாவால் அதைத் தாங்கிக் கொள்ள முடியாது என்று அவளுக்குத் தோன்றியது.

''துருவ்வே ஒப்புத்திண்டிருக்கிறப்ப அதைப் பத்தி என்ன சந்தேகம்?'' என்று சந்தியா கேட்டாள்.

''துருவ்வைப் பத்தி நாம எல்லாருமே சரியாப் புரிஞ்சிண்டிருக்கோமான்னு எனக்குச் சந்தேகம். நான் கோமளா உண்டாயிருந்தான்னு 'போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்' சொல்லறதுன்ன உடனே அவன் ஒருகணம் திகைச்சுப் போய் நின்னான். அப்ப அது எனக்குப் பெரிசாப் படலே. இப்பொ நினைச்சுப் பாக்கற போது, அதில் ஏதோர உள் அர்த்தம் இருக்கறதாத் தோணறது. துருவ், உடனே தான்தான் இதுக்குக் காரணம்னு, என்கிட்டே சொன்னதோட மட்டுமில்லாமே போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய்ச் சொல்லி, தன்னை 'அரெஸ்ட்' பண்ணச் சொல்லியிருக்கான்... எதுக்காக...?''

''எதுக்காகன்னு நீங்க நினைக்கிறீங்க?''

''தன் ஆண்மையைத் தனக்குத்தானே நிரூபிச்சுக்கிறதுக்காகவா, இல்லாட்டா தன்னைத்தானே தண்டிச்சுக்கிறதுக்காகவா?''

சந்தியாவை இக் கேள்வி சிந்திக்கத்

யெஸ்..... ஐயா ஜெகன் ஸ்பீக்கிங்

முன்பெல்லாம் மேனேஜரிடம் ஃபோன்ல பேசறதுன்னு ரொம்ப பயமா இருக்கும். அவர் இங்கிலீஷ்ல கேக்கற கேள்விக்கெல்லாம் பதில் சொல்லத் தெரியாம முழிச்சுண்டு நான் பட்ட கஷ்டத்தை சொல்லி மாளாது.

வேலையை ராஜினமா பண்ணிட லாமான்னு நான் யோசிச்சுண்டு இருந்தப்போ விவேகானந்தா கல்வி நிலையத் தின் விளம்பரத்தை பார்த்தேன். தபால் மூலமா படிச்சா அது நேர சொல்லித்தர மாதிரி இருக்கு மான்னு சந்தேகமா இருந்தது.

தற்செயலா ஒரு நாள் என்னுடைய நாத்தனார் பொண்ணு லலிதாகிட்ட இதுபத்தி பேசிண்டிருந்தப்போ அவ விவேகானந்தா கல்வி நிலையத்தில் தபால் மூலம் இங்கிலீஷ் பேச கத்துக்கற விஷயம் தெரிஞ்சுது. பாடம் எல்லாம் நேரிடையா சொல்லிக் குடுக்கற மாதிரி இருக்கு, ரொம்ப நன்னு புரியறதுன்னு அவ சொன்னா. அவ குடுத்த தைரியத் துல நான் தபால் முறை பயிற்சியில் சேர்ந்தேன்.

மொதல்ல மூணு மாசம் இங்கிலீஷ் கிராமர் கத்துண்டேன். அதுக்கு அப்புறம் மூணு மாசம் "ஸ்போக்கன் இங்கிலீஷ்" கத்துண்டேன்.

உண்மையை சொல்லப்போனா முன்னல மேனேஜர்கிட்ட பேசணும்னு பயந்துண்டு இருந்த நான இப்படி இங்கிலீஷ்ல சரளமா பேசறேன்னு எனக்கே ஆச்சர்யமா இருக்கு. எங்கிட்ட ஏற்பட்டுருக்கற மாற்றத்தை என்னால நன்னு புரிஞ்சுக்க முடியறது.

கான்வென்ட்ல படிச்சுண்டு இருக்கற என்னோட குழந்தைக்கு பாடஞ் சொல்லிக் கொடுக்கறத்துக்கு நான் கத்துண்ட இங்கிலீஷ் கிராமர் ரொம்ப உதவியா இருக்கு. ஹஸ்பண்ட் கூட எங்கேயாவது வெளில, வாசல்ல போனா சந்திக்கற வாளோட இங்கிலீஷ்ல பயப்படாம பேச முடியறது.

மொத்தத்துல சொல்லப்போனா இங்கிலீஷ்ல பேச முடியலேயேன்னு கவலைப்படற என்னைப் போல எத் தனையோ பேர்களுக்கு நல்ல முறைல பயிற்சியளிக்கிறது விவேகானந்தா கல்வி நிலையம்.

ஆங்கிலத்தில் பேச விரும்பும் அனைவரும் இப்பயிற்சியில் சேர்ந்து பயன் பெறலாம். உடனே தொடர்பு கொண்டு நீங்களும் பயன் பெறுங்கள்.

விவேகானந்தா கல்வி நிலையம்
தபால் பெட்டி எண்: 4986
9, நடேசன் தெரு,
தி.நகர், சென்னை-600 017.

Naga

தூண்டியது. துருவ் அவளிடம் சொன்னது அவள் நினைவுக்கு வந்தது. சிந்தனையைக் கொன்றுவிட்டு மிருக நிலையில் கோமளாவுடன் வாழ்க்கையை அனுபவிக்கலாமென்று தான் திட்டமிட்டிருப்பதாகச் சொன்னான். இது அவனுடைய எதிர்காலத் திட்டம் என்றால், கோமளா அவ் வீட்டை விட்டுச் சென்ற போது, 'எதுவும்' நடந்து விடவில்லை என்றுதானே அர்த்தம்? ஆக, இப்பொழுது போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று இவ்வாறு வாக்குமூலம் கொடுத்திருப்பது தன்னைத் தானே வருத்திக் கொள்வதற்காகவா? அல்லது, அந்தப் பெண்ணின் மீது களங்கம் ஏற்பட்டு விடக் கூடாதென்ற நல்லெண்ணமா? அல்லது, மற்றவர்களுக்குத் தன் 'ஆண்மையை' நிரூபித்துக் காட்ட ஒரு வாய்ப்பா? மஞ்சுளா சொன்னது போல் அவர்களில் யார்தான் அவளைப் புரிந்து கொண்டிருக்கிறார்கள்? அவன் எங்கே போயிருப்பான்? செல்வத்திலேயே பிறந்து வளர்ந்தவனுக்கு இரண்டு மாதங்கள் கையில் காசில்லாமல், சௌகர்யங்களை எல்லாம் துறந்து இருக்க முடியுமென்பது சாத்தியமா? அவனால் வீணை வாசிக்காமலிருக்க முடியுமா?

''என்ன யோசிச்சிண்டிருக்கே?'' என்றாள் மஞ்சுளா.

''ரெண்டு மாசமாக் காணோமே, போலீஸ்லே சொல்லிப் பார்க்கலாமா?'' என்றாள் சந்தியா.

''நோ... அவா அவளைக் கண்டுபிடிச்சு அழைச்சிண்டு வந்தாங்கன்னா, அவன் நம்மை மன்னிக்கவே மாட்டான்.''

''பட், வேர் ஈஸ் துருவ்?.... நான் துரு'ஸூமை'ப் போய்ப் பார்க்கலாமா?'' என்றாள் சந்தியா.

''அஃப் கோர்ஸ். நான் பாத்துட்டேன். எனக்கு ஒண்ணும் தெரியலே...''

சந்தியா துருவ்வின் அறைக்குச் சென்றாள்.

வீணை உறையிலிருந்தது. புத்தக அலமாரியைத் திறந்து பார்த்தாள். துருவ்வின் ஈடுபாடு எல்லாத் துறைகளிலுமிருந்தது. அதை எடுத்துக் காட்டுவதற்கான புத்தகங்கள். விஞ்ஞானம், தத்துவம், கலைகள்... சுவரோடு பொருத்தப்பட்டிருந்த அந்த நீண்ட புத்தக அலமாரியில் வரிசை வரிசையாக வைக்கப்பட்டிருந்த அப் புத்தகங்களில் ஒர் ஒழுங்கில்லை. இசை நூலுக்கருகில், வான சாஸ்திர நூலிருந்தது. ஷேக்ஸ்பியருக்குப் பக்கத்தில், சுற்றுப்புற சூழ்நிலை சுகாதாரம் பற்றிய நூல். அவன் அவற்றைப் படித்து விட்டு, தலைப்பு வாரியாக வைக்க வேண்டுமென்ற அக்கறையில்லாமல் கை பட்ட இடத்தில் வைத்திருக்க வேண்டும்.

அவன் திடீரென்று யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் போவதற்கு முன்னால், கடைசியாகப் படித்த நூல்கள் என்று அனுமானிக்கக் கூடியவையாய்க் கட்டிலில் கிடந்த புத்தகங்கள், நீட்சே, அரவிந்தர். இரண்டு புத்தகங்களும் பிரித்தே கிடந்தன.

அவன் வீட்டை விட்டுப் போன பிறகு இந்த அறைக்குள் யாரும் நுழையவில்லை என்று சந்தியாவுக்குப்பட்டது.

நீட்சேவுக்கும் அரவிந்தருக்கும் ஏதாவது சம்பந்தமிருக்கிறதா?

இருக்கிறது. நீட்சே ஒரு சுத்த மனிதன் உருவாவதைத் தத்துவார்த்த ரீதியாகக் கனவு கண்டான்.

அரவிந்தர் ஆன்மீக ரீதியில் கண்டார்.

துருவ்வின் கனவு என்ன...?

(தொடரும்)

இதயவாசல்

கொள்ளை கொள்ளையாகச் சொத்தும், கொண்டதை விடாத முதலைக் குணமும் நிறைந்த கதாநாயகன், ரமேஷ் அரவிந்த் -

ஒரு பணக்கார வாலிபனைக் காதலித்துக் கல்யாணம் செய்து கொள்ளும் தன் அக்கா, அவளால் கொடுமைக்குள்ளாகி, வாழ முடியாமல் வீட்டுக்குத் திரும்பி விட்டதைத் தொடர்ந்து, பணம் படைத்தவர் சம்பந்தமே கூடாது என்பதில் உறுதியாக இருக்கும் கதாநாயகி மீனா -

இருவரின் சந்திப்பைத் தொடர்ந்து, மீனாவின் இதயத்தில் இடம் பெறுவதற்காக ரமேஷ் அரவிந்த் காதல் போராட்டக் களத்தில் குதித்து, அதனால் அடையும் தொல்லைகளும் வேதனைகளும்தான் கதை.

ரமேஷ் அரவிந்த், மீனா சந்திப்புகள் - வார்த்தை மோதல்கள் - அவற்றின் விளைவாக நிகழும் உணர்ச்சிப் போராட்டங்கள்... ரசமான நிகழ்ச்சிகள். இருவருமே கச்சிதம். எள்ளாயும், அவ்வப்போது ரமேஷ் அரவிந்த் 'நே' என்று விழிப்பது கைவிடப்பட வேண்டிய ஒரு 'மேனரிஸம்'.

ஏகப்பட்ட பெண்களைப் பெற்று விட்ட கவுண்டமணி, ஒவ்வொருத்தியையும் ஒவ் வொருவனிடம் பிடித்துக் கொடுப் பதற்காகக் கையாளும் யுக்திகள் சிரிப்போ சிரிப். அதுவும் ரமேஷ் அரவிந்த் தலையில் ஒரு பெண்ணைக் கட்டி விட அவர் மேற் கொள்ளும் விடாப்பிடியான முயற்சிகள் கலகல மட்டுமல்ல, கதையோட்டத்துக்கும் துணை.

குறிப்பிட வேண்டிய மற்றொருவர் 'ஐடியா' விவேக். அவருடைய 'ஐடியா'க்கள் 'பூமரா'ங்' ஆயுதம் போல அவரிடமே திரும்பி வந்து கும்கும் குத்துக்களைப் பெற்றுத் தந்து, அவரை அவஸ்தைக்குள்ளாக்கினாலும், அவற்றை அவர் ஒரு 'தன்வினை தன்னைச் சுடும்' உணர்வோடு தாங்கிக் கொள்வதில் தெரிவது ஒரு தனி ரசனை.

சிறிது நேரமே வந்து போனாலும் சிரிக்க வைத்து நெஞ்சில் இடம் பெறுபவர் டைப்ரைட்டிங் இன்ஸ்டிடியூட் நடத்தும் பாண்டு. அங்கு படிக்கும் மாணவிகளிடம் காதல் வயப்படுவதில்லை என்று வந்து சேரும் ஒவ்வொரு மாணவனிடமும்

எழுத்து மூலம் உறுதிமொழி பெற்று, அவர்களை மூர்ச்சை போடச் செய்வதில் அவர் அடையும் மகிழ்ச்சி அட்டகாசம்.

ரசமான சிறு சிறு சம்பவங்களாக வேகம் பிடிக்கும் கதையை மேலும் உந்தித் தள்ளும் வகையில் ஒரு 'கிரியா ஊக்கி'யாக இடைவேளைத் தொடக்கத்தில் வந்து சேருகிறவர் சரத்குமார். ரமேஷ் அரவிந்துக்குத் துணை நிற்கும் அவர் முயற்சிகளுக்கு எதிர் நடவடிக்கையாகக் களத்தில் இறங்கும் வில்லன் உதயபிரகாஷ் வித்தியாச ரகம்.

மனத்தில் இடம்பிடிப்பவர்கள் பலர் என்றாலும் நிலைப்பவர் இந்த இரு வரும்தான்.

- சி. ஆர். கே.

வரப்போகும் முதல்வருக்கு உமது உபன்யாசம் என்ன?

★ பி. வொ, பாளையங்கோட்டை.

? தமிழ் நாட்டில் அமைதி திரும்புமா?

! தலைவர்கள் அனுமதித்தால் திரும்பும். ஆனால் தூண்டி விடுவதில்தான் தீவிரமாயிருக்கிறார்கள்.

★ வே. செந்தில் குமார், கொங்கணாபுரம்.

? அரசியல் அசிங்கம் என்று எதைக் கூறலாம்?

! ராஜீவின் அகால மரணம், அவரை அரசியல் ரீதியாக எதிர்த்தவர்களையும் அதிர்ச்சிக்குள்ளாக்கி துக்கப்பட வைத்திருக்கும் போது, அவரது சிதைந்த உடலையும் கொட்டும் ரத்தத்தையும் பேனர் விளம்பரமாக்கி வோட்டுப் பிடிக்க முயல்வதும் ராஜீவின் இந்தக் கோரமான முடிவுக்குத் தி. மு. க.வே காரணம் என்பது போல் அதில் வாசகம் பொறிப்பதும், அசிங்கம்தான். அதிலும் கே. ஏ. கே. விடம் நாம் இந்த அநாகரிகத்தை எதிர்பார்க்கவில்லை.

★ என். முருகேஷ், பெருஞ்சேரி.

? நரசிம்மராவ் இ. காங்கிரஸின் தலைமைப் பதவிக்குத் தகுதியானவர்தானா?

! பதவி ஏற்ற பிறகு அவர் பத்திரிகையாளர்களுக்குக் கொடுத்துள்ள முதல் பேட்டி நம்பிக்கையை வளர்க்கிறது. நிலையான அரசு என்பது ஒரு தனி நபரைப் பொறுத்தது அல்ல; கொள்கைகளையும் திட்டங்களையும் பொருத்தது என்றும், உட்கட்சித் தேர்தலும் உட்கட்சி ஜனநாயகமுமே கட்சியைத் தூய்மைப்படுத்தவும் இளைய தலைமுறைக்கு வாய்ப்பளிக்கவும் வல்லது என்றும் கூறியதுடன், நாட்டின் முக்கிய பிரச்னைகளையும் பட்டியலிட்டிருக்கிறார். ஆனால் அவரால் தாம் நினைப்பதைச் சாதிக்க முடியுமா, சாதிக்க விடுவார்களா, சந்தேகம்தான்!

★ தஞ்சைத் தரணியன், முத்துப்பேட்டை.

? வரப் போகும் முதல்வருக்கு உமது உபன்யாசம்?

! திருக்குறள் 121, 127, 423, 517, 784, 448, 74, 118, 131, 154, 294, 363 ஆகிய ஒரு டஜன் திருக்குறள்களைப் படித்து அதன்படி நடந்து கொள்ளுங்கள்.

★ ஏ.பி.எஸ்.வி. ஷண்முகம், தூத்துக்குடி.★

? இரண்டு வருஷங்களாகக் சுமுக அரசு இருந்து வந்தது வன்முறை, துப்பாக்கிக் கலாசாரம் தமிழகத்தில் பரவி விட ஒரு காரணம் என்பதைத் தங்களால் மறுக்க முடியுமா?

! முடியாது. விடுதலைப் புலிகள் விஷயத்தில் அனுதாபம் கூடாது; மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று கல்கி பலமுறை தி. மு. க. அரசை எச்சரித்திருக்கிறது. அதே சமயம், விடுதலைப் புலி என்ற பாம்புக்கு ஆரம்பத்தில் பால் வார்த்து வளர்த்து விட்டது காங்கிரஸ், அ. தி. மு. க. ஆட்சிகள்தாம் என்பதையும் மறவாமல் இருக்கிறது. தற்போது ராஜீவ் காந்தி கொலைக்குப் 'புலிகளுடன் சேர்ந்து தி. மு. க. வும் சதி செய்தது' என்பது ஆதாரமற்ற குற்றச்சாட்டு என்று சுட்டிக் காட்டுகிறது.

★ ஆர். ரங்கராஜன், கங்காதரபுரம்.

? ராமநாதன் தேர்தலில் நிற்பதை விமர்சனம் செய்துள்ளீரே? வேத சாஸ்திரம் பயின்றவர் தேர்தலில் நிற்கக் கூடாதா?

! தாராளமாக நிற்கலாம்; அவர் நிற்பதைத் தவறு என்றும் நான் கூறவில்லை. இன்றைக்கு நம் தலைவர்களால் கையாளப்படும் ''அரசியல் சாஸ்திரம்'' பற்றிப் படிப்படியாக அறிய வரும் போது, வேதசாஸ்திரம் பயின்ற அவர், அதிர்ச்சிக்குள்ளாவது நிச்சயம் என்பதைத்தான் சுருக்கமாக ஒரு வரி பதிலாகக் கூறினேன்.

★ இரா. சுந்தையா, ஆலடியூர்.

? 'ராஜீவ் மரணத்துக்கு விடுதலைப் புலிகளே காரணம்' என்கிறீர்கள். மார்ச் 5 விடுதலைப் புலிகள் - ராஜீவ் சந்திப்புப் பற்றி ஹிந்துவில் வெளியான செய்தியைப் படிக்கவில்லையா?

! படித்தேன். 'அப்படி ஒரு சந்திப்பு நிகழவேயில்லை' என்பதாக வெளியான மறுப்புக்களையும் படித்தேன். ''பிரபாகரனைப் போராட்டத்தைத் தொடரச் சொல்லுங்கள்'' என்பதாக ராஜீவ் தட்டிக் கொடுத்துப் பேசியே இருக்க முடியாது' என்ற ஆணித்தரமான எதிர்வாதத்தையும் பத்திரிகைகளில் படித்தேன்.

நீங்கள் கேட்டவை - தராசு

★ அ. அருண், சேலம்.

? யார் பதவிக்கு வந்தாலும் அபரிமித மெஜாரிட்டி கூடாது என்கிறீர்கள். இந்தக் கட்சிக்கு இம்முறை வோட்டுப் போட்டால் அது 51% இடங்களைப் பெறும் என்று எப்படி கணிக்க முடியும்?

! முடியாதுதான். ஒரு உத்தேசமாகத்தான் வாக்காளன் செயல்பட முடியும். நான் கூறியது, வாக்காளருக்கு அறிவுரை என்ற முறையில் அல்ல. எந்த சதவீதக் கணக்கில் கட்சிகள் நாடாளுமன்றத்தில் இடம் பெற்றால் நாட்டுக்கு நல்லது என்ற அளவில் தான். இது காரணமாகத்தான் ஏறத்தாழ சம பலமுள்ள இரு கட்சி ஜனநாயகங்கள் உலக நாடுகள் பலவற்றில் சிறப்பாக இயங்கு கின்றன.

★ அ. பரக்கத் அலி, மாப்பின்னைகுப்பம்.

? உங்களைக் கவர்ந்த நபர் யார்?

! சமீபத்தில் ஒரு தாயும் மகனும். ராஜீவின் சடலம் வந்த பெட்டி மீது ஏராள மாக மலர்கள் தூவப்பட்டிருக்க, மெய்க் காவலர் குப்தாவின் சவப்பெட்டி மீது எது வுமே இல்லாததைக் கண்ட சோனியா, ராஜீவின் பெட்டி மீது இருந்த மலர்களை அள்ளி குப்தாவின் பெட்டி மீது தூவினார். அப்பாவின் சிதைக்குத் தீ மூட்டிய அடுத்த ஒரு மணி நேரத்தில் குப்தாவின் வீட்டுக்கு ராகுல் சென்று ஆறுதல் அளித்தார்.

★ கா. கு. இலக்கியன், அரசூர்.

? வங்கான தேசம் வென்னத்தால் பாதிக்கப்பட்ட போது ஜெயலலிதா நிவாரண நிதி வழங்கியது போல் கருணாநிதி ஏன் வழங்கவில்லை?

! அ. தி. மு. க. தொடர்ந்து பத்திரிகை களில் முழுப் பக்க விளம்பரங்கள் வழங்கி

★ நாகரிக...

★ ....நடத்தை.

வந்திருப்பது போல் தி. மு. க. ஏன் செய்ய வில்லையோ, அதே காரணம்தான். நிதி வசதி பற்றாக்குறைதான். இந்தியக் கட்சிகள் அனைத்திலும் விளம்பரத்துக்காக மிக அதிகமாகச் செலவழித்திருப்பது அ. தி. மு. க. தான் என்பது நம்பகமான பத்திரிகைச் செய்தி.

★ எஸ். யோகலிங்கம், சென்னை - 82.

? வன்முறையால் பாதிக்கப்பட்ட வியாபாரிகளுக்கு நஷ்டஈடு கேட்டு வணிகர்கள் கடை அடைப்பு நடத்துவது பற்றி...?

! அதில் ஒரு நியாயம் இருக்கிறது. 'தமிழக அரசு எல்லா முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறது' என்று தலைமைச் செயலர் அறிக்கை விடும்போதே கடைகள் சூறையாடப்படுகின்றன. 'அமைதி திரும்பியதால் கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கிறோம்' என்று தமிழக அரசு கூறும் போதே கருணாநிதியின் கார், பிரசார வேன் கொளுத்தப்படுகிறது. வியாபாரிகளின் உடைமைகளுக்கு அரசு பாதுகாப்புத் தர முடியாத போது, நஷ்டஈடு கோரிக்கை வலுப்படுவதில் வியப்பென்ன?

★ ஏ. எஸ். மாரியப்பா, புதுக்கோட்டை.

? 'என் பிறந்த நாள் கொண்டாட யாரும் சென்னை வர வேண்டாம். மாலை வேண்டாம்' என்றாரே கருணாநிதி?

! ஒருபுறம் 'ராஜீவைக் கொல்லத் தி. மு. க. - புலிகள் கூட்டுச் சதி என்கிறார்கள்; மறுபுறம் 'ராஜீவின் அஸ்திக் கலசத்துக்கு மலர் மரியாதை செய்ய வரவில்லை' என்கிறார்கள். வந்திருந்தால் அமைதியாக அனுமதித்திருப்பார்களா? இந்த லட்சணத்தில் மு. க. பிறந்த நாள் வேறு கொண்டாடி, மாலை போட்டுக் கொண்டால் அவ்வளவு தான்! ஒரு நாகரிகம் காரணமாக ஒரு புயல் தவிர்க்கப்பட்டிருக்கிறது.

★ மாலை வேண்டாம்.

★ அதிகபட்ச விளம்பரம்

★ தருதியாளரா?

★ ரூ. 20 பரிசு பெறுபவர்:
ஏ. பி. எஸ். வி. ஷண்முகம்,
37, பிரெஞ்சு சாப்பல் ரோடு,
தூத்துக்குடி - 628 001.

நேற்றுவரை நந்தவனம்

10

''நீதா...இளவரசு... கண்ணு இல்லே... பாட்டிகிட்ட வந்தா லட்டு, பணியாரம் தருவேன். வாம்மா...''

ஒரு கையில் சோற்றுப் பாத்திரமும், இன்னொரு கையில் ஸ்பூனுமாய் வேகு வேகென வெராந்தாவிலிருந்து வாசற் கேட்டுக்கு ஓடி வந்த அம்மாள் மூச்சிரைக்க நின்றாள்.

இதற்குள் இரண்டு வயசு இளவரசு, கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே நுழையும் மீராவின் புடைவைத் தலைப்பில் முகத்தைத் தேய்த்தான்.

''அட ராமா... அவுங்க புடைவை முழுக்க சோத்துப் பருக்கையாக்கிட்டியா.... இரு... அப்பாவைக் கூப்பிடறேன்.''

அந்த அம்மாள், மீராவைப் பார்த்துத் தயக்கத்துடன் சிரித்தாள்.

''வணக்கம்மா...''

பதில் வணக்கம் சொல்லக் கூடத் தெரியாத அளவுக்கு அப்பாவியான முகம்.... நெற்றியில் பொட்டு இல்லையே தவிர - மற்றபடி லட்சுமீகரமாகத்தான் இருந்தது. காரணம் - காது, மூக்கு, கழுத்து அனைத்திலும் வைரமும், தங்கமும் மின்னியிழாலும் இருக்கலாம். இயல்பாகவே சிலருக்குச் செல்வாக்கான பெரிய மனுஷத் தனமான முகம் அமைந்து விடுவதும் உண்டு.

இந்த அம்மாளுக்கு அப்படிப்பட்ட முகம் அமைந்திருப்பதினாலும் இருக்கலாம்.

முதல் பார்வையிலேயே மீரா புரிந்து கொண்டு விட்டாள்.

'இவங்கதான் எக்ஸ் எம். எல். ஏ. பெண்டாட்டியா இருக்கும்...'

அவள், தோளிலிருந்து நழுவிய பையைச் சரி செய்வதற்காகக் கையிலிருந்த சூட்கேஸை ஒரு கணம் கீழே வைத்தாள்.

''இது... எம். எல். ஏ. தருமராஜன் வீடுதானே?''

''ஆமா... அவரு... உள்ளே வாங்க. வாசல்லேயே நிறுத்தி வச்சு விசாரிச்சா குமருத் தம்பி திட்டும்...''

மீரா, தயங்கியபடி அந்த அம்மாளின் பின் சென்றாள்.

முதல் நாள் ரயிலேறும் வரையில் கூட தஞ்சாவூரில் எங்கே போய்த் தங்குவது என்பதை அவள் தீர்மானிக்கவில்லை.

அப்பா ஆயிரம் தடவை கேட்டார்.

''புது இடம்... தங்கறதுக்கு வீடு வாசல் கிடையாது. அப்படியாவது இந்த வீம்பு தேவையா மீரா?''

''இதை வீம்பா நீங்க ஏன் எடுத்துக்கணும்? இப்பப் போற ஊரு எனக்குப் புதுசு. என்னை யாருக்கும் தெரியாது. யாரும் என்னை, 'ஐயோ பாவம்'கற மாதிரி பார்க்க மாட்டாங்க...''

''நானும் உன் கூட வர்றேனே...''

''வேணாம்பா.''

விடிகாலையில் ஸ்டேஷனில் இறங்கியவள், அங்கிருந்த லேடீஸ் வெயிட்டிங் ரூமில் கொஞ்ச நேரம் தங்கினாள். வெயில் முகத்துக்கு எதிரே வந்து 'ஹாய், எப்படியிருக்கே?' என்று குசலம் விசாரித்த போது, அவள் குளித்து முடித்துப் புறப்பட்டு விட்டாள்.

ஸ்டேஷனை விட்டு வெளியே வரும் போதே - சுவரில், குவிந்த கையும், சிரித்த முகமுமாய்க் குமரனின் புகைப்படம் போட்ட சுவரொட்டிகள்...

நலிந்த மக்களைக் கைதூக்கி விடும் புரட்சி வீரன் டி. குமரனுக்கே நமது வோட்டு...

'ஒரே சமயத்தில் தந்தையையும், தாரத்தையும் அரசியல் வேள்வியில் பலி கொடுத்த டி. குமரன் அவர்களே வாழ்க...'

மீரா ஒரு கணம் அந்தப் புகைப்படத்தையே பார்த்துக் கொண்டு நின்றாள்.

''வண்டி வேணுமாம்மா...''

ஆட்டோ டிரைவரின் கேள்விக்குத் தலையசைத்தாள்...

''வாங்க... எங்கே போகணும்?''

மீரா, அந்தப் புகைப்படத்திலிருந்து பார்வையைத் துளியும் இசை இருப்பாமல் நின்றாள்.

''எங்கேம்மா போகணும்?''

''ம்... இதோ... இவர் வீட்டுக்கு.''

''அட, நம்ம தலைவரைப் பார்க்க வந்திருக்கீங்களா.. இதை முன்னாலேயே சொல்லக் கூடாது?''

அவன், அவளுடைய கையிலிருந்த பையைப் பிடுங்கி, வண்டிக்குள் வைத்தான்.

''ஏறுங்க...''

அடுத்த பதினைந்தாவது நிமிடம் அவன் குமரனின் வீட்டு வாசலில்.

அலைராஜா ரமணன்

பர்ஸிலிருந்து பணம் எடுக்கப் போன வளை ஆட்டோ டிரைவர் தடுத்தான்.

''வேண்டாம்மா. நானும் அவர் கட்சித் தொண்டன்தான். சாயந்திர நேரத்துல வண்டியில மைக் கட்டி, எலெக்ஷன் பிரசாரத்துக்குப் போவேன். அதுக்கு அய்யாவே வேண்டிய பணம் கொடுக்கிறாரு.. இது ஒண்ணும் பெரிய விஷயமில்லை. ஆளா ஒரு உதவி மட்டும் செய்யுங்க. போதும்...''

அவள், டிரைவரின் முகத்தில் படர்ந்திருந்த பெருமிதத்தையே பார்த்தபடி நின்றாள்.

''நம்ம ஆட்டோவுலதான் வந்ததா ஒரு வார்த்தை சொல்லுங்க, போதும். என் பேர் ஞானப் பிரகாசம்..''

சோபாவில் உட்கார்ந்த மீரா, அந்த ஹாலை ஒருவித பிரமிப்புடன் பார்த்தாள்.

அவளுக்கு எத்தனையோ பணக்கார சினேகிதிகள் இருக்கிறார்கள். அவர்கள் வீட்டுக்கு இவள் சென்றுமிருக்கிறாள். செல்வச் செழிப்புடன் விளங்கும் பங்களாக்கள் அவளுக்கொன்றும் புதிதில்லை.

ஆனால், இது அனைத்திலும் வித்தியாசமாக இருந்தது. ஹாலின் விஸ்தாரமும், உயரமும் - இது மிகப் பழைய காலத்து பங்களா என்பதைப் பறைசாற்றினால் - தரையில் பதித்திருந்த பலவண்ணக் கற்களும், சுவரெல்லாம் இளம் பெண்ணின் கன்னம் போன்ற ஆயில் டிஸ்டெம்பரும், தலைக்கு மேல் காற்றில் சிலுசிலுக்கும் பெரிய கண்ணாடி லஸ்தரும், உட்கார்ந்தவுடனேயே கைதேர்ந்த மஸாஜ் நிபுணன் போல இதமாய் உடம்பை அமுக்கும் சோபாவும் - நவநாகரிகத்தைப் பறைசாற்றின.

மீரா - சோபாவில் ஒரு புறமாய் மல்லாந்து கிடந்த மிகப் பெரிய பொம்மையைக் கையில் எடுத்துப் பார்த்தாள்.

அவள் மீது முகத்தைத் தேய்த்த குழந்தை, எதிர்ச் சோபாவின் பின்புறமாய் நின்று, இவளையே இமைக்காமல் பார்த்தது.

மீராவை வரவேற்று ஹாலில் அமர்த்திய குமரனின் தாய் - காப்பி டிரேயுடன், சிரித்த முகம் மாறாமல் வந்தமர்ந்தாள்.

''கட்சியில இருக்கீங்களா?''

அடுத்த இதழில்.....

வெற்றிலைச் செல்வம்
- சிறப்புக் கட்டுரை

டாக்டர்களுக்கும் உண்டு, பிரச்னைகள்!
- அலசல்

''இல்லே.''

''பின்னே.. ஒ.. நீங்கதான் சொன்னீங்க இல்லே, அந்த பஸ் பயங்கரத்தைப் பத்தி விசாரிக்கணும்னு.. வயசாயிட்டதா? மறந்து, மறந்து போறேன். சித்த இருங்க. குமரு குளிச்சிட்டிருக்கான். இதோ வந்திருவான்...''

''....''

''காப்பி ஆறிடப் போகுது. உங்க பேரு?''

''மீரா...''

''பத்திரிகையில் இருந்து வர்றீங்களா?''

இந்தக் கேள்விக்குக் கொஞ்சம் யோசித்து, மீரா இல்லையெனத் தலையாட்டினாள்.

அந்த அம்மாள் பேரனை இழுத்து மடி மீது வைத்துக் கொண்டே தழதழத்த குரலில் சொன்னாள்:

''பத்திரிகைக்காரங்க எப்பவுமே வாலை விட்டுட்டுத் தும்பைப் பிடிப்பாங்க. எங்க வீட்டுல ரெண்டு பேர் இந்த விபத்துல போயிருக்காங்க. அட, அந்தத் துயரத்தை நாங்க எங்கிட்டும் போய்ச் சொல்லிக்க முடியலை. பத்திரிகையானா, கொஞ்சம் கூடக் கூசாம, எங்க குமரு மேலேயே பழி போட்டுது.. ஏந்தாயீ... நீங்கதான் சொல்லுங்க.. ஒரு மனுஷன் பெண்டாட்டி பிடிக்கலையின்னா அவளைத் தீர்த்துக் கட்டலாம். பெத்த அப்பனைக் கொன்னு - அம்மாக்காரி பூவையும் பொட்டையும் பறிப்பானா? இது தெரியலையே படிச்ச மனுஷங்களுக்கு...''

அந்த அம்மாள், விழிகளில் துளித்த நீரைப் பட்டுப் புடைவையின் தலைப்பினால் துடைத்துக் கொண்டாள்.

சம்பவம் நடந்து மூன்று மாதங்களாகியும் - அவள் பொட்டையும், மஞ்சளையும் ஒதுக்கியும் கூட - காலம் காலமாய்ப் புழங்கிய தடயம் மறையவில்லை. நரைத்த முன் நெற்றி வெள்ளியாய் மின்னுகிறது. பெரிய வட்ட வடிவக் குங்குமத்துக்குச் சொந்தக்காரியாக இருந்தவள் என்பதற்கு அடையாளமாய், இன்னமும் நெற்றியில் மங்கலான கறுப்பு நிலவாய் ஒரு திட்டு இருக்கிறது.

''என் பிள்ளைங்கறதுக்காக நான் சொல்லலை. இத்தனை வயசுக்கும் அவுள் கிட்ட ஒரு தப்புத் தண்டா கிடையாது. என்ன.. சிகரெட்டுப் பழக்கம்தான். ஆரம்ப காலத்துல நான் கூட இதுக்காக இவளை ரொம்பத் திட்டியிருக்கேன். இப்ப அதிக மாக் கண்டுக்கறதில்லே. முப்பது வயசு ஆம்பிளைக்குப் பெண்டாட்டி சுகம் இல்லே. வேற எடம் தேடிப் போற புத்தியுமில்லே.. இவன் இருக்கற எடத்துல என் வீட்டுக்காரர் இருந்திருந்தாருன்னா:.. இந் நேரம் எத்தனை தப்புத் தண்டா பண்ணியிருப்பார்...''

அவள் இழுத்து மூச்சு விட்டாள்.

''எரிஞ்சுப் போனானே.. என் மருமவ.. குணத்துல தங்கம்தான். ஆனா, பெரிய எடத்துப் பொண்ணு. கொஞ்சம் வாய்த் துடுக்கு அதிகம். இத்தனைக்கும் என் மகன் அவ மனசு கோணாமத்தான் நடந்திட்டான். மெத்தப் படிச்சவ. அழகு. இங்கே, எங்க குடும்பத்துல அந்த அழகுமில்லே; படிப்புமில்லே; குணமுமில்லே. குமரன் அப்பா வீட்டைச் சேர்ந்தவங்களுக்கு மனுஷங்களோட தராதரமே தெரியாது.. எங்கே, என்னைக் கட்டிட்டப்ப இவரு எங்க அப்பாகிட்ட மேஸ்திரியா இருந்தவருதான். அப்ப எல்லாம் ரொம்ப உத்தமமான மனுஷராத்தான் இருந்தாரு. நல்ல உழைப்பாளி. அதை எல்லாம் வச்சுத்தான் எங்க அப்பா, அந்த நாளுல ரெண்டு ரைஸ் மில்லும், நாலுறு ஏக்கரா நிலமும், மாந்தோப்பும், வச்சிருந்தாரு.. அந்த நாளு மிட்டாதார்.. நல்ல பையன், முன்னுக்கு வருவான்னு இவரைப் பிடிச்சாரு.. இவரும் முன்னுக்கு வந்தாருதான். ஆனா, ரொம்ப ஒவரா முன்னேறிட்டாரு. அதான் பிரச்னையாப் போச்சு. எதுக்குச் சொல்ல வந்தேன்.. என் மருமவளுக்கும் இவருக்கும்தான் ஆகாது.. எப்பவும் சண்டை. அவ இங்கிலீஷ்லேயே கத்துவா...''

அந்த அம்மாள் முன்னுக்குப் பின் தொடர்பில்லாமல் ஏ தே தா பேசிக் கொண்டே வந்தவள், முகமலர எழுந்து நின்றாள்.

''வா குமரு... உன்னைப் பார்க்கத்தான் இவங்க வந்திருக்காங்க. பட்டணமாம்...''

குமரன், டர்க்கி டவலால் முதுகைப் போர்த்தியவாறு மீராவின் எதிரில் வந்து நின்றான். ஈரத் தலை, சிலுப்பிக் கொண்டு நின்றது. கறுப்பிலும் குளித்து விட்டு வந்ததன் அடையாளமாய்ப் புத்துணர்ச்சி பளீரிட்டது.

''நீங்க...''

''ஞாபகமிருக்கா. மீரா... பஸ் ஆக்ஸிடெண்ட்டுல...''

மீரா, புடைவை விளிம்பைச் சற்று உயர்த்திக் காட்டிப் புன்னகை செய்ய -

அவன் புரிந்து கொண்ட பாவனையில் சிரித்தான்.

''அட, வாங்க. எப்படியிருக்கீங்க?''

''.....''

''நான் என்ன செய்யணும்...?''

''இங்கே தஞ்சாவூர்லே கொஞ்ச நாள் நான் தங்கணும். இடம் வேணும். லாட்ஜ் வேண்டாம். ஒரு ரூம்... அதுலேயே சமைச்சுச் சாப்பிட்டுப்பேன்...''

''ஏதாவது வேலை விஷயமா வந்திருக்கீங்களா?''

''ஆமா. இந்த விபத்து எப்படி நடந்த துன்னு தெரிஞ்சுக்க வேண்டிய வேலை..''

இதற்குள் குமரனின் தாய், ஆச்சர்யத்துடன் இவளைப் பார்த்து, ''அம்மாடீ... நீயும் அந்த பஸ்லே...'' என்று முடிக்காமல் நிறுத்தினாள்.

''ஆமாம்மா...''

''உசிர் பிழைச்சதே பெரிய விஷயம்... பாவம், உன் புருஷன்தான்... எல்லாம் இவள் சொன்னாள். என்கிட்ட எதையுமே மறைச்சதில்லே இவன்...''

அவள் தீர்மானத்துடன் கூறினாள்:

''நீ இங்கேயே தங்கு...''

(தொடரும்)

தலைதலையாம், தலைவர்களாம்!

போட்டி முடிவு:

முடிவு தேதிக்குப் பின் வந்த கடிதங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. சரியான விடைகள் எழுதியவர்கள் 122 பேர். குலுக்கல் முறையில் தலா ரூ. 25 பரிசு பெறத் தேர்ந்தெடுக்கப்பட்ட பத்து அதிர்ஷ்ட சாலிகள்:

1. ஏ. ரவீந்திர பாரதி, 38, தீவா காலனி, பாக்கமுடையான் பேட்டை, பாண்டிச்சேரி - 8; 2. அ. இளங்கோ, மத்திய தந்தி அலுவலகம், ஈஸ்வரன் கோயில் வீதி, ஈரோடு - 638 001; 3. வி. மகாலிங்கம், அடிசன்பெயின்ட்ஸ், செம்பியம், சென்னை - 11; 4. பெ. சின்னதம்பி, துடையூர் அஞ்சல், சிறுகாம்பூர் வழி, திருச்சி மாவட்டம் - 621 213; 5. குமாரி ஷோபா சாகர், 64, ஏ. பி. ரோடு, சூளை, சென்னை - 112; 6. எம். சத்தீஷ்குமார், 11, எல். எம். ஐ. பில்டிங், நாராயணநகர், ராமகிருஷ்ணா வித்யாலயா அருகே, விழுப்புரம் 605602; 7. திருமதி. பவானி சீனிவாசன், 7, ஏழாவது கிராஸ் தெரு, இந்திரா நகர், சென்னை - 20; 8. எஸ். வி. ராஜசேகர், 19, முதல் தளம், இரண்டாவது குறுக்குத் தெரு, மேற்கு சி. ஐ. டி. நகர், சென்னை - 35; 9. தீரஜ பாலகப்பிரமணியன், 15, 'ஹெச்' பிளாக், டி. ஹெச். கியூ. போஸ்ட், புதுதில்லி - 110 011; 10. ம. சிவமணி, 6/71, ஆலை வீதி, குயவர்பாளையம், பாண்டிச்சேரி - 605 013.

சரியான விடைகள்:

1. சந்திராசுவாமி; 2. கந்தர்ஜி; 3. சந்திரசேகர்; 4. முலாயம் சிங் யாதவ்; 5. எல். கே. அத்வானி; 6. வி. பி. சிங்; 7. ஜோதிபாசு; 8. அஜித்சிங்; 9. மதுதண்டவதே; 10. பங்காரப்பா; 11. முரளிமனோகர் ஜோஷி; 12. மூப்பனார்; 13. ஈ. எம். எஸ். நம்பூதிரிபாட்; 14. தேவிலால்; 15. சல்மான் குர்ஷித்; 16. சதாம் ஹுசைன்; 17. பாரதிராஜா; 18. மேனகா காந்தி; 19. சுப்பிரமணிய சுவாமி; 20. கருணாநிதி.

கழுதை

அது சாகவில்லை. நடுநடுவே தலையை மட்டும் உயர்த்தி அசைத்தது. உடம்பில் ரத்தக் காயம் தெரியாத மாநிரி சடையாக ரோமம் படர்ந்திருந்தது.

சற்று ஒரமாக நடந்து போய்ப் பார்த்தான். ஒருக்களித்தாற்போல் படுத்திருந்தது. பின்னங்கால்களை அதனுடைய உடம்பின் ஒரு பகுதியே அழுத்திக் கொண்டிருந்தது. கால்கள் கோணலாக, அரைகுறையாய்ச் சாறு பிழிந்த கரும்பு மாநிரி சுவாதீனமற்று இருந்தன. எந்த லாரியாவது மோதியிருக்குமோ!

ரஸ்தாவில் அது படுத்திருந்த இடத்தின் புழுதி மண் மேலும் நைஸ் புழுதியாகியிருந்தது. இரண்டு நாளாக அதற்கு மலஜலக் கழிப்பு இருந்த இடத்திலேயே.

ஆனால் சேறு மாநிரி ஆகவில்லை. மாடோ, எருமையாகவோ இருந்தால் அந்த இடம் சகதியாகியிருக்கும்.

ஆகாரம் சாப்பிடாமலேயே எப்படி இரண்டு நாள் சமாளித்திருக்கிறது?

அது படுத்திருந்த இடத்திற்குப் பக்கத்திலே இருந்த பங்களாவுக்குள் நாலைந்து மாருதி கார்கள் பல வண்ணங்களில், பல கோணங்களில் நின்று கொண்டிருந்தன. அந்தப் பங்களாத் தோட்டக்காரன், அதற்கு ஏதாவது ஆகாரம் போட்டிருப்பானா?

ஒரு புல்லோ, பழைய சோறு வைத்த சுவடோ அருகில் காணப்படவில்லை. குறைந்த பட்சம் தண்ணீராவது யாராவது வைத்திருப்பார்களா?

முன்பு ஒரு நாள் ஒரு தெருக் கழுதைக்கு - இந்தக் கழுதைக்கு அல்ல - தண்ணீர் வைத்து, அது பிளாஸ்டிக் வாளியைக் கொஞ்சம் கடித்துத் தின்று விட்டது.

கழுதைக்கும் தனக்கும் ஏன் ஒருவித அன்னியோன்னியம்? நினைத்துக் கொண்டான்.

சித்தி அள்ளைக்கு அவளைத் திட்டிய திட்டின் வலி அடங்க நீண்ட நேரமாயிற்று.

"ஏண்டா கழுதை, தண்டக் கழுதை, தடிக் கழுதை, அறிவுகெட்ட கழுதை, பிளாஸ்டிக் பக்கெட்டிலே கொண்டு போய்க் கழுதைக்குத் தண்ணீர் வெச்சா யாமே. பக்கத்து வீட்டுப் பாப்பா சொன்னாள்."

பக்கத்து வீட்டுப் பாப்பா, வெள்ளிக் கிழமைகளில் தெருவைப் பரப்பிப் பெரிசாகக் கோலம் போடுகிற கெட்டிக்கார வேலைக்காரப் பெண். காலையில் அவள் குனிந்து கோலம் போடும் போது, பேப்பர் காரப் பையன் சைக்கிள் ஸ்டாண்டை ரிலீஸ் செய்யச் சிரமப்படுவது போல் தாமதித்து ரசிப்பதை இவன் பார்த்து உள்ளுக்குள் கோபப்பட்டிருக்கிறான்.

கழுதைக்குத் தண்ணீர் வைத்ததைச் சித்தி விடம் அவள் சொல்லும்வரை "புத்தம் புது பிளாஸ்டிக் பக்கெட்டை இந்த அணில் சனியன் வந்து எப்படிக் கடித்திருக்கிறது பாருங்கள்," என்று சித்தி சித்தப்பாவிடம் அங்கலாய்த்துக் கொண்டிருந்ததை அவன் மனசுக்குள் ஒரு படபடப்போடு கேட்டுக் கொண்டிருக்கிறான்.

கருவேப்பிலை ஒடிக்க அந்தக் கறுப்பி வந்து காட்டிக் கொடுத்து விட்டுப் போய் விட்டாள்.

இன்ஸ்டிட்யூட்டில் மாணிக்கம், "ஓமக்குச்சி, இன்றைக்குக் கரெக்டாக வந்துட்டீங்க," என்று மலர வரவேற்றான்.

இவன்கிட்டே கழுதை பற்றிப் பேசலாமா? அது இரண்டு நாளாகப் படுத்த இடத்திலேயே கிடக்கிறது.

அதைத் தாண்டி வாக்கிங் போகிற சேட் - ஒரொரு திருப்புச் சந்திலும் நின்று இரு கைகளையும் உயரத் தூக்கி விரித்து, பட்சி சிறகை அடித்துக் கொள்வது போல, இரண்டு தரம் அடித்துக் கொண்டு கவாசப் பயிற்சி செய்பவர் - அவர் கண்ணுக்கு இதுபடவில்லையா?

சேட்டுகளுக்குக் கொஞ்சம் இரக்க மனசு என்பது அவன் அபிப்பிராயம். இன்னொரு சேட், தன் காம்பவுண்டில் நூறு, இருநூறு குப்பத்து ஆட்களை வட்டமாக, அழகாக உட்கார வைத்து, இலை போட்டு அத்தனை பேருக்கும் ஆட்களை விட்டுச் சாதம் பரிமாறியதை அவன் பார்த்திருக்கிறான்.

ஒருநாள் அவனுக்கு இருந்த பசியில் தானும் கூட உட்கார்ந்து விடலாமா என்று சபலப்பட்டான். ஆனால் கௌரவம் தடுத்து விட்டது.

வீட்டுக்கு வந்த போது சித்தி அவ

'வனமாலி'

னிடம் ஒரு தபால் உறையைத் தந்தாள். ''இண்டர்வியூ போலிருக்கு. திடுதிடுன்னு போய் விடாம, உங்க சித்தப்பா வந்ததும் அங்கே யாரையாவது பிடிக்க முடியுமா முன்னாடின்னு பார்த்துக்கிட்டுப் போ... இந்தத் தடவையாவது!''

அவனுக்கு ஸ்டென்சில் காப்பியைப் பார்த்து உற்சாகம் ஏற்படவில்லை. சம்பளம் தேவலை. அறுநூறிலிருந்து, அப்புறம் கோடு - முப்பது - அப்புறம் கோடு, எண்ணூற்று ஐந்து - டானிடியூ அண்ட் பாலிகாட் கம்பெனி.

திருவொற்றியூர் ரொம்பத் தூரம்தான். காலையில் ஏழரைக்குக் கிளம்ப வேண்டியிருக்கும். ராத்திரி எட்டு மணியாகலாம் திரும்ப.

இப்போதே வேலை கிடைத்து விட்ட மாதிரி எதற்குப் பிரமை என்று பற்று இல்லாமல் இண்டர்வியூ காகிதத்தை, 'ஸ்டாப் ஒர்ரியில் அண்ட் ஸ்டார்ட் லிவிங்'கில் வைத்து மூடி விட்டு பம்ப் அடிக்கச் சென்றான்.

மறுநாள் சித்தப்பா தன் ஆபீஸ் போகும் போது, டானிடியூ அண்ட் பாலிகாட் டெலிபோன் நம்பரைக் குறித்துக் கொண்டு போனார். ''பர்சனல் டிபார்ட்மெண்டில் அருணாசலம் இருந்தான். இப்ப இருக்கானோ, இல்லை வேலையை விட்டுட்டுப் போய்ட்டானோ... நம்ம கழுதையோட அதிருஷ்டம் எப்படி இருக்குதோ பார்க்கலாம்!''

நிலை கொள்ளாமல் அன்று பூரா வீட்டிலேயே இருந்து, பழைய பேப்பர்களையும், சில காம்பெடிஷன் சக்ஸஸ்களையும் புரட்டிக் கொண்டிருந்தான்.

மறுநாள் காலை சற்றுப் படபடப்புடனே விடிந்தது. இண்டர்வியூவில் என்ன கேட்பானோ சொல்ல முடியாது. கடைசியாக நியூ டில்லிக்கு வந்த அயல்நாட்டுப் பிரதமர் யார் என்று கேட்கலாம். கவர்னர் சிங் இதற்கு முன் என்ன பதவி வகித்தார் என்று கேட்கக்கூடும்.

''படிச்சுக் கிழிச்சது போதும். போய் ரெண்டு ரூபாய்க்கு வெண்ணெய் வாங்கிட்டு வா. சாயந்தரம் விரதம் தெரியுமில்லே!'' மடித்த இரண்டு ரூபாய் நோட்டைச் சித்தி அவன் பக்கம் வீசினாள்.

''வெண்ணெய் - ஸால்ட்டா, பிளெய்னா?'' என்றான்.

''பூஜைக்குங்கறேனில்லே? உனக்குப் புரிஞ்சுக்குற மூளையே கிடையாது. அதான் எங்கே போனாலும் நாயாட்டம் துரத்தியடிக்கிறான். உப்புப் போடாதது வாங்கிட்டு வா. பொட்டலத்துலே சுருட்டி வெச்சுருக்கிறதை ரொட்டிக் கடையிலிருந்து வாங்கிட்டுவந்து நிற்காதே.''

இரண்டு ரூபாயைக் கை மடிப்பில் செருகிக் கொண்டான்.

''வாடா இங்கே தடிக் கழுதை, முழு முண்டம்! நாட்டை ஸ்டைலா அங்கே போட்டு வைக்கிறே? இழே விழுந்து தொலையப் போவுது.''

மைதானத்துக் கிழக்குச் சாலையில் திரும்பிய போது, அந்தக் கழுதை கிடப்பது தூரத்தில் வரும்போதே தெரிந்தது. காலில் ரொம்பத்தான் அடிபட்டு இருக்கும் போலிருக்கிறது.

கறுகறுப்பான 'வாக்கிங் சேட்' தெலுங்கு நண்பர் ஒருத்தருடன் தெலுங்கில் பேசியவாறு மைதானத்து முக்கில் நின்றிருந்தார். ஒருக்கால் கழுதையைப் பற்றி இருக்குமோ!

எப்படியாவது அது அந்த இடத்தில் இல்லாமலிருந்தால் பரவாயில்லை. ஒரே அடியாகச் செத்து விட்டாலும் தேவலை. இரண்டு நாளாக ... ஏன் நேற்றைக்கும் இன்றைக்கும் சேர்த்தால் நாலு நாள்-

''ஆபீஸ்ல ஜெனரேட்டர் இருந்தும் கூட நிம்மதியா இருக்க முடியலை.''

''ஏன் அப்படி...?''

''அது போடற சப்தத்துல எப்படி நிம்மதியாத் தூங்க முடியும், சொல்லுங்க?''

- சிக்காழி. வி. ரேவதி.

கிழக்கு ரோடில் நடந்த போது கழுதையை இன்னும் கொஞ்சம் கிட்டத்தில் பார்க்க முடிந்தது. முதுகில் ரத்தக் காயம் தெரிந்தது. அதைக் கொத்திக் கொண்டிருந்த காக்கை, அவள் அருகே வந்ததும் சற்றுப் பறந்து விட்டுத் தி ரு ம் ப விட்ட இடத்தைத் தொடர்ந்தது.

கழுதை சலனமற்றுப் படுத்திருந்தது. முடிந்து விட்டதா? இல்லை. காது அசைந்தது. ஒருதரம் கழுத்தைத் தூக்கியது.

சேட் மீதும், அது படுத்திருந்த இடத் தருகே இந்த பங்களாக்காரர் மீதும் வெறுப் பாக வந்தது. 'இவர்களெல்லாம் மனிதர் களே இல்லை. யாராவது ஒருத்தர் ப்ளூ கிராசுக்குப் போன் செய்யக் கூடாதா? ஒரு நாள் இரண்டு நாளா? நாலு நாள் அது சோறு தண்ணீர் இல்லாமல் காக்கைகளின் பீடுங்கல்களோடு...

வெண்ணெய்க் கடைக்குப் போனாள். அங்கிருந்த டெலிபோன் டைரக்டரியைப் புரட்டி, ப்ளூ கிராஸ் சொசைட்டிக்குப் போன் செய்தாள்.

பேசியவர் பொறுப்புடன் கேட்டுக் கொண்டது அவளுக்கு இதமாக இருந்தது. அவளுடைய பெயர் கேட்டுக் கொண்டார். 'எந்த விலாசத்திலிருந்து பேசுகிறீர்கள்?' என்ற கேள்விக்குச் சற்றுத் தயங்கி விட்டு, வேறு வழியில்லாமல் வீட்டு விலாசத்தை யும் சொல்லி வைத்தாள்.

ஒரு ரூபாய் டெலிபோனுக்கு. மீதி ஒரு ரூபாய்க்கு வெண்ணெய் வாங்கி விட்டுச் சித்தியிடம் இரண்டு ரூபாய்க்கு வாங்கினது என்று புளுக வேண்டியதுதான்.

கடைக்காரர் இரண்டு ரூபாய் நோட் டைக் கல்லாவில் வாங்கிப் போட்டுக் கொண்டு, மேஜையைத் துணியால் துடைத் தார். சில நிமிடங்கள் கழிந்து,

''நீங்க எவ்வளவு தந்தீங்க,'' என்றார்.

''ரெண்டு ரூபாய், மடித்த நோட்டு'' என் றாள்.

''டெலிபோன் செஞ்சீங்களே?''

''ஆமாம். ஒரு கால்தான்'' என்றாள்.

''ஒரு காலுக்கு ரெண்டு ரூபாய். சரியா மிருச்சி.''

இடிந்து போய் விட்டாள்.

நோட்டு எங்கோ வழியில் விழுந்து விட்டது என்று சித்தியிடம் என்ன மாதிரி யாகப் புளுகுவது?

இன்ஸ்டிட்யூட் போனாள். ''வாய்யா ஒமக்குச்சி! என்ன இன்றைக்கு பீஃபோர் டைம்?''

நெடு நேரம் தயங்கின பிறகு, ''மார்க் கெட்டுக்கு வந்தேன். ரெண்டு ரூபா நோட்டு கை மடிப்பில் வெச்சிருந்தேனா, எங்கோ விழுந்துட்டுது. மறுபடியும் வீட் டுக்கு அத்தனை தூரம் போகணும். உங்க கிட்டே ரெண்டு ரூபாய் இருக்குமா? நாளைக்குத் தர்றேன்.''

மாணிக்கம் பாக்கெட்டைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். ''பஸ்ஸுக்குத்தான் இருக்கு! மூர்த்திகிட்டே கேட்கலாம். இதோ வந்துடுவான்.''

முக்கால் மணி ஆகியும் மூர்த்தி வர வில்லை. வெறும் இரண்டு ரூபாய். அதைப் புரட்ட அவனால் முடியவில்லை.

சித்தியிடம் புளுக வேண்டியதுதான். இன்னும் கொஞ்சம் தாமதமாகப் போக லாம் என்றால் இண்டர்வியூ பதினொரு மணிக்கு என்ற விஷயம் உதைத்தது.

வீட்டு வாசலில் கம்பி போட்ட பெரிய வேன் நின்று கொண்டிருந்தது. கலவரத் துடன் வாசற்படியிலிருந்த சித்தியிடம் இரண்டு பேர் - சிப்பந்திகள் மாதிரி தோற்றமுள்ளவர்கள் - ஏதோ கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

வேளை நெருங்கியதும் ப்ளூ கிராஸ் வண்டிதான் என்று தெரிந்து விட்டது. மன சுக்குள் அவளுக்கு மகிழ்ச்சி பொங்கியது.

அதைக் காட்டிக் கொள்ளாமல் வாசலை நெருங்கினாள்.

''எழுதிக் கொடுங்கம்மா ஒரு வரி...''

''நான் ஏன் எழுதித் தரணும்?''

''ஒன்பதாம் நம்பர் சீதாபதி வீடு தானே?''

''ஆமாம்.''

''பின்னே போன் பண்ணிட்டு?''

''யாருய்யா திரும்பத் திரும்ப? நாங்க யாரும் போன் பண்ணலை.''

''உங்க வீட்டுக்காரரு பண்ணியிருப் பாரு. அதைப் பற்றி என்ன? இந்த மாதிரி

கழுதையைச் சிகிச்சைக்கு ஒப்படைக்கி றோம்னு ஒரு வரி எழுதுங்க.''

''ஏய்யா நீங்க என்ன பைத்தியமோ? கழுதை கிழுதைன்னு இங்கே வந்து பேசிக் கிட்டு.''

''பலான கழுதையை நாங்க பார்த் திட்டுக் கூட வந்துட்டோம். இதோ இப்பப் போய் வண்டியிலே தூக்கிப் போட்டுக் கிட்டுப் போய் சவுகரியம் பண்ணிடு வோம்.''

''நீங்க இப்போ இங்கிருந்து போக வில்லையானால் டேய், ஒமக்குச்சி! பாரு! என்னவோ வந்து கலாட்டா பண்றாங்க.''

''நாங்க ஏம்மா கலாட்டா பண்றோம். எழுதிக் கொடுக்க இஷ்டமில்லாட்டி விட்டு டுங்க. நாங்கள் வேற ஸ்டெப் எடுத்துக் கிறோம்.''

இவள் மென்று விழுங்கினாள். ''என் னன்னு எழுதணும்?''

''கழுதையைச் சிகிச்சைக்கு ஒப்படைச் சிருக்கோம்னு ஒரு வரி. ஏன்னா நாங்களாக ஏதோ இளப்பிக்கிட்டுப் போயிட்டோம்னு எவனாவது கம்ப்ளெய்ண்ட் கொடுக்கக் கூடாது பாருங்க.''

பனியனுக்குள் செருகியிருந்த பேனா வின் மூடியைத் திறந்தாள்.

சித்தி படபடப்புடன், ''கழுதை, தடிக் கழுதை நீ ஏதாவது கையெழுத்துப் போட்டு வைக்காதே. உங்க சித்தப்பாகிட்டே கேட்டுக் கொண்டு...''

''அவ்வளவுதான் சார்'' அவனது கை யெழுத்தோடு திருப்தியுடன், ''ரொம்ப தாங்க்ஸ் சார்'' என்று சிப்பந்திகள் புறப் பட்டனர்.

''நான்தான் உங்களுக்குத் தாங்க்ஸ் சொல் லணும். டகார்னு வந்துட்டீங்களே! இத் தனை சிக்கிரம்.''

மகிழ்ச்சியோடு அவர்களை வழி அனுப்பி விட்டு நிம்மதியான மனத்துடன் இந்தப் பக்கம் திரும்பினாள். அவன் அவர் களிடம் சொன்னது சித்தியின் காதில் தெளி வாக விழுந்தது. அவள் கடுகடு விழிகள் அவளை உறுத்துப் பார்த்துக் கொண்டி ருந்தன. அவனுக்குப் புரிந்து விட்டது.

அந்த இரண்டு ரூபாய் தொலைந்து விட்டதாக அவனால் இனி அளக்க முடியாது.

சித்தி தன் சொந்த முறையில் என்ன நடவடிக்கை எடுப்பாளோ, சித்தப்பா வந்ததும் அவர் என்னவிதமாக நடத்து வாரோ. இண்டர்வியூவுக்குப் போக சித்தி யிடம் பஸ் காசு இன்றைக்குச் சத்தியமாக கிடைக்கப் போவது இல்லை.

சாயந்திரம் ஏழு மணிக்குச் சித்தப்பா வரும்போதே கேட்டுக் கொண்டு வந்தார். ''அருணாசலத்துகிட்டே சொல்லி விட் டேன். இண்டர்வியூவிலே சுமாராப் பண்ணியிருந்தாக் கூடப் போட்டுக் கொடுத் துடறேன்னார். இத்தனை நாளைக்கப்புறம் கழுதைக்கு அதிருஷ்டம் அடிச்சதுன்னுதான் சொல்லணும். என்ன கேட்டாங்களாம்?''

சித்தி கடுகடுவென்று நின்றாள். ''அவள் உருப்படாத கழுதைங்க. இண்டர்வியூ வுக்கே போகலை.''

''போகலையா? ஏன்? ஏன்? ஏன்?'' தாக் குண்டவர் போல் அதிர்ந்து, பின் கோபா வேசமானார். ''ஏன் போகலே?''

''அது என்னவோ? நீங்களே கேட்டுக் குங்க, உள்ளே தான் மொடங்கிக் கிடக் கிறாள்.''

சித்தப்பா, ''ஏண்டா கழுதை, அவ னவன் யார் கையிலும் காலிலும் விழுந்து வேலைக்குச் சிபாரிசு பிடிச்சிருந்தால் நீ ஏண்டா இண்டர்வியூவுக்கே போகலே?'' என்று திட்டிக் கொண்டே கோபாவேசமாக உள்ளே நுழைந்தார்!

கழுதைக்கு இவ்வளவு நேரம் ஆகாரம் தண்ணீர் கொடுத்து, ஒடிந்த காலுக்கு மருந்து போட்டுக் கட்டுக் கட்டியிருப் பார்கள் என்று நினைக்க அவளுக்கு மகிழ்ச்சியாயிருந்தது.

''சார் ஹெட் ஆபீஸிலிருந்து ஃபோன் வந்தது...''

''என்னவாம்...?''

''அங்கே தூங்கற டைப்பிஸ்ட் களிலே பசுமாடு வந்ததாம். 'என்ன பலன்'னு கேட்டாங்க...''

- சி. பன்னீர் செல்வன்

திருக்கோயில்

உடம்பு என்பது இன்ப துன்பங்களை அனுபவிக்க உதவும் கருவி என்பது சிலரது கொள்கை.

உடம்பு கடவுளின் சந்நிதானம் என்பது ஞானிகளின் அனுபவம். அதனால்தான் நிறைநிலை எய்திய துறவியர் பெரு மக்களை, சந்நிதானம், மகா சந்நிதானம் என்று வணங்குகிறோம்.

கோயிலுக்குப் போய் வருவது முதல் நிலை. நாமே கோயிலாவது நிறை நிலை. கடவுளைப் பாடுவது முன்னுரை. கடவுளாவது முடிவுரை.

கல்லையும் மண்ணையும் கலந்து கலந்து கோயில் சமைப்பது பள்ளிக் கூடப் படிப்பு. உடம்பு ராஜகோபுரம். உள்ளம் கர்ப்பக்கிருஹம் - உணர்வே பரம்பொருள் என்று கோயிலாய்ச் சமைவது பல்கலைக் கழகம். ஆனால் பள்ளிக் கூடம் போகாமல் பல்கலைக் கழகம் போவது சாத்தியம் இல்லை. கோயிலைச் சமைப்பது. பிறகு கோயிலாய்ச் சமைவது. இதுதான் சரியான வழி!

நமது உடம்பும் ஒரு கோயில் என்ப தற்குச் தெம்பரம் ஒரு சிறந்த அடையாளம்.

தெம்பரம் கோயிலுக்கு ஐந்து பிராகாரங்கள். உடம்புக்கும் ஐந்து சுற்றுக்கள் உண்டு. அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என்று ஐந்து கோசங்களை (Layer) விளக்க ஐந்து சுற்றுக்கள். கர்ப்பக்கிரஹம், ஐந்து ஏக்கர் நிலப்பரப்பில் கோயிலுக்கு நடுவில் இல்லை; இடப் பக்கம் சற்றுத் தள்ளி அமைந்துள்ளது. இருதயம் உடம்

பின் இடப்பக்கத்தில் இருப்பதால். ஒரு நாளைக்கு 21,600 முறை மூச்சு விடுகிறோம் என்ற கணக்கில் 21,600 ஒடுகள் மேலே வேயப்பட்டுள்ளன. நமது நாடிகளின் எண்ணிக்கையான 72,000, ஆணிகளாக மேலே அமைந்துள்ளன. இதயத்தின் துடிப்பும் அசைவுமே நடராசர் நாட்டியம் ஆடுவதாக அமைந்துள்ள நிலை.

இன்று திண்ணனூர் என்று, மக்கள் வாயில் நகக்கப்பட்ட ஊரின் உருக்குலையாப் பெயர் திருநின்ற ஊர். அங்கு வாழ்ந்த ஒரு வர் உடம்பையே கோயிலாக்கிய உத்தமர்.

காஞ்சிபுரத்தின் மேற்கே உள்ளது கைலாசநாதர் கோயில். கல்லுக்கு உளிகள் கொடுத்த முத்தத்தால், அல்லது கல்லும் உளியும் நடத்திய யுத்தத்தால், எழுந்தது அந்தக் கலைக் கோயில். அது ஒரு சிற்ப அற்புதம். கல்லின் நடனம். பல்லவன் கட்டிய அந்தப் பெருங்கோயிலுக்குக் குட முழுக்கு நடத்த, நாளும் கோளும் பார்த்து நேரம் கணித்தான் மாமன்னன். விடிந்தால் கும்பாபிஷேகம். பல்லவ அரசன் படுக்கப் போனான்.

இரவில் ஒரு கனவு! புலித் தோல் அணிந்த செஞ்சடை அண்ணல் சிவபெருமான் கனவில் தோன்றினார். மல்லவனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. கோயிலுக்குள் காலை எழுந்தருளிக் காட்சி தர வேண்டிய கருணைக் கடல், கனவில் முன்கூட்டி எழுந்தருளிய கருணைக்கு நன்றி கூர்ந்தான்.

இதயம் விரிய, கைகள் குவிய, கண்ணீர் சோரப் பேசினான்.

''இறைவா! உனக்காகவே சமைக்கப் பட்ட இந்தக் கலைக் கோயில் என் சிந்தையும் செல்வமும் சேர்ந்து உருவாக்கிய படைப்பு. மகிழ்ச்சிதானே ஐயா?''

சிவபெருமான் சிரித்தார். சிரிப்பில் அலட்சியம் கொஞ்சம் அலைமோதியது. மன்னவன் அதைப் புரிந்து கொண்டு, ''சுவாமி ஏன் சிரிக்கிறீர்கள்? என் கொற்றத்தில் ஏதும் குற்றம் உண்டா? நாளைக் காலை குடமுழுக்காயிற்றே!'' என்று பதறினான்.

''குடமுழுக்கு நாளை மாற்ற வேண்டும்...''

''ஆகட்டும் சுவாமி! காரணம் தெரிந்து கொள்ளத் தகுதி எனக்கு உண்டோ?''

''நீ குறித்த அதே நேரத்தில் என் அன்பன், பூசலார் என்பவன் திருநின்ற ஊரில் கட்டிய கோயிலுக்குக் கும்பாபி ஷேகம். அங்கு நாம் செல்வதால் உன் கோயிலுக்கு வர இயலாது.'' - இது சிவ பெருமானின் தீர்மானம்.

'எங்கும், எல்லாச் சமயத்திலும் நீக்க மற நிறையும் பரம்பொருள் ஒரு கோயில் கும்பாபிஷேகத்தில் கலந்து கொள்வதால் வேறு கோயிலுக்கு வர இயலாதா? இது என்ன வேடிக்கை? நீக்கமற நிறைதல் என்ற பரதத்துவத்துக்கே இது குறையல்லவா?' என்றால் பூசலாரின் பக்தியை விளக்க இறைவன் நடத்திய நாடகம் இது.

தன் கோயில் கும்பாபிஷேகம் தடைப் பட்டதும், திருநின்ற ஊரில் நடக்கும் கும்பாபிஷேகத்தையாவது காண்பது என்ற எண்ணத்துடன் படை, குடியுடன் பயணப் பட்டான் பல்லவ அரசன்.

அங்கு பூசலார் கட்டிய கோயில் எங்கு உள்ளது என்றால், எவருக்கும் புரிய வில்லை! கோயில் கட்டிய அடையாளமே இல்லாத போது கும்பாபிஷேகம் என்றால் யார்க்குத் தெரியும்?

பூசலாரைத் தேடிப் போனால் இயான நிலையில் தனியாக அமர்ந்தபடி இருக்கிறார் அவர். ஆண்டவன் சொன்னதைச் சொல்லி, பல்லவன் அவர் காலடியில் விழுந்தான். கோயில் குடமுழுக்கைப் பார்க்க விரும்புவதாகக் கூறினான்.

பூசலார் கண்கள் பனித்தன. தம் இதயத்தைச் கட்டிக் காட்டினார். மனத்துக்குள்ளேயே தாம் கட்டியிருக்கும் மகத்தான கோயிலை அகக் கண்ணால் பார்க்க வேண்டினார். ஆம். கற்கோயில் கட்ட நினைத்தார். பொன்னும் பொருளும் எங்கு தேடியும் கிடைக்கவில்லை. இருந்த இடத்தில் இருந்தபடி பெருநிதி மனத்தால் தேடி, தச்சரும் சிற்பிகளும் பணிபுரிவதை மனத்தால் மேற்பார்வை இட்டு, இரவும் பகலும் தூங்காது விழித்து இதயத்திலேயே கோயில் கட்டினார் பூசலார்.

அதைக் கட்டியவன் அரசன். இதைக் கட்டியவன் அன்பன். அது கற்கோயில். இது நெஞ்சக் கோயில். கோயிலைச் சமைத்தான் மன்னவன். கோயிலாய்ச் சமைந்தார் பூசலார். எந்தக் கோயில் இறைவனுக்கு ஏற்புடையது!

உள்ளத்தில் கோயில் கருவானது. உடம்பே கோயிலாய் உருவானது.

உள்ளம் பெருங்கோயில். ஊன் உடம்பு ஆலயம். நம்புங்கள் சார்!

(இன்னும் சொல்வேன்)

"வரதட்சணையை, எதிர்த்துப் போராடப் போறோம். நீங்களும் கலந்துக்கணும்..."

"ரெண்டு மாசம், தன்னி வையுங் கனேன்..."

"எதுக்கு?"

"அதுக்குள்ளே, என் பையன் கல்யாணத்தை, முடிச்சிடுவேன்..."

- ஆர். வசந்தகுமார், கும்பகோணம் - 1.

★ ★ ★ ★ ★

எங்கள் உறவினர் ஒருவர் ரயில்வேயில் டிக்கெட் பரிசோதகராகப் பணிபுரிகிறார். அவர் ஒருமுறை எதிர்பாராதவிதமாக ரயிலில் இருந்து கீழே விழுந்து விட்டார். நல்லவேளையாக சொற்பக் காயத்துடன் தப்பினார். இது பற்றி என் சித்தி பிள்ளை பேசும் போது, "அவரோட வேலை எப்படின்னா ஓடற ரயில்ல சர்வசாதாரணமா ஏறணும். இறங்கணும். அவர் நிக்கற ரயில்லேர்ந்து இறங்கிட்டார் போலிருக்கு; அதான் தடுமாறிக் கீழே விழுந்துட்டார்!" என்று கின்டலடிக்க, குடும்பமே 'கொல்'லென்று சிரித்தது!

- எஸ். மங்களம், கும்பகோணம்.

★ ★ ★ ★ ★

அவர்: உண்ணாவிரதத்தைத் தொடங்கு முன் தனக்குப் பூவினால் ஆன மாலைகளைப் போடக் கூடாதுன்னு தலைவர் கூறி விட்டாராம்.

இவர்: ஏன்? ரூபாய் நோட்டு மாலை வேணுமாமா?

அவர்: இல்லே. வடைமாலை போடணுமாம்.

- சிவகாமி, கடலூர்.

★ ★ ★ ★ ★

"நம்ம கட்சித் தலைவர் மேடையை விட்டு இறங்கித் தலைதெறிக்க ஓடுறாரே, ஏன்?"

சிரிக்க வையுங்கள்; சிங்கப்பூர் செல்லுங்கள்!

தலைவர் ஏன் தலைதெறிக்க ஓடுகிறார்?

''வேறே ஒன்னுமில்லை. 'உங்களைப் பார்க்கச் சுடிதார் போட்ட ஒரு பொண்ணு மாலையோட ஒரு மணி நேரமாக் காத்துக் கிட்டிருக்குன்னு' சொன்னேன். அவ்வளவுதான்!''
- எஸ். நாரம்பு நாதன், சுரண்டை.

★ ★ ★ ★ ★

மனைவி: ''காலையில் எழுந்ததும் எதற்காக ஒரு நிமிஷம் மௌனமாக நின்னீங்க?''
கணவன்: ''இன்னிக்கு நமக்கு 'வெட்டிங் டே'வாச்சே மறந்திட்டியா?''
- வி. கிருஷ்ணகுமார், சென்னை - 73.

★ ★ ★ ★ ★

''அந்த டாக்டர் ஏன் ஆபரேஷன் செய்யறதை ஆஸ்பத்திரியிலே செய்யாம வீட்லே வச்சுச் செய்யறாரு?''
''அவரு ஹவுஸ்சர்ஜனாமே!''
- இரா. கல்யாணசுந்தரம், மதுரை.

★ ★ ★ ★ ★

''ராமராஜ்யம் அமைக்கிறது உங்களோட கொள்கையா இருக்கலாம். அதுக்காக வில், அம்போட சட்ட சபைக்கு வர்றது கொஞ்சங்கூட நல்லாயில்லே...''
- ரமேஷ்ராம், சென்னை.

★ ★ ★ ★ ★

''ரயில்வே ஸ்டேஷனில் உங்கள் காதலன் உங்களை எந்த இடத்தில் நிற்க வைத்து விட்டு ஓடிப் போயிட்டார்?''
''அதோ 'கை கழுவும் இடம்'ன்னு எழுதியிருக்கே, அந்த இடத்தில்தாங்க!''
- எஸ். மங்கை, ஹைதராபாத்.

★ ★ ★ ★ ★

வட்டமேஜை

அந்தக் கனவைத் தலைவர்கள் காணவேண்டும்!

○ ''இவர்களுக்கு நாட்டை விட வோட்டு முக்கியமாகி விட்டது!'' என்ற இவ்வாரத் தலையங்கத்தின் கடைசி வரி, நெஞ்சில் ஊசியை வைத்துத் தைத்தது போன்ற வேதனையை ஏற் படுத்தியது! இன்றைய அரசியலின் ஒட்டு மொத்த உருவை, வெட்ட வெளிச்சமாக்கிய, துணிச்சலான தலையங்கம் எழுதியமைக்குப் பாராட்டுக்கள்!
சென்னை - 82, எஸ். யோகலிங்கம்.

○ காங்கிரஸில் திறமைமிக்க தலைவர்கள் பலர் இருப்பதுதான் பிரச்னை. யாரைத் தேர்ந் தெடுப்பது என்பதுதான் சிக்கலே தவிர, தலை யங்கத்தில் நீர் கூறியிருப்பது போல ஒன்றும் கட்டி தத்தளிக்கவில்லை!
அரவக்குறிச்சிப்பட்டி, எம். அசோக்ராஜா.

○ ''ராஜீவ்'' தலையங்கம் கண்டேன். 'அரசி யல் அனுபவமோ ஆர்வமோ நிறையும் இல்லாத சோனியா காந்தியை...' என எழுதியுள்ளீர்கள். இதையேதான் ராஜீவ் காந்தி தேர்ந்தெடுக் கப்பட்ட போதும் பத்திரிகைகள் பதறின. சரண் சிங்கும், வி. பி. சிங்கும் இழித்த இழிப்பை விட ராஜீவ் எவ்வளவோ மேல். அது போல் புதிய வர்களுக்கு வாய்ப்புக் கொடுத்தால் புதிய பாரதம் படைப்பார்கள்.
கல்லிடைக்குறிச்சி, திருவருள் லத்தீப்.

○ அமரர் ராஜீவ் பற்றிய புகைப்படத் தொகுப் பைப் பார்த்த போது, பொங்கி வந்த கண்ணீரை அடக்க முடியவில்லை. தேர்தல் தோல்வியி லிருந்து பாடம் கற்றுக் கனிந்து வந்து கொண்டி ருந்த நேரத்தில், அவருக்கு இப்படியொரு திடீர் முடிவா? காலம்தான் நம் மனப் புண்ணை ஆற்ற வேண்டும்!
கும்பகோணம், எஸ். மங்களம்.

○ அமரர் ராஜீவின் பாதுகாப்பில், 'கடமை யில் தவறியது யார்?' எனும் தலைப்பின் கீழ் தாங்கள் ஆய்வு செய்து எழுதிய கட்டுரை, அனை வரையும் நெகிழ்க வைத்து விட்டது. நாட்டு மக்கள் கேட்கும் கேள்வியையே தாங்கள் இக் கட்டுரையின் வாயிலாகக் கேட்டிருப்பது உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டிய விஷயம்!
ஈரோடு - 8, மேஜர் தாசன்.

○ இன்றைய தமிழ்ப்பட உலகின் நிறை, குறைகளை ''ஆத்தா உன் கோயிலிலே'' பட விமர்சனம் மூலம் நாசூக்காக வெளிப்படுத்தி யிருக்கும் பாங்கு பாராட்டுக்குரியது.
செங்குன்றம், கே. ரமேஷ்ராம்.

○ ''ஒரு பாமரனின் பகல் கனவு'' - கார்ட்டூன் பிரமாதம். புதுமையான, தேவையான கார்ட் டூன்தான். ராஜீவ் மறைவுக்குப் பிறகு, வன் முறையைக் குறைக்க, ஜாதி மதச் சண்டைகளை ஒழிக்க, நாட்டைக் காப்பாற்ற, இன்று உயி ருடன் உள்ள தலைவர்கள் - சபதம் ஏற்பது போல் பாமரன் கனவு காண்பது இருக்கட்டும், முதலில் ஓர் அரசியல் தலைவராவது இப்படி ஒரு கனவைக் காண்பாரா? தலைவர்கள் இப் படிக் கனவு கண்டால்தான் நாடு உருப்படும்.
சென்னை - 35, எஸ். வி. ராஜசேகர்.

○ ''மதிப்பிற்குரிய மனைவி'' - படித்தேன். மணவாளன் நிச்சயமாய் மறுமணம் செய்து கொள்ள மாட்டான் என்று அந்தப் புரபஸரைப் போலவே நானும் நம்பி ஏமாந்து போனேன்.
சென்னை - 24, ஆர். வேலுமணி.

○ ஒரே அலுவலகத்தில் பணிபுரியும் கணவன் - மனைவி அனுபவங்கள் வித்தியாசமாகவும் வேடிக்கையாகவும் இருந்தன. அதிலும் திரு மணம் ஆகியும் தமது தந்தையின் இனிஷிய லையே பெயரின் முன் போட்டுக், கொள்ளும் சாந்தா பாலு வித்தியாசமானவர்!
குத்தாலம், கோ. வெங்கடேசன்.

○ வங்கிகள் மற்றும் சில நிறுவனங்களில் ஒரே அலுவலகத்தில் தம்பதிகள் பணிபுரியக் கூடாது என்ற விதி இருப்பதால், கல்கி இத்த கைய தம்பதிகளைச் சல்லடை போட்டுத் தேட வேண்டியிருந்ததில் வியப்பொன்றுமில்லை!''
தூத்துக்குடி, எஸ். சம்பத்.

○ 'மதிப்பிற்குரிய மனைவி' மற்றும் 'பிரமைகள்' இரண்டும் சில கணவர்களின் உள் மனத்தை வெளிச்சம் போட்டுக் காட்டிய அற்புத மான சிறுகதைகள்.
மதுரை - 14, கமித்திரகுமாரன்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளி யிடுபவர் ஸ. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர்: ஸீதா ரவி. முகவரி: பிரஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை – 600 032. தொலைபேசி: ஆசிரியர் குழு அலுவலகம்: 2344145; சர்க்குலேஷன் மானேஜர்: 2344190; விளம்பரம் – சந்தா: 2344157; டைரக்டர்: 2341543.
ஆண்டுச் சந்தா – உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா – உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 150/-; விமானத் தபால்: ரூ. 350/-.

செரிலாக்

நாள் முழுவதும் அருந்திட சமநிலைச் சத்துணவு

மெனு

உங்கள் குழந்தைக்கு எப்போதும் செரிலாக் வீட் உணவின் நறுமணங்களை அளித்து வருகிறீர்கள். ஆனால் இப்போது உங்கள் குழந்தைக்கு 6 மாதங்களாகிவிட்டதால், குழந்தை உணவில் புதிய கலவைகளை அறிமுகப்படுத்த இதுவே ஏற்ற பருவம். குசிமிகுந்த, ஊட்டச் சத்துக்கள் சமநிலையிலுள்ள செரிலாக் உணவு வகைகளான-செரிலாக் வீட்-ஆஞ்சு, செரிலாக் வீட்-வெஜிடபிள், செரிலாக் வீட்-ஆப்பிள் -ஒவ்வொன்றும் உடல் வளர்சசிக்கு வேண்டிய முக்கிய ஊட்டச் சத்துக்களும், தாது பொருட்களும், வைட்டமின்களும் சரியான சமநிலையில் கலந்த முழுமையான உணவு உங்கள் குழந்தைக்கு பரவசமூட்டும் கலவைகளை வகைவகையாக அளிக்கும் ஏற்றதொரு மெனு. இரண்டு வயது வரையிலும், அதற்கு அப்புறமும் தொடர்ந்து தரக்கூடிய மெனு.

உதயவேளை உற்சாகத்திற்கு

காலைச் சிறுஉணவுக்கு, செரிலாக் வீட்-ஆஞ்சின் பழச் கலவை நற்பலன்களை உங்கள் குழந்தைக்கு கொடுக்கலாம். பொறுக்கி எடுக்கப்பட்ட ஆரஞ்சுக் கலவைகளை, கோதுமை மற்றும் பாலுடன் கலந்து சிறப்பாகத் தயாரிக்கப்பட்டது. உங்கள் குழந்தையின் நாள் சுறுசுறுப்பாகத் தொடங்கிட உதவும் முழுமையான உணவு.

மதிய உணவின் மனநிறைவு

மதிய உணவின்போது மற்ற எல்லாரையும் போல, உங்கள் குழந்தைக்குக் காய்கறிகள் தேவை. பசுமையான கேரட்டுகள் மற்றும் தக்காளியின் நறுமணங்களை கோதுமை மற்றும் பாலுடன் கலந்த செரிலாக் வீட்-வெஜிடபிள் உங்கள் குழந்தைக்குக் கிடைப்பதோ திருப்தியான மதிய உணவு.

அந்திவேளை ஆனந்தம்

நாள்முழுக்க விளையாடிக் களைத்த குழந்தைக்கு அந்தி வந்ததும் அருமையான விருந்து தேவை. சற்றே வித்தியாசமான உணவு கிடைத்தால் குழந்தைக்கு பரவசமாகும். இருக்கவே இருக்கிறது செரிலாக் வீட்-ஆப்பிள். ஆப்பிள் பழங்கள், பால் மற்றும் கோதுமையுடன் கலந்த அருஞ்சுவை கலவை. உங்கள் குழந்தைக்கு விதவிதமான விருந்து.

பெகுதலின் மீதுள்ள குறிப்புகளைப் பின்பற்றுக
செலவேயின தரமான தயாரிப்புகள்.

உங்கள் குழந்தைக்கு அளியுங்கள் செரிலாக் அனுகூலம்-ஒவ்வொரு வேளை உணவிலும்

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

மயக்கும் நறுமணம்!
நாளெல்லாம் கமழும்
மென்சுகம் — அதுவே
கோகுல் சாண்டால்!

கோகுல் சாண்டால்

ADWAVE/TSRI/4241